# வள்ளுவர் வணங்கிய கடவுள்



பல்கலைப் பேரறிஞர்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

# வள்ளுவர் வணங்கிய கடவுள்

பல்கலைப் பேரறிஞர்
தேசிய விருது பெற்ற பேராசிரியர்
**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**
**M.A., M.P.Ed., Ph.d. D.Litt. D.Ed. FUWAI**

ராஜ்மோகன் பதிப்பகம்,
8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை - 17 ☎ 4342232

# நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **வள்ளுவர் வணங்கிய கடவுள்** |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | வள்ளுவரின் வணக்கத்திற்குரிய கடவுள் யார் என்பது பற்றிய ஓர் ஆய்வு நூல் |
| ஆசிரியர் பெயர் | : | டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா |
| பதிப்பு | : | ஜூன் 1999 |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| அச்சு | : | 12 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 204 |
| நூல் கட்டுமானம் | : | அட்டைக் கட்டு |
| **விலை** | : | ரூ.40/ |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| வெளியிட்டோர் | : | ராஜ்மோகன் பதிப்பகம்,<br>8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,<br>தி.நகர் . சென்னை - 600 017.<br>☎ 4342232 |
| அச்சிட்டோர் | : | கிரேஸ் பிரிண்டர்ஸ்,<br>8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,<br>தி. நகர் , சென்னை- 600 017.<br>☎ 4332696 |

# முன்னுரை

**''அவனே புலவன் அவனே கவிஞன்**
**அவனே தமிழை அறிவோன்''**

என்று வள்ளுவரை வானளாவப் புகழ்ந்து பாடி மகிழ்ந்த ஒரு புலவனைப் போல, குறள் பாக்களைப் படிக்கும் போதெல்லாம், என் மனதுக்குள் ஏராளமான எண்ணங்கள் குலுங்கிக் கொண்டேயிருக்கும்.

பரிமேலழகர் உரை நூலைப் படிக்கும் போது, பதிப்புரைப் பகுதியில் வரையப்பட்ட ஒரு சில வரிகள், என் எண்ண ஓட்டங்களுக்கு மேலும் விரைவைக் கொடுத்தது.

''யாதாமொரு குறட்பாவுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை பொருத்தம் உடையது அன்று என்று ஆராய்ச்சியாளர்களின் அறிவிற்குப் புலப்பட்டால், அவ்வுரை எவ்வாறு பொருத்தமில்லை என்று, தக்க காரணங்காட்டி தமது கருத்தை அறிவிப்பதே உண்மையை அறியும் முறைமையாம். பரிமேலழகர் உரையை மறுக்கக் கூடாதென்று பிடிவாதமாய் கொள்ளும் கொள்கையானது மாண்புடைத்து அன்று'' என்று சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் பதிப்புரையைப் படித்ததும்,

பரிமேலழகர் உரை பொருத்தமானதல்ல என்றுசொல்லவோ, திருத்துதற்கு தகுதியாளன் நான் என்று முன்வரவோ இல்லை. என்னை சிந்திக்கத் தூண்டியதன் விளைவே, இந்த நூலை எழுத வைத்தது.

**வல்லமையால் சொல்லுக்குள் சொல்லை வைத்தே**
**வள்ளுவனும் மர்மத்தின் மர்மம் சொன்னான்.**

வல்லமையுடன் ஒரு சொல்லை சொல்லி விடலாம். அது

எளிது. ஆனால் சொல்லுக்குள்ளே பல சொற்களை வைக்கின்ற திறமை. ஒரே சொல்லின் உட்பொருளாக, ஆழ் பொருளாக, அடுக்கடுக்காக அர்த்தங்கள் வெளியாகும் படி சொல்லிய சொற்கள், வள்ளுவருக்கே உரிய மாண்புகள் ஆகும்.

அப்படிப்பட்ட சொற்கள் எல்லாம் வாழ்க்கையின் அதிசயத்தை மட்டுமல்ல, அற்புதங்களையும் வடித்துக் காட்டின.

அதற்கும் ஒரு படி மேலே சென்று வாழ்க்கையின் மர்மங்களை, முடிச்சிட்டுக் கிடக்கின்ற முரண்பாடுகளின் சூட்சமங்களையெல்லாம், உள்ளங்கை நெல்லிக்கனி போல வெளிப்படுத்தினான் என்கிற அந்த இரண்டு வரிகள் தான், என்னை மேலும் மேலும் சிந்திக்கத் தூண்டின.

உரையாசிரியர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் அந்தந்த கால வாழ்க்கை முறைக்கேற்ப, எழுதப்பட்டது என்று நான் கருதியதால், தமிழ்ச் சமுதாயத்தின் இன்றைய சூழ்நிலைகளை கருத்திற் கொண்டு என் உரை வெளியாகியிருக்கிறது.

**வள்ளுவர் வணங்கிய கடவுள்** என்று இந்த நூலுக்கு தலைப்பைத் தந்திருக்கிறேன்.

வள்ளுவர் எங்கள் மதத்தைச் சார்ந்தவர் என்பதற்காக, குறட்பாக்களையே வளைத்து இழுத்துப் போட்டு, விளக்கம் தந்து, அவரை எல்லா மதத்திற்கும் சொந்தக்காரர் என்று இழுத்துச் சென்ற உரையாசிரியர்கள் ஏராளம்.

கிறித்தவர், சமணர், புத்தர், இந்து என்றலெல்லாம், அவரது மதம் பற்றி பேசப்பட்டாலும், அவர் வணங்கிய கடவுள் பற்றி யாரும் கூறவில்லை. காரணம், அவர் சார்ந்திருக்கும் மதம் பற்றிக் கூறிய உடனேயே, அவர் வணங்கிய கடவுள் பெயரும் கூடவே வந்து விடுதகிறதல்லவா!

திருக்குறளில், முதல் அதிகாரமே கடவுள் வாழ்த்து.

வள்ளுவர் கடவுள் வாழ்த்து என்று பாடவே இல்லை.

கடவுள் வாழ்த்துக் கூறுகிறார் என்றும் பரிமேலழகர் விளக்கம் சொல்கிறார்.

வள்ளுவர் தான் எழுத முயன்ற இலக்கியத்தை, இனிதே முடிக்க கடவுளை வணங்கினார் என்றால், எந்தக் கடவுளை வணங்கினார்? அங்கே தான் அறிவாளர்களுக்குள் குழப்பம் ஆரம்பமாகிறது.

ஒவ்வொரு ஆசிரியரும், இதை தத்தம் சமய நூல் என்றும் வள்ளுவரைத் தத்தம் சமயத்தவர் என்றும் கூறுகிறார்கள் என்பது தான் குழப்பத்தின் உச்சக் கட்டமாக விளங்குகிறது.

கடவுள் வாழ்த்து என்பது தான் மனதார மதிக்கும் ஒருவரை பெருமையுடன் போற்றித் துதிக்கும் முறைக்கே கடவுள் வாழ்த்து என்று பெயர்.

வள்ளுவர் எந்தக் கடவுளை மதித்தார்? எந்தக் கடவுளை போற்றினார்? எந்தக் கடவுளை வணங்கினார்?

கடவுள் என்ற சொல்லுக்கு முதல் அர்த்தமே குரு என்பது தான். தெய்வம் என்பதும் ஒரு அர்த்தம்.

கடவுள் என்ற சொல் **கட+உள்** என்று பிரிகிறது.

உள்ளதையும், உள்ளத்தையும், இந்த உலகத்தையும் கடந்தவனைத்தான் கடவுள் என்ற சொல் விளக்கிக் கூறுகிறது.

கடவுள் என்ற சொல்லுக்குரிய பல பொருட்களையும் பாருங்கள்.

உள்ளத்துறைவோன், எண் குணத்தோன், ஐம்புலத்தடங்கான், முக்குற்றம் கடிந்தோன், முழுதொருங்குணர்ந்தோன் என பல பொருட்கள்.

மேலே கூறிய சொற்களெல்லாம், கடவுள் என்று அழைக்கப்படுகிற குருவையே குறித்துக் காட்டுகின்றன.

எங்கேயோ இருந்து கொண்டு, கண்ணுக்குத் தெரியாமல், காட்சி தராமல், பேசப்படுகின்ற பொருளாகவே விளங்குகிற

இது இடைச்செருகல் என்றார்கள் பலர்.

**கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை** எனும் மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவரால் இயற்றப்பட்டவை அல்ல. அவை வள்ளுவர் காலத்திற்குப் பிற்காலமும்; முந்தைய உரையாசிரியர்கள் காலத்திற்குப் பிற்காலமும் ஆகிய இடைக்காலத்துப் புலவர் ஒருவர், பாடிச் சேர்க்கப்பட்டவை என்று நான் கருதுகிறேன் என்று **வ. உ சிதம்பரம் பிள்ளை**, 1935 ஆம் ஆண்டு, தான் எழுதிய அறத்துப் பால் உரையின் முன்னுரையில் எழுதுகின்றார்.

மறுப்பைக் கூறினாலும், வெறுப்பைக் காட்டாது, கடவுள் வாழ்த்து அதிகாரத்திற்கும், அவர் தனது உரையை எழுதிச் சென்றிருக்கிறார்.

கடவுள் வாழ்த்து என்பதற்கு கடவுளை வாழ்த்துதல் என்று வ.உ.சி அவர்கள் பொருள் கண்டார்கள். கடவுள் என்பது ஒரு பெயரோ, ஓர் உருவோ பெறாது நிற்கும் மெய்ப்பொருள் என்றார்.

கடவுள் வாழ்த்து என்பதற்கு, பூமியைக் காத்தல் கருதிய வீரக்கழல் வேந்தன் கை கூப்பும் அரி, அயன், அரன் என்னும் மூவருள் ஒருவனை உயர்த்துச் சொல்லியது என, புறப்பொருள் வெண்பா மாலை கூறுகிறது என்று அபிதான சிந்தாமணி ஆசிரியர் ஆ.சிங்காரவேலு முதலியார் அவர்கள் கூறுகின்றார்கள்.

பரிமேலழகரும், கடவுள் வாழ்த்து என்பதற்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறையாகலின், இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொது படக் கூறினார் என்று உணர்க'' என்று விளக்கம் தருகிறார்.

பரிமேலழகர் கூறிய விளக்கத்தில் கவி தான் வழிபடு கடவுளையாதல், எடுத்துக் கொண்ட பொருட்டு, ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துல் என்கிறார். தான் எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடிதற் பொருட்டு,

கடவுள் என்று கூறாமல், தன் கண்முன்னே காட்சியளித்து, நடமாடி, நன்மைகளைக் கூறி, நன்மைகளைச் செய்து, மேன்மை நிலைக்கு உயர்த்தி விடுகிற குருவை தான் வள்ளுவர் வணங்கிப் போற்றியிருக்கிறார்.

இந்தக் கருத்தினைத்தான், கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் பத்துப் பாடல்களைத் தந்து, படிப்போரின் ஞானத்தை செம்மை படுத்திக் காட்டுகிறார்.

எப்படி அவர் வல்லமையுடன் சொல்லுக்குள் சொல்லை வைத்து, வாழ்க்கை மர்மத்தின் மர்மத்தை எப்படி விளக்கினார் என்பதையே எனது நூல் விளக்கிச் சொல்கிறது.

நுண்மையும் ஒண்மையும் நிறைந்த ஒரு கருத்தை, வாசகர்களுக்கு அலுப்பூட்டாத வண்ணம், எனது ஆய்வுக் கருத்துக்களை அழகுதமிழில், பழகு தமிழில், இனிய எளிய மொழியில் தந்திருக்கிறேன்.

இந்நூலைத்தொடர்ந்து, **குறளுக்குப் புதிய பொருள்** என்ற எனது உரை நூலும் வெளிவர இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல வாழ்க்கை வாழ்ந்திட நயமான துணையாக ஞானகுருவே விளங்குகிறார் என்பதை சுவைபடச் சொல்லுகிற இந்த நூலை, அழகுற அச்சிட்டுத்தந்த கிரேஸ் பிரிண்டர்ஸ்க்கு எனது நன்றி.

தமிழ் கூறும் நல்லுலகம் எனது நூல்களை யெல்லாம் ஏற்று, என் முயற்சிக்கு உதவி, வாழ்த்தியதைப் போல், இந்த அரிய நூலையும் ஏற்குமாறு வேண்டி, வணங்கி, உங்களிடம் வழங்குகிறேன்.

ஞானமலர் இல்லம்,
லில்லி பவனம்,
சென்னை - 17

அன்புடன்,

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா.**

# பொருளடக்கம்


1. எனக்குள் எழுந்த எழுச்சி
2. மனிதர்கள் மத்தியிலே
3. குருவும் திருவும்
4. எல்லாம் வல்ல பகவன்
5. அருகில் உலா வரும் ஆதவன்
6. மலரும் மாண்புகள்
7. துன்பம் கலவாத இன்பம்
8. பொருளும் புகழும்
9. வலிமையின் விந்தைகள் (வித்தைகள்)
10. கவலையை மாற்றும் கலை
11. ஞானமும் வலிமையும்
12. தலையாய தலை

# 1. எனக்குள் எழுந்த எழுச்சி!

வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள் என்ற ஒரு புத்தகத்தை எழுதுகிறபோது, எனது ஆய்வுக்காக ஆயிரம் முறையாவது, திருக்குறளைப் புரட்டி யிருப்பேன்.

திருக்குறளைப் புரட்டினேன், திருப்பினேன் என்று கூறியதற்குக் காரணம், ஒரு குறளைப் படித்து விட்டு, புத்தகத்தை மூடினால், முன்னர் நினைத்திருந்த பொருள் மாறி, மேலும் ஒரு வகை புது எழுச்சி என்னுள்ளே புகுந்து கொள்ளும்.

அதற்காக, குறட்பாக்களைத் திரும்பத் திரும்பப் படித்தேன். எண்ணத்தால், விரும்பி விரும்பிப் படித்தேன். ஐயங்கள் ததும்பத் ததும்பப் படித்தேன். அதன் பிறகும் ஊன்றிப் படித்தேன்.

ஆமாம்! படிக்குந் தோறும் புதுப் புதுச் சிந்தனைகளில் துடிக்க வைக்கின்ற சக்தி, ஒவ்வொரு

குறளுக்குள்ளும் இருந்தது. இருக்கிறது. இந்த உணர்வும் திணறலும், குறளைப் படித்த எல்லோருக்குமே இருந்திருக்கிறது. இன்னும் படிக்கப் போகின்ற எதிர்காலத்தினருக்கும் வரும்.

**"உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப**
**வள்ளுவர் வாய்மொழி மாட்டு"**

என்று செயலூர்க் கொடுஞ் செங்கண்ணார் என்ற புலவர் பாடியது, அவர் அனுபவித்துக் கூறியதற்குச் சான்றாகும்.

விளையாட்டுச் சிந்தனைகள் வள்ளுவருக்கு இருந்ததா என்பதை அறிந்து கொள்ளத்தான் ஆயிரம் முறைப் படித்தேன் என்று கூறியிருந்தேன்.

எனக்குக் கிடைத்ததோ ஏராளமான சிந்தனைகள். அத்துடன் என் மனம் அமைதி கொண்டு விட்டதா என்றால், அமைதியிழந்து ஆரவாரித்த வண்ணமே இருந்தது என்பதுதான் உண்மையான நிலவரமாகும். எந்த நூல் எழுத ஆரம்பித்தாலும், என்னுள்ளே ஆக்ரமித்துக் கொண்டு விட்ட வள்ளுவரும், எழுதித்தான் ஆக வேண்டும் என்று ஆணையிடுவது போல், அவ்வப் பொழுது பல புதிய, புதுமையான சிந்தனைகளைப் புரள விட்டுக் கொண்டே இருந்தார்.

விளையாட்டு நூல்கள் மட்டுமே எழுதத் தெரிந்தவன் என்று என் பெயருக்கு, ஒரு தனி முத்திரை குத்தி வைத்திருக்கிறது தமிழ்ச் சமுதாயம்.

விளையாட்டுக்கள் பற்றி எழுதுகிறேன் என்றால், அவை விளையாட்டு இலக்கியம். அதிலும் தமிழ் இலக்கியம். தமிழுக்குப் புதிய துறை விளையாட்டுத்

துறை என்பதை, அவர்கள் புரிந்து கொள்ளாதது தான் முதல் காரணம். முக்கிய காரணம்.

நீங்கள் புரிய வைத்திருக்கலோமே என்று நீங்கள் கேட்கலாம். நியாயம் தான். புரிய வைக்க முயன்றேன். அவர்கள் பக்கம் என் கருத்துக்களைப் போக வைக்கின்ற ஆற்றலும், திறமையும் எனக்குப் போதவில்லை. விளம்பரம் என்றாலே 'களம்பல' காணவேண்டும். எனக்கேற்பட்ட சூழ்நிலை அப்படி அமைய வில்லையே!

எழுதித்தான் ஆக வேண்டும் என்ற எரிதழலில் என்னை இருக்கச் செய்கின்ற, இருத்தி வைக்கின்ற **என் மதி**. வயிற்றுப் பிழைப்புக்காக நீ அலைந்து திரிந்து இலக்கியப் பணிகள் செய்வதுடன், செய்து முடித்த நூல்களை அலைந்து விற்க வேண்டியது கட்டாயம் என்று அலைக்கழித்த கதி, அதுதான் **என் விதி**.

இந்த மதிக்கும் விதிக்கும் இடையே, நான் ஊதப் பட்டப் பஞ்சாக, உதைபட்டப் பந்தாக, இரண்டு யானைகளின் மோதல்களுக்கு இடையே சிக்கிய கயிறாக, உயிர்ப் போராட்டம் செய்து கொண்டிருந்த காரணத்தால் தான், முத்திரை குத்தியவர்களின் மாய நித்திரையை, என்னால் கலைக்க முடியவில்லை.

விளையாட்டு என்பது, ஆட்டமும் ஓட்டமும் மட்டும் கலந்து உருவான செயல்கள் அல்ல. அவை பல விஞ்ஞானங்களின் கூட்டு, அறிவியல்களின் சேர்க்கை, ஆற்றல்களின் தொகுப்பு. வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பிரதிபலிப்பதாக விளங்குகின்ற வரைமுறையான தேர்ந்த செயல்கள், என்பதை என் நூல்கள் மூலமாக எழுதிக் காட்டினேன். அதாவது இலக்கியமாக.

எவ்வளவு தூரம் போனது? எத்தனை பேர்களைச் சேர்ந்தது? எப்படி அவர்களைப் பாதித்தது? போதித்தது என்னும் அளவு புரியவில்லை என்றாலும், என் எழுத்தில் ஏதோ இருக்கிறது. அது சமுதாயத்தின் எழுச்சிக்கு சங்கொலியாக ஒலிக்கிறது என்பதை மட்டும் அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

விளையாட்டுத் துறை பற்றி எழுதத் தொடங்கினால், வந்து விழுவது தமிழ் இலக்கியத் துறை மட்டுமல்ல. விஞ்ஞானத் துறைகளான வேதியல், பௌதிக இயல், உயிரியல், தத்துவத் துறையான உளவியல், தத்துவ இயல், உடல்துறையான உடல் அமைப்பு நூல், உடல் இயக்க நூல், உடல் இயக்கப் பயிற்சி நூல் என்று ஏராளமான அறிவியல் துறைகள்.

இப்படியாக வாழ்க்கைத் துறைகள் அனைத்தும் வந்து வழிபாடு செய்கின்ற துறையாக, விளையாட்டுத் துறை விளங்கி வருவதால், விளையாட்டுத்துறை பற்றி, வியந்து மகிழ்ந்து எழுதி வரும் எனக்கு, எல்லாத் துறையும் ஏற்ற துறைதான் என்ற உண்மை புரிந்தது.

விளையாட்டுக்களை ஆடுபவர்கள், சமுதாயத்தில் அனைத்து நிலைகளிலும் உள்ளவர்களை விட, ஆற்றல் மிக்கவர்கள். பலரும் போற்றுதற்குரிய திறமை நிறைந்தவர்கள், வணங்குதற்குரிய வலிமை கொண்டவர்கள். நுணுக்கச் செயல்களும், நுண்மாண் நுழைபுலமும் கொண்டவர்கள் என்பதெல்லாம், உலகம் ஏற்றுக் கொண்ட உண்மையாகும்.

விளையாட்டாளர்களுக்கு, வலிமையும் திறமையும் சேர்ப்பது அதில் பெறுகின்ற

பயிற்சிகளும், முயற்சிகளும் மட்டுமல்ல. அவர்களை வளர்த்து, வளர் திறமைகளில் களம் புகச் செய்ய வைக்கும் பெருமையானது, பிராண வாயுவை சுவாசிக்கும் பேராற்றலால் தான்.

பிரணனாக விளங்கும் பிராண வாயுவை, அளவுக்கு மேல் சேர்த்து, அடக்கி வைத்து , ஆட்சி செய்கின்ற ஆற்றல் கொண்டவர்களால் தான், இந்த அகிலத்தில் அரும் பெரும் காரியங்களை ஆற்ற முடிகிறது என்பது, பெரியோர்கள் போற்றி ஏற்றுக் கொண்ட உண்மைக் கருத்தாகும்.

விளையாட்டுக்களில் மட்டுமல்ல. வாழ்க்கை யிலும் பல மேன்மைகளையும் மேம்பாடுகளையும் காண, கை கொடுத்து உதவுவதுடன், கைதூக்கி உதவுவதும் பிராணாயாமம் தான்.

இப்படிப்பட்ட பிரணாயாமத்தின் பேராற்றலை பெரிது படுத்தி, அரிது அரிது இதைப் பின்பற்றல் அரிது என்று பலர் பேசிப் பேசி, அரண்டு மிரண்டு போயிருக்கின்ற காரியங்களை எல்லாம் அரிதாக செய்து முடித்து செய்தற்கரிய செயல்களைச் செய்த பலர் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். நாளையும் இருப்பார்கள்.

காரணம், உள்ளே இழுக்கின்ற சுவாசம் தான் உயிர்ப்பாகி, உணர்வாகி, உந்திக் கமலத்திலிருந்து சிந்துவாகி, கங்கையாகி, களிப்பினையும், மலர்ச்சி யையும், எழுச்சியையும் அளிக்கிறது.

அதையே உயிராக மதித்து, இரவு பகலாய் துதித்து, இடர்படுத்துகின்ற புலன்களை மதித்து, மூண்டெழச் செய்யும் முயற்சியில் வெற்றி பெற்று,

உள்ளம் உருக்க, வள்ளுவர் பாடினார். அந்தணர்கள் பாட மறுத்த, பாடாமல் மறைத்த வேதக் கருத்துக்களையெல்லாம் உலக வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார், வித்தகர் வள்ளுவர்.

அக்கால அந்தணரின் இந்த அடாத செயலுக்கு தன் எதிர்ப்பைக் காட்ட, அவர்களின் அறிவு குறுகிய மனப்பான்மையை வெளிப்படுத்திற் காட்ட, சமுதாய நோக்கற்ற சண்டாளர்கள் என்பதை தோலுரித்துக் காட்ட, வள்ளுவர், மிக மென்மையாகவே பாடி, அந்தணர் யார் என்பதை விளக்கிக் காட்டினார்.

**''அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்''** (30)

அந்தணர் என்றால் அந்தத்தையும் (அதாவது முடிவையும், உணர்ந்தவர், வேதாந்தத்தில் விழுமிய ஞானத்தையும் பெற்றவர், அறவோர், பார்ப்போர் ஐயர், ஆய்ந்தோர், உயர்ந்தோர் என்றெல்லாம் இச்சொல்லுக்குப் பொருள் உண்டு.

அறவோர் என்றால், விருப்பு வெறுப்பின்றி, எதிலும் ஈடுபாடில்லாமல், சகலரையும் சரிசமமாகப் பார்க்கின்ற, பாவிக்கின்ற பண்பாளர்கள். ஆமாம் பற்றற்ற துறவிகள் என்று அர்த்தம்.

அதனால் தான் அந்தணரை அறவோர் என்றார். அந்தணர்க்கு இருக்க வேண்டிய அருமையான பண்பு செந்தண்மை என்றார்.

செந்தண்மை என்றால், செம்மை மிகுந்த எளிமை, குளிர்ச்சி, சாந்தம், மென்மை, கருணை என்றெல்லாம் பொருள் உண்டு.

உள்ளம் உருக்க, வள்ளுவர் பாடினார். அந்தணர்கள் பாட மறுத்த, பாடாமல் மறைத்த வேதக் கருத்துக்களையெல்லாம் உலக வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார், வித்தகர் வள்ளுவர்.

அக்கால அந்தணரின் இந்த அடாத செயலுக்கு தன் எதிர்ப்பைக் காட்ட, அவர்களின் அறிவு குறுகிய மனப்பான்மையை வெளிப்படுத்திற் காட்ட, சமுதாய நோக்கற்ற சண்டாளர்கள் என்பதை தோலுரித்துக் காட்ட, வள்ளுவர், மிக மென்மையாகவே பாடி, அந்தணர் யார் என்பதை விளக்கிக் காட்டினார்.

**''அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''** **(30)**

அந்தணர் என்றால் அந்தத்தையும் (அதாவது முடிவையும், உணர்ந்தவர், வேதாந்தத்தில் விழுமிய ஞானத்தையும் பெற்றவர், அறவோர், பார்ப்போர் ஐயர், ஆய்ந்தோர், உயர்ந்தோர் என்றெல்லாம் இச்சொல்லுக்குப் பொருள் உண்டு.

அறவோர் என்றால், விருப்பு வெறுப்பின்றி, எதிலும் ஈடுபாடில்லாமல், சகலரையும் சரிசமமாகப் பார்க்கின்ற, பாவிக்கின்ற பண்பாளர்கள். ஆமாம் பற்றற்ற துறவிகள் என்று அர்த்தம்.

அதனால் தான் அந்தணரை அறவோர் என்றார். அந்தணர்க்கு இருக்க வேண்டிய அருமையான பண்பு செந்தண்மை என்றார்.

செந்தண்மை என்றால், செம்மை மிகுந்த எளிமை, குளிர்ச்சி, சாந்தம், மென்மை, கருணை என்றெல்லாம் பொருள் உண்டு.

சமுதாய மக்களின் மேல் அவர்களுக்கு, என்றும் கருணை இருந்து, அவர்களை நல்வழிப் படுத்தி, நலமாக வாழச் செய்து, நாளும் வழி நடத்துவதாக வாழ்வாரே அறவோர் என்றார்.

எப்பொழுதும் பிறர் நலன்களை, சுகங்களை சிறிதும் பிறழ்ந்து போகாமல் பார்த்துப் பார்த்துப் பண்புடன் பணியாற்றுபவர்களையே பார்ப்பார் என்று கூறுவார். அதுதான் பிறகு பார்ப்பார் என்று ஆயிற்று.

***பார்ப்பார், ஐயர் மற்றும் அந்தணர்*** என்ற இந்தச் சொல்லுக்கு அர்த்தம் உண்டு என்பது நமக்குத் தெரியும்.

'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்று பாரதியார் பாடினார். ஏன் அப்படிப் பாடினார், எதற்குப் பாடினார் என்று, இங்கே விளக்கப் போவதில்லை.

அவர் கூறிய வரிகளுக்கு ஒரு சிறு அர்த்தத்தை மட்டும் பார்ப்போம். பார்ப்பான், ஐயன் என்று இரு சொற்களிடையே, அவை சாதியைக் குறிக்கும் சொல்லாக இப்போது மாறிப்போனது நமக்குத் தெரியும்.

பார்ப்பார் என்பவர், முக்காலத்தையும் பார்ப்பார் என்பதாக இருந்தவர். அத்தகைய அரிய சமுதாயப் பணியில் அவர்கள் ஈடுபட்டிருந்ததால், அவர்களை ஐயர் என்றனர். ஐ+அர் என்று இந்தச் சொல் பிரிகிறது.

**ஐ** என்றால் உயர்ந்த என்று அர்த்தம். ஐயர் என்றால் உயர்ந்தவர். உலக மக்களுக்கும் மேலான

உயர்நிலையை வகிப்பவர். இப்பொழுது புரியும் ஏன் பாரதியார் அப்படிப் பாடினார் என்று.

வேதம் என்றால் அறிவு என்று அர்த்தம்.

வேதம் என்ற சொல், வித் என்று வேர்ச் சொல்லில் இருந்து பிறந்தது. **வித்** என்றால் அறிதல் என்று பொருள். வேதம் என்றால் அறிவு, ஞானம் என்றும், சுருதி என்றும் கூறுவார்கள். அவற்றின் விளக்கங்களைப் பாருங்கள்.

அறிவுக்கு எட்டாத உண்மைகளை உணர்த்துவது **வேதம்.**

உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களை, மக்களுக்கு மறைமுகமாக உணர்த்துவது **மறை.**

எழுதிப் படிக்கப் படாமல், காதால் கேட்டு, பயிலப் பட்டது **சுருதி**. இது செவி வழிப் பாடமாக அமைவதால் எழுதாக் கிளவி என்றும் சொல்வார்கள் .

இப்படிப்பட்ட, வாழ்க்கைக்கு வழிகாட்டுகிற, மக்களை மக்களாக, மனிதர்களாக வாழச் செய்கிற அறிவுக் கருத்துக்களை அந்தணர்கள் ஏட்டில் எழுதித் தராமல் இருந்ததை எல்லாம், எளிதாகப் புரியும் வண்ணம் வள்ளுவர் ஏட்டில் எழுதினார். பாட்டில் எழுதினார். இதை ஒரு தமிழ் வேதமாக மக்களுக்குக் காட்டினார். தமிழன்னைக்கு தனிப் பெரும் மகுடமாகக் குறளை சூட்டினார்.

இந்தக் கருத்துக்கள் என்னை எப்படி பாதித்தன? என்னென்ன போதித்தன? எவ்வாறு போதித்தன என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாம்.

**"நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான் முகத்தோன்**
**தான்மறைந்து வள்ளுவனாய் தந்துரைத்த - நூன்முறையை**
**வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக நன்னெஞ்சம்**
**சிந்திக்க கேட்க செவி'' (உக்கிரப் பெருவழுதியார்)**

*(திருவள்ளுவமாலை பாடல் 4)*

நான்கு வேதங்களின் உண்மையான மெய்ப் பொருளை, நான் முகனான பரமன், மறு உருவாய் வள்ளுவனாக மாறி, மண்ணுலகில் பிறந்து வந்துரைத்த வேதநூல்தான் குறள் என்கிறார் அவர். அதை சிரம் தாழ்த்தி வணங்கி, செவியால் கேட்டு, வாயால் வாழ்த்துக என்று மட்டும் கூறாமல், **நன்னெஞ்சம் சிந்திக்க** என்று இரண்டு சொற்களை அவர் பெய்திருக்கிறார்.

நன்னெஞ்சம் சிந்திக்க வேண்டும் என்றால் அதன் நயத்தைத் துய்த்து, சிந்தை மகிழ வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல.

**''எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன் பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையேல்''**

- மதுரைத் தமிழ் நாகனார் -

*(திருவள்ளுவமாலை பாடல் 29)*

நன்னெஞ்சம் சிந்திக்க, சிந்திக்க, பலப்பல புதுப்புது பொருட்களை எண்ணம் சந்திக்கும். புலன்கள் எல்லாம் வந்திக்கும் என்று, படிப்போரைத் தூண்டவே, அப்படிப் பாடினார்.

யார் என்ன நினைத்து, இதைப்

பயில்கிறார்களோ, அவர்களுக்கு அதாகவே அறிவுறுத்த, ஆவேசப்பட்ட ஆசைகளைத் தணிக்க, அருமையான கருத்துக்களைப் புதுப்பித்துக் கொள்ள, குறள்கள் இருக்கின்றன. உதவுகின்ற அளவில் உய்யும் வழிகளைக் காட்டு கின்றன.

**''உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டு''**

என்று செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார் இப்படிப்பாடுகிறார்.

**''வேதப் பொருளை விரகால் விரித்து உலகோர் ஓதத் தமிழில் உரை செய்தார்.** ஆதலால்

**''உள்ளுவர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப**
**வள்ளுவர் வாய்மொழி மாட்டு''**

(திருவள்ளுவ மாலை பாடல் 42)

**விரகு** என்ற வார்த்தைக்கு தந்திரம், சாமார்த்தியம், புத்தி என்று அர்த்தங்கள் உண்டு.

மறைந்து கிடக்கும் வேதத்தின் தத்துவப் பொருட்களை எல்லாம், உலக மக்கள் கற்றுத் தெளிய, தமிழ் மொழியில் சாமார்த்தியமாக, புத்திக் கூர்மையுடன் என்று நாம் அறிகிறபோது, வள்ளுவர் திருவள்ளுவர் ஆகிறார். **திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்** என்று அவரைப் பற்றி அசரீரீ பாடுகின்றது என்று போற்றுவோரும் உண்டு.

**தேவில் சிறந்த திருவள்ளுவர் குறள் வெண்பா** என்று உறையூர் முது கூற்றனார் பாடுகின்றார். தேவில் என்றால் தேவாலயம் என்பது பொருள்.

பொய்யாமொழியார் என்று போற்றப்பட்டு,

தெய்வப்புலவர் என்று எல்லோராலும் தொழுதேத்தப் பட்ட திருவள்ளுவரைப் பற்றி, ஒரு புலவன் இப்படிப் பாடியிருக்கிறான். அதாவது வள்ளுவனையே நினைந்து நினைந்து, தன்னையே இழந்து தன் பெயரையும் மறந்து போனான். அவன் பாடியதற்கு மேலாக, வள்ளுவனுக்கு வேறொரு புகழாரமும் தேவையில்லையே! பாட்டைப் படியுங்கள்.

**"அவனே புலவன் அவனே கவிஞன்**
**அவனே தமிழை அறிவோன் - சிவனறிய**
**வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக**
**உள்ளுவ தேவன் உளன் "**

*(அபிதான சிந்தாமணி பக்கம் 850)*

மறை இனங்கள், மறை யாகமங்கள், மனுநீதி மன்னர் மன்பதைகள் முதலியவற்றை, மனித குலத்திற்காகப் பாடிய வள்ளுவர், மக்களிடம் எதை எதிர்பார்த்தார்?

புகழையா? பொருளையா? பூரிக்க வைக்கும் அதிகாரத்தையா? அல்ல அல்ல.

எல்லா மனிதர்களுக்கும் ஏதேதோ வானுரையும் தெய்வத்தை மக்கள் வடிவமாக மாற்றிச் சொல்லி மண்ணுலகத்திற்கு கீழிறங்கிக் கொண்டு வந்தார்கள் பலர். வள்ளுவரோ, மனிதர்களை தெய்வத்திற்கு இணையாக தூக்கி உயர்த்தி வைத்தார். அதற்காகத்தான் மனிதர்களை தெய்வமாக்கும் மார்க்கங்களைக் வசீகரமாக்க கூறினார்.

# 2. மனிதர்கள் மத்தியிலே!

அகிலத்தில் தோன்றிய அத்தனை உயிரினங்களிலும் அழகான தோற்றம். அறிவான ஏற்றம். அறிந்து தெரிந்து செயல்படுகின்ற ஊக்கம், நோக்கம் கொண்டு சீரும் சிறப்பும் பெற்று முன்னோக்கி வாழ முயன்று வருவது மனித இனம்.

அத்தனை உயிரினங்களிலும் நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற உயிரினங்களை, **ஜந்துக்கள்** என்றனர். ஐந்தறிவும் அதற்கு உட்பட்டும் அமைந்திருந்த காரணத்தால் அவற்றை **அஃறிணை** என்றனர்.

ஆறாவது அறிவான பகுத்தறிவை மனிதர்கள் பெற்றிருந்ததால், அவர்களை **உயர்திணை** என்றனர்.

சிரிக்கத் தெரிந்த, சிந்திக்க முடிந்த, பேசப் புரிந்த, வடிவான உடலமைப்புடன், சிறப்பான பிறப்பால் உயர்ந்திருக்கும் மனிதர்கள், உயர்திணை தானே!

சிரிக்கத் தெரிந்ததால், பசப்பவும்; சிந்திக்க

முடிந்ததால் வஞ்சகமும்; பேசத்தெரிந்ததால் குழப்பமும் விளைவிக்கும் கொடூர குணமும் கொண்டவர்களாக, மனிதர்கள் மாறி விடுவார்கள் என்பதால் தான், இவர்களுக்குப் பெயர் வைக்கிற போதே, மனிதர்கள் என்று நமது முன்னோர்கள் பெயர் வைத்தனர் போலும்.

உலகம் என்பதற்கே மக்கள் தொகை என்று அர்த்தம். மக்கள் எல்லாம் மனித இனம் தானே. அந்த மனிதன் என்ற வார்த்தைக்குள், எத்தனை ஆழமான அழுத்தமான பொருட்களைப் புகுத்தி வைத்திருக்கிறார்கள் பாருங்கள்.

**மனிதன்** என்ற சொல்லைப் பிரித்துப் பார்ப்போம்.

***மன் :மதன் :நிதன் :தமன் :தனிமன் :தனி :தன்***

*என்று நாம் பிரிக்கும் ஏழு சொற்களிலும், எவ்வளவு கம்பீரமான கருத்துக்கள் கலந்துறைந்து கிடக்கின்றன பாருங்கள்.*

**மன்** என்றால் நிலைத்திருக்கிற என்று பொருள்.

**மன்** என்றால் நினைப்பவன் என்றும் அர்த்தம்.

***மதன்*** என்றால், அழகானவன், மன்மதன் என்று அர்த்தம்.

***நிதன்*** என்றால், எப்பொழுதும், நிதமும், அப்படியே இறுதி வரை வாழ்ந்து வருகிறவன் என்று அர்த்தம்.

***தமன்*** என்றால், நம்மவன், உற்றான் என்று அர்த்தம்.

***தமனி*** என்றால் தீ போன்றவன், வேலி போன்றவன்,

***தனிமன்*** என்றால் தனியே நிலைத்து நிற்பவன்.

***தன்*** என்றால் ஒப்பில்லாதவன், கலப்பில்லாதவன், சுத்தமானவன் என்றெல்லாம் அர்த்தங்கள் இருக்கின்றன.

இப்போது, மனிதன் என்ற சொல்லை உச்சரித்துப் பாருங்கள். அதன் மகிமை, மேன்மை, மரியாதை மகத்துவம் எல்லாம் புரியும். மேலும் சிந்தித்தாலும் விரியும்.

மனித இனம் ஒரு ஒப்பற்ற இனம், உலகை ஆள வந்த உன்னத இனம். வாழ்க்கையை சுவைக்க வந்த வலிமை மிக்க இனம். எல்லா சக்திகளையும் பெறக்கூடிய ஏற்றம் நிறைந்த இனம் என்பது இப்போது எளிதாக விளங்குகிறதல்லவா!

இப்படிப்பட்ட மனிதர்களை எழுத வந்த அறிஞர்கள், ஆகா! ஓகோ! என்று புகழ்ந்து விட்டுப் போய் விடவில்லை.

கற்களிலே பல வகை. புற்களிலே பல வகை. முட்களிலே பல வகை என்பது போல மனிதர்களையும் பல வகையாய் பிரித்துப் பார்த்தார்கள். உரித்துப் பார்த்தார்கள்.

பார்க்கும் போது பாலும் கள்ளும் ஒன்றாகத் தெரிவதுபோல; உப்பும் கற்பூரமும் ஒன்றாகத் தெரிவதுபோல; எருமையும் யானையும் ஒரு நிறமாகத் தெரிவது போல; கழுதைக் குட்டியும் குதிரைக் குட்டியாகத் தெரியவது போல, மக்களாக உருவம்

எடுத்திருப்பவர்க்குள்ளே, எத்தனை எத்தனை பிரிவுகள், செறிவுகள் சேர்ந்தும் சிதைந்தும் கிடக்கின்றன என்பதையும் தெளிவு படுத்திக் காட்டினார்கள்.

மனிதர்களின் பண்பையும், மாண்பையும் கொஞ்சம் திறந்து பார்ப்போம்.

***மாக்கள்; மக்கள்; அறிஞர்; சான்றோர்; உயர்ந்தோர்; அமரர்; குரு; தேவர்***

இப்படி ஏழு வகையாக மனிதர்களைப் பிரித்துப் பார்க்கலாம்.

உருவத்தில் தான் மனிதர்களே தவிர, உள்ளத்தில் , செயல்களில் அவர்கள் தரம் எப்படி தடுமாறிப் போய் கிடக்கிறது என்பதையும் கொஞ்சம் விளக்கமாகப் பார்ப்போம்.

***1. மாக்கள்*** என்றால் அஃறிணையான மிருகங் களைத்தான் குறிக்கும். மனிதர்களில் பலர் மாடு போல, எருமைபோல வாழ்வதை, நாம் தினம் தினம் சந்தித்துக் கொண்டுதானே இருக்கிறோம்.

தானே சிந்திக்காமல், சொன்னால் செய்வது, ஏவலுக்குப் பணிவது, வெந்ததைத் தின்பது, விதி வந்தால் சாவது என்று சொல்லுகிற கிராம மொழி போல, பிறந்ததற்காக வாழ்கிறவர்கள். இவர்களால் மக்கள் தொகை கணக்கு அதிகமாகிறது என்பதைத் தவிர, மற்ற எந்த மகத்துவமும் ஏற்பட்டு விடுவதில்லை.

***2. மக்கள்*** என்பவர்கள் ஆறறிவு உள்ளவர்கள். அதாவது சராசரி மனிதர்கள். நினைத்து, சிந்தித்து,

நியாயங்கள் அநியாயங்கள் தெரிந்து, ஆரவாரத்துடன் இல்லாது அடிமைத் தனத்துடன் அன்றாட வாழ்வினை அறிவோடு நடத்திச் செல்பவர்கள்; கொஞ்சம் தெளிவானவர்கள். தேர்ந்தவர்கள் சராசரி மனிதர்கள்.

***3. அறிஞர்கள்*** என்பவர்கள் அறிவுடையவர்கள். புலமை நிறைந்தவர்கள். மனோ வேகத்திற்கும், யூகத்திற்கும், விவேகத்திற்கும் ஈடு கொடுத்து பணியாற்றி, இன்பமடைபவர்கள். அதாவது அறியும் பண்பாற்றலில், ஆதிக்கம் செலுத்தும் அறிவாளர்கள். அதாவது, உணர்தல், நினைத்தல், மதித்தல், அனுபவித்தல், பயிலுதல், எதையும் முடிவு காண நிச்சயித்தல் , முனைதல், தெரிதல், தெளிதல் எல்லாவற்றிலும் தேர்ந்தவர்கள்.

அறிவு என்பதற்கு ஆங்கிலத்தில் Knowledge என்று கூறுவார்கள்.

Know என்பதற்கு அறிதல் என்றும், Ledge என்பதற்கு அடுக்குதல் என்றும் அர்த்தமாகும். படித்தும் பட்டனுபவத்தாலும் அப்படியே உணர்வுகளை அடுக்கிக் கொண்டே போகும் போது, சேர்த்துக் கொண்டே செல்லும் போது, அதில் உணர்வு செறிவு நிறைய உண்டாகிறது. அறிவாக ஒளிர்கிறது. ஆகவே, அறிவு பூர்வமாக உயர்ந்தவர்களை, அறிஞர்கள் என்று கூறுகின்றோம். அறிஞர்களை ***அறிவர்கள்*** என்றும் கூறுவார்கள்.

***4. சான்றோர்கள்*** என்பவர்கள், கல்வி கேள்விகளில் சிறந்து, அன்பு பண்புகளில் மேலோங்கி, ஒழுக்கம் பழக்கங்களில் மேம்பட்டு, மற்றவர்களுக்கு, மனிதர் என்றால்இப்படியல்லவா இருக்க வேண்டும் என்று உதாரண புருஷராக;சாட்சியாகத் திகழும்

சன்மார்க்க சீலராக வாழ்பவரைத் தான், சான்றோர்கள் என்கிறார்கள்.

***சான்று+ஓர்*** என்ற இரு சொற்களும் சான்றோராக உருவாகி யிருக்கிறது. **ஓர்** என்றால் ஒப்பற்ற **சான்று** என்றால் சாட்சி; மனித இனத்தின் மகிமை மிக்க மனிதர் என்று பாராட்டப் படுகின்ற நிலை. இது, மனித வாழ்க்கையின் நான்காவது நிலை.

5. ***உயர்ந்தோர்*** என்பவர்கள், தண்ணீரில் அலை போல, தரையில் மலை போல, உயர்ந்து காணப்படு பவர்கள். கற்களில் சிலை போல, பண்பட்டவர்கள். பயன்படுபவர்கள். உயர்ந்தோர் என்பவர்கள் அந்தணர்கள், பெரியோர்கள், பார்ப்பார்கள்.

செந்தண்மையும், செய்யும் தொழில்களில் நன்மையும், சொல்லில் உண்மையும் கொண்டு, உயிர்களுக்கு உதவுகின்ற பண்பாளர்கள் அந்தணர்கள்.

தங்களை மட்டும் நினைக்காமல், இந்தத் தரணியில் வாழ்கிற மக்களைப் பற்றியும், முக்காலத் தையும் பார்க்கிறவர்கள் பார்ப்போர்கள். இது சாதியால் வந்த பெயர்கள் அல்ல. சக்தியும் சாதனை யும் படைக்கின்ற பெரியோர்களுக்கு உரிய விளக்கம்.

வாழ்கின்ற மக்களிடையே அறிஞராக இருந்து, சான்றோராகத் திகழ்ந்து, உயர்ந்தோராக வெளிப்படு கின்ற பெருமை கொண்டவர்களைத் தான், உயர்ந்தோர் என்கிறோம்.

6. ***அமரர்கள்*** என்றால் நமக்கு உடனே நினைவுக்கு வருவது இறந்து போனவர்களைப் பற்றித்தான். ஒரு குடும்பத்தில் ஒருவர் இருக்கும் வரை மனிதராக வாழ்கிறார். இறந்துபோன பிறகு,

அப்பொழுதே அவர் அமரராகிவிடுகிறார்.

தமிழ் நாட்டில் தவறுதலாகிப் போன சொற்களில், இந்த அமரர் என்ற சொல்லும் ஒன்று.

அமரர் என்றால் வானவர் என்பது பொதுவான அர்த்தம்.

*அமர்+அர்* என்று பிரிக்கப்படும் இந்தச் சொற்களுக்கு, மனதிலே அமர்ந்திருப்பவர் என்பது அர்த்தம்.

செயற்கரிய செய்பவர் பெரியர் என்றாரே வள்ளுவர். அதுபோல, பல புகழ்மிக்க காரியங்களைச் செய்து, புனிதராக விளங்கி, மக்கள் மனதிலே, நீக்கமற நிறைந்து, நெஞ்சத்தில் நிலையாக அமர்ந்து விடுவோரைத் தான் *அமரர்* என்றனர்.

அதாவது, மக்கள் குலத்தில் ஒருவராக, இந்த மன்பதையில் வாழ்ந்து வருகிற வரை, மக்களின் மனதிலே, மாறாத, மறையாத ஒரு இடத்தைப் பிடித்து, புகழுடன் வாழ்பவர் என்பதுதான் அர்த்தம்.

அதாவது, அத்தகைய அருமையானவர், இறந்து போனாலும் அழிந்து போகாமல் வாழ்ந்து வருகிறார் என்பதே அர்த்தம்.

இதையேதான் வடமொழியும், வளமாகப் பேசுகிறது.

*மர்கயா* என்றால் மரணமடைந்து போனதைக் குறிக்கும் .

*மர்* என்றால் மரணம்.

அதற்கு எதிர்ப்பதமாக இருப்பது ***அமர்.***

அமர் என்றால் மரணமில்லாதது. ஆமாம், மரணமில்லாப் பெருவாழ்வு என்பதைத்தான் அமரர் என்ற சொல், சுகமாகச் சொல்கிறது.

அவன் இறந்து போனான். ஆனாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று பேசுவது இப்படி யாகத்தான்.

ஆக, அமரர் என்றால் இதுதான் உண்மையான அர்த்தம். உயிர் வாழும் காலத்திலேயே, உண்மை யாகவே பல பெரிய காரியங்களைச் செய்து, பெருமையோடு மக்கள் மனதிலே அமர்ந்திருப்பவர் என்பது தான்.

இப்படி மக்கள் போற்றி, தங்கள் மனக்கோயில் களில் பீடம் அமைத்து போற்றிப் புகழ்கின்ற அமரத் தன்மைக்கு மேலான வருகிற ஏழாம் நிலைதான். ***தேவர்கள்*** என்பதாகும்.

7. (குரு) ***தேவர்கள்*** என்றால் வானவர்கள் அல்லர். மேலோர்கள் என்று அழைக்கப்படுபவர்கள். முற்றுந் துறந்த முனிவர்களிலே பற்றற்ற தன்மையால், புலன்களை வென்று, எவரும் இணையென்று சொல்ல முடியாத இறைத்தன்மையைப் பெற்றவர்கள்.

தவத்தாற்றல் மிக்க துறவியர் பலருக்கு, பெயரின் பின்னால் வழங்குகின்ற சிறப்புப் பெயராக தேவர் என்ற பெயர் அமைந்திருந்தது. பல உதாரணங்களால் இதை நாம் அறியலாம்.சீவக சிந்தாமணி என்ற காப்பியத்தை இயற்றிய சைவ முனிவர் திருத்தக்கர். அவருக்குத் திருத்தக்கத் தேவர் என்பதும்,

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்கு, திருவள்ளுவத் தேவர் என்பதும், போன்ற பல குறிப்புக்கள். இந்த உண்மையை நமக்கு தெளிவாக உயர்த்துகின்றன.

தேவன் என்பதற்கு ஆசான் என்றால், கடவுள் என்றும் குரு என்றும் ஓர் அர்த்தம் உண்டு.

மனிதர்களில் தேவர் நிலை என்பது, உயிருடன் வாழுங்காலத்திலேயே, தெய்வங்கள் பெறுகின்ற பூசை, துதி, வழிபாடு, வணக்கம் இவற்றைப் பெறுகின்ற பேறு பெற்றவர்களைத் தான் தேவர் என்றனர்.

தமிழ் மன்னர்களில் சிலர், கோயில் கட்டப்பட்டு, தெய்வ நிலை பெற்றதும் உண்டு.

கோயில் என்பதற்கு அரசன் வாழ்கின்ற இடம் என்ற அர்த்தமும் உண்டு.

நம் காலத்தில் நடிகைக்கும் கோயில் கட்டுகின்றார்கள் என்பீர்கள். கோயில் என்பது சாலை யோரத்தில் உருவாக்கப் படுகிற செங்கல் கட்டிடம் அல்ல. கோயில் அமைப்பதற்கென்றே, பல கொள்கைகள், கோட்பாடுகள், நெறிகள், நிலைகள் உண்டு. ஆகவே, இன்றை சூழ்நிலையை நம் மறந்து விடுவோம். மன்னித்து விடுவோம்.

மக்களிலே மகா சக்தியும், மகா வல்லமையும் மிக்க மனிதர்களை, தேவர் என்று அழைத்தார்கள். அவர்களில் அரசன், துறவி, குரு என்று யாரும் இருக்கலாம்.

இப்படி மனிதர்களைப் பிரித்துப் பார்த்த போது,

எனக்குள் எழுந்த எழுச்சியானது, மனிதர்களும் இந்த தேவர் நிலையை அடைய முடியுமா என்பதுதான்.

கண்ணுக்குத் தெரியாத சக்தியை, புனிதத் தன்மையை கடவுள் என்றனர். தெய்வம் என்றனர்.

கண்ணுக்குத் தெரிந்த, காட்சியில் கலந்த, அந்த அரிய சக்தியைப் பெற்ற மகாமனிதர்களுக்கும் தேவர் என்றும், குரு என்றும், கடவுள் என்றும் கூறி மகிழ்ந்தனர்.

தன்னம்பிக்கை உள்ள மக்கள் பலர் உயர்ந்தோர்கள். மேலோர்கள், தெய்வம் என்று ஒரு பெரிய சக்தி இருக்கிறது என்பதை உணர்ந்தார்கள். அதற்கு பல பெயர்களைச் சூட்டினார்கள். பல வடிவங்களைக் காட்டினார்கள். பல உட்கதைகளை ஊட்டினார்கள். மக்கள் மனதிலே பயத்தோடு கலந்த பக்தியை மூட்டினார்கள். அதன் பயனாகவே பல மதங்கள் வீறிட்டெழுந்தன. பீறிட்டு எழுந்தன.

மனிதர்களை சிறப்புற வாழச் செய்யத்தான் தெய்வ வடிவங்களை அமைத்தனர். சிறப்பாக மனிதர்களை வாழ வைக்க, அவர்கள் மேற் கொண்ட முயற்சிகள் பலப்பல. வானுறையும் தெய்வங்களை எல்லாம் மண்ணுலகில் வாழும் மனிதர்களைப் போல் கற்பனைக் கதைகளாக்கி, தெய்வத்தை, மனித வாழ்வு நிலைக்கு இணையாக கீழே இழுத்துப் போட்டனர். கதைகளாக, கற்பனை புராணங்களாக ஆக்கி வைத்தனர்.

தெய்வப் புலவர் என்று போற்றப்பட்ட திருவள்ளுவரோ, தெய்வம் என்று எவர் பெயரையும் கூறாமல், எந்த மதத்தையும் சாராமல், தனக்கு என்ன

நேருமோ என்றும் பாராமல், கடவுள் வாழ்த்து என்று கூறி தன் குறளைத் தொடங்கினார்.

***வள்ளுவரின் நோக்கம், வானிலிருந்து தெய்வத்தை இறக்கி வராமல், மண்ணுலக மக்களை தெய்வ நிலைக்கு அழைத்துச் சென்று உயர்த்திட வேண்டும் என்பதுதான்.***

கண்ணுக்குத் தெரியாத சக்தி. புலன்களுக்கும் எட்டாத சக்தி என்பதுதான் தெய்வத் தன்மையின் மூலம் என்பது மதங்களின் கோட்பாடு.

ஆனால், வள்ளுவரோ கண்ணுக்கு நேரே காட்சியாக, தெய்வத்தன்மைக்கு நேரே சாட்சியாகத் தெரியும் தெய்வ மனிதர்களைப் பார்த்தார்.

நேரே பார்த்தால் தானே, நெஞ்சம் அதில் பாயும், தோயும், பதியும், பின்னால் ஓடும், சரணடையும். சகலத்தையும் பெற உறுதி கொள்ளும். தன்னையே சமர்ப்பித்துக் கொள்ளும்.

ஆகவே தான், மனித குல மாமணிகளை மனித உருவத்தில் நடமாடும் மகிமை மிக்க மேலோர்களைப் பார்த்து, அவர்களின் அடி பணிந்து, துணிந்து நட என்று, கடவுள் வாழ்த்தை, முதல் அதிகாரமாகப் பாடினார் வள்ளுவர்.

மனிதர்கள் தெய்வமாக முடியுமா? இது என்ன மனக் கோளாறு? என்று கேட்கலாம். உண்மைதான்.

நமக்கு மதத்தை உண்டாக்கியவர்களும், நமக்குத் தெய்வமாக விளங்குபவர்களும், மனித இனத்திலே பிறந்து, மனிதர்களோடு மனிதர்களாக வளர்ந்து, வாழ்ந்து முடிந்து போனவர்கள் தாம், என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

வாசகர்கள் வருத்தப்படாது, கோபப்படாது, என் கருத்தைக் கேட்க வேண்டும் என்று முதலிலேயே கூறிவிடுகிறேன்.

தெய்வமானவர்களை, தெய்வமாக இருப்பவர்களை, நான் ஏதோ தாழ்வாகப் பேசுவதாக நினைத்து விடக் கூடாது.

இந்து மதத்தைத் தவிர, எல்லா மதங்களும் ஸ்தாபிக்கப் பட்டது என்ற உண்மை உங்களுக்குத் தெரியும்.

கிறிஸ்துவ மதம், ஏசு கிறிஸ்துவால் உண்டாக்கப் பட்டது.

புத்த மதம் புத்தரால் உருவாக்கப்பட்டது.

ஜைன மதம் மகாவீரரால் ஏற்படுத்தப்பட்டது.

சீக்கிய மதம் குருநானக்கினால் ஏற்படுத்தப் பட்டது.

இப்படி மக்களிடையே, மனிதர்களாக வாழ்ந்தவர்கள் தாம் நம்மிடையே தெய்வமாக நின்று, நிலவி, உலவி வருகின்றார்கள்.

அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நாம் படிக்கிறபோது, அவர்களிடம் அற்புதமான குணங்களும், அதிசக்திமிகுந்த நயங்களும் நிறைந்து இருந்தன என்பதையே, நாம் அறிகிறோம்.

அவர்கள் மனிதர்களாக வாழ்ந்த போது, என்னென்ன பண்புகள் அவர்களிடம் விளங்கினவோ, அத்தகைய பண்புகள் தாம், கடவுள் வாழ்த்து எனும் பகுதியில், விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

கடவுள் வாழ்த்து என்பதை, நாம் பொருள் அறிகிற போது, கடவுள் என்ற சொல்தான், நமக்கு வழிகாட்டி நிற்கிறது.

கடவுள் வாழ்த்து என்றால் **தேவதுதி** என்று அர்த்தம்.

கட+உள் என்று இந்தச் சொல்லைப் பிரிப்பார்கள். உள்ளும் புறமும் கடந்து நிற்பது என்று இதற்குப் பொருள்.

கடவுள் என்றால், குரு, முனிவன், மேன்மை யானவன், உள்வழி கடந்தோன், எண்குணத்தோன், ஐம்புலத்து அடங்கான். முக்குற்றம் கடிந்தோன், தெய்வம், வானவன் இறைவன் என்றெல்லாம் பொருள்கள் உண்டு.

அதே போல, குரு என்றாலும், இறைவன், ஈசன், ஐயன், தலைவன், கோமான், ஞானாசிரியன் என்றும் பல பொருட்கள் உண்டு.

தங்களுக்குத் தலைமையாக, தங்களுடனே வாழ்ந்து விளங்கும், குருவினைப் போற்றிப் புகழ்ந்து, திருவடி பணிந்து, அடியொற்றி வாழ்ந்திட வேண்டும் என்பதற்காகத்தான், குரு வணக்கம் என்று கூறாமல் மக்களின் மனதிலே பதிய வேண்டும் என்பதற்காக, கடவுள் வாழ்த்து என்று திருவள்ளுவர் பாடிவைத்திருக்கிறார். தனது கருத்தை ஓட விட்டிருக்கிறார்.

# 3. குருவும் திருவும்!

குருவை வணங்க வேண்டும்; அவர் சொற்களுக்கு இணைங்க வேண்டும். அவர் பணித்ததைத் தொடர வேண்டும் என்றால், அவரின் திருவும் உருவும் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதைத்தான் வள்ளுவர், மிக விரிவாக, மிகத் தெளிவாகப் பாடியிருக்கிறார்.

கடவுள் வாழ்த்தை, குரு வணக்கம் என்று கூறினோம். கடவுள் வாழ்த்துத் தலைப்பு பற்றி, பரிமேலழகர் கூறிய விளக்கத்தை இங்கே அப்படியே எடுத்துத் தந்திருக்கிறோம்.

''கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக் கொண்ட பொருட்டு, ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து, ஏற்புடைக் கடவுளை யென அறிக; என்னை? சத்துவ முதலிய குணங்களான, மூன்றாகிய உறுதி பொருட்டு, அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு, இயைபு உண்டாகலான், அம்மூன்று பொருளையும்

கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப் படக் கூறினாரென உணர்க''

சத்துவ குணங்களான, மூன்றாகிய உறுதிப் பொருள் என்றும், அவற்றால் மூவராகிய முதற் கடவுள் என்றும் பரிமேலழகர் விரிவுபடுத்திக் கூறுகிறார்.

மூலக் கடவுள் பிரம்மம் என்பார்கள். வேதாந்தம் இதைத்தான் விளம்புகிறது.

வேதம்+அந்தம் என்பது வேதாந்தமாகிறது. வேதம் என்றால் விஞ்சிய அறிவு. அதாவது ஞானம். அந்த ஞானத்தின் முடிவு (அந்தம்) என்ன சொல் கிறது என்றால், சமஸ்கிருதத்தில் "TATT VAM ASI'' டட் வம் அசி என்கிறது.

அதற்கு ஆங்கிலத்தில் Thou art that என்று அர்த்தம் கிடைக்கிறது.

பிரம்மம் என்ற சொல்லுக்கு ***நீ அதாக இருக்கிறாய்*** என்று, பொருள் கிடைக்கிறது.

பிரம்மத்தின் ஒரு பகுதி உன்னுடைய ஆத்மா வாகும்.

மாயா உலகம் என்று வருணிக்கப்படுகின்ற இந்த உலகம், பிரம்மமானது, எல்லா உயிர்களிலும் கலந்து நிறைந்திருக்கிறது.

நாம் அவற்றை உட்புறம் பார்க்காமல், வெளிப்புறத்தில் பார்த்து மயங்கி, விழித்தபடி வாழ்கிறோம். ஆகவே, தனக்குள்ளே இருக்கிற

பிரம்மத்தைத் தெரிந்து கொள்வதுதான், தன்னை அறிதல் என்பதாகும்.

இந்த முழு முதற் கடவுளோடு மூவர் என்பது பிரம்மா, விஷ்ணு, சிவன் என்பது யாவரும் அறிந்ததே.

கடவுளர் மூவரைப் பற்றியும், பொதுப்படக் கூறினார் என்பது பரிமேலழகர் உரை.

பரம்பொருள் ஒருவரே தான். அந்தப் பரம்பொருளே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் நடத்த, மூன்று உருவங்களை மேற்கொண்டு, பிரம்மா, விஷ்ணு, சிவன் எனப் பெயர் கொண்டு செயல்படுகின்றார்.

பிரம்மம் என்ற பரம் பொருளுக்கு குணங்கள் எதுவும் இல்லை. ஆனால் உலகச் செயல்பாட்டுக்காக, ***ரஜஸ், சத்துவம், தாமசம்*** என்ற மூன்று குணங்களையும், மூன்று உருவங்கள் சார்பாக ஏற்றுக் கொள்கிறார் என்பது, தொன்று தொட்டு தொடர்ந்து வரும் ஐதீகமாகும். இது சமயக் கணக்கர்களின் சாகசக் கொள்கையாகும்.

வள்ளுவர் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் பாடியிருக்கிறார். கடவுள் அமைப்பு இன்னதென்று அவ்வளவு எளிதாகச் சொல்லி விடமுடியாது. நாம் காண்பது, களிப்பது, உண்பது, உணர்வது எல்லாம், கடவுள் தன்மையனவேஎன்பது கடவுளுக்கான விளக்கம்.

நம்மைச் சுற்றியுள்ள எல்லாமே, கடவுள் என்பதால், இன்ன தன்மையது, இவ்வனைத்தது என்று விவரித்துச் சொல்ல முடியாது. தனிப்பட்ட ஒன்றைப்

பெயரிட்டோ வடிவமைத்தோ, கடவுள் என்று யாராலும் கூறிவிடமுடியாது. ஒரு பெயரைத் தந்து, ஓர் உருவத்தை அளித்து விட்டால், நாம் நம்முடைய அறிவை, கடவுளைப் பொருத்தவரை எல்லையிட்டுக் கொள்கிறோம் என்றாகிவிடும்.

கடவுள் என்பவர் எங்கும் வியாபித்திருப்பவர். எல்லாவற்றையும் கடந்தவர். என்று வேதங்கள் இப்படி வியாக்கியானம் அளித்திருக்கின்றன.

இந்த மூவருக்கும் சேர்த்துதான் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது என்று பலர் கூறுகின்றார்கள். **கடவுள்** என்பதற்கு **குரு** என்பது முதல் அர்த்தம் என்று முதலில் கூறியிருந்தோம்.

குருவே பிரம்மா ஆவார். குருவே விஷ்ணு, குருவே சிவம். குருவே மேலான இறைவன். இது வேதத்தில் கூறப்படும் சுலோகமாகும்.

**"குருர் பிரம்மா, குருர் விஷ்ணு, குருர்தேவோ மகேஸ்வரஃ**
**குருஸ் சாட்சாத் பரம்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம"**

குருவே மேலான இறைவன் என்பது தமிழர் கொள்கையாக மட்டுமல்ல, சகலரின் சாத்திரமாகவும் இருந்து வந்திருக்கிறது.

அதனால்தான், குருவின் பெருமை, கடவுளரின் பெருமைகளை விட, பெரியதாகக் கூறப்பட்டு வந்திருக்கிறது.

அப்படியென்றால், குருவின் பெருமையைப் பற்றியும் நாம் மேலும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது.

குரு என்பது சமஸ்கிருதச் சொல். அதை கு

என்றும் ரு என்றும் பிரித்துப் பொருள் கூறுவார்கள் பெரியோர்கள். கு என்ற சொல்லுக்கு **இருள்** என்றும்; ரு என்ற சொல்லுக்கு **வெளிச்சம்** என்றும் பொருள் உண்டு.

மனதில் உள்ள அறியாமை என்ற இருளை அகற்றி, ஞான ஒளி என்ற வெளிச்சத்திற்கு மனிதர்களை அழைத்து வருபவர் தான் குருவாகிறார்.

குரு என்பதை பிரித்துப் பார்க்கிறபோது, குகாரம் என்றும் ரகாரம் என்றும் வருகிறது.

***குகாரம்*** என்றால் சித்தியைக் கொடுப்பவன்

***ரகாரம்*** என்றால் பாபத்தைத் தீர்ப்பவன்.

இதற்கு இன்னொரு விளக்கமும் தருவார்கள்.

கு என்றால் மலம். ரு என்றால் நீக்குபவர். சித்தி என்றால் ஞானம். மலம் என்றால் அறியாமை, மன அழுக்கு என்று பொருளாகும்.

ஆக, மனிதர்களின் மனத்தைத் தூய்மையாக்கி புறத்தை சுகப்படுத்த, நெறிப்படுத்த, நீடுவாழ்வதற்காகப் பக்குவப்படுத்த, வழி காட்டும் நடமாடும் தெய்வம் தான் குரு ஆவார்.

இப்படி குரு என்று கூறிவிட்டால், அவர் மனிதர் தானே! தெய்வம் ஆகிவிட முடியுமா என்ற ஒரு கேள்வி இங்கு எழுகிறது.

நமது மூதாதையர்களிடம், முதிர்ந்த அறிவு பெற்ற மக்களிடம் இருந்த ஒரு நம்பிக்கையையும், இங்கே நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

***பிரம்மனிடம் செய்த பாவம் விஷ்ணுவிடமும்; விஷ்ணுவிடம் செய்த பாவம் சிவனிடமும்; சிவனிடம் செய்த பாவம் குருவின் இடத்திலும்; அழிந்துவிடும். ஆனால் குருவிடம் செய்த பாவம் அழியாது நிற்கும்.***

இதுவே குருவின் மாண்பாகும். இதனால் தான் குரு துரோகம் பொல்லாதது என்று கூறுகின்றார்கள்.

ஆகவே, குரு என்பவர் கண்முன்னே வாழ்கிறவர். மனிதர்களைப் போலவே வாழ்கிறவர். தன்னை நம்பிப் பின் தொடர்கிற மாணவனை, அதாவது சாதகனை நல்வழிப்படுத்துகிறவர். தான் வாழுகிற வாழ்க்கையில் நம்பிக்கையை ஊட்டுகிறவர். நல்ல நெஞ்சகமாக மாற்றி பக்திப் படுத்துகிறவர். ஆமாம், அவர் அவனைத் தெய்வ நிலைக்குக் கொண்டு வருகிறவர்.

முன்னேற முடியாத ஒருவனை, முன்னேறத் தூக்கிவிடுகிறவர். அதிமேன்மைமிக்க ஞானத்தை, அவனுக்குக் கற்பித்து, முடிவற்ற மெய்யுணர்வையும் அழிவற்ற பேரானந்தத்தையும், தருகிறவர்.

ஆனந்தம் என்பது **ஆன்+நந்தம்** என்று பிரிகிறது. நந்தம் என்றால் பெருக்கம். ஆன் என்றால் ஆன்மாவின் இன்பம் என்பதாகும்.

ஆன்மாவின் இன்பப் பெருக்கமே, ஆனந்தம். இங்கே பேரின்பத்தை அல்லவா பெருக்கிவிடுகிறார். குரு அவர்கள்.

குரு என்பவர் சுடர் விளக்கு போன்றவர். ஒரு சுடர் விளக்கிலிருந்து ஒளி ஏற்றப் பெற்று ஒளி தொடர் வதுபோல, குருவிலிருந்து ஞானத்தைக் கற்றுக்

கொண்ட பின்தொடர்வோர் யாவரும் ஞான விளக்காகிறார்கள்.

இந்த ஞான மார்க்கம் என்பது திக்குத் தெரியாத காடு போல. அதில் நுழைந்து விட்டால், திசையும் தெரியாது, வசையும் புரியாது. அதில் தேடித்தேடி இளைத்தும், வாடி வாடிக்களைத்தும் வாழ்விழந்து போக வேண்டுமே தவிர, விரும்பிய திசையையும் வேண்டிய இசையையும் பெற முடியாது.

ஆக, அந்த அடர்ந்த ஆழிருள் காட்டில், வழி நடத்திச் செல்பவராக, மெய்யான வழி செல்ல முயலுகிறபோது ஏற்படுகிற ஐயங்களை எல்லாம் போக்குகிறவராக குரு வாழ்கிறார்.

ஆகவே, **குருதான் குல தெய்வம்** என்று கூறுகிற கூற்று முக்காலும் மெய்ம்மையாகவே விளங்குகின்ற தன்றோ!

அத்தகைய குருவைத்தான் வள்ளுவர் வாழ்த்திப் பாடுகிறார் .

குரு வணக்கம் என்று கூறாமல் கடவுள் வாழ்த்து என்று பெயர் வைத்தமைக்குக் காரணம், குருமார் களின் மேல் கொண்டிருந்த வைத்திருந்த நம்பிக்கை தான். மரியாதை தான்.

குரு என்றால் மதவாதிகளாக விளங்குபவர்கள் அலல. மகாஞானம் பெற்ற தேவர்கள்.

கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் வருகிற பத்துப் பாடல்களும், குருவைச் சரணடையுங்கள். குருவின் திருவடியைப் பின்பற்றுங்கள். குருவின் வழியைப் பின்பற்றுங்கள். குருவின் நல்போதனைக்கு

இணங்கி சேருங்கள். குருவின் ஒழுக்க நெறியில் நில்லுங்கள். தனக்குவமை இல்லாத தன்மையுடன் விளங்கும், அவரது ஆன்ற முயற்சியில் உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். இவ்வாழ்வில் ஏற்படும் பிற துன்பங்களையெல்லாம் போக்கிட, அவரை சார்ந்து கொள்ளுங்கள் என்று மக்களுக்கு வள்ளுவர் அறிவுறுத்தி செம்மையுடன் ஆற்றுப் படுத்துகின்றார். அரும்பணியைச் செய்திருக்கிறார்.

ஏன் அப்படி ஆற்றுப்படுத்த வேண்டும்?

அதுதான் வள்ளுவரின் தனிச் சிறப்பு. தெய்வப் புலவர் அல்லவா அவர்! தெய்வத்தன்மை கொண்ட, தேவர் அல்லவா அவர்! மக்களை தெய்வத்தன்மை கொள்ள, மேம்படுத்தவேண்டும் என்ற மேலான குறிக்கோளில் தான், இந்த மாபெரும் முயற்சியை மேற்கொள்கிறார். மானசீகமாக படிப்போரை ஆட்படுத்துகிறார். வழி நடத்துகிறார்.

***இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென, உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை, அறம், பொருள் இன்பம், வீடு என்று உரைப்பாயிரத்தில் எழுதுகிறார் பரிமேலழகர்.***

நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியானது, ***அற நூல்களில் விதித்தன செய்தல், விலக்கியன ஒழித்தல். ஆமாம். அவை ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்று மூன்று வகைப்படுகிறது.***

ஒழுக்கம் என்பது ஒவ்வொருவரும், தங்கள் வாழ்க்கையில் அறநெறிகளில் வழுவாது, முறையுடன் ஒழுகி வருவது.

***வழக்கு*** என்பது, பொருளுக்கு ஆசைப்பட்டு, ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டு, பகையுற்று, ஒழுக்கநிலை மாறி, பொருதும் நிலைக்குப் போவது.

***தண்டம்*** என்பது ஒழுக்கத்திலிருந்து மாறினாலும், வழக்கில் ஆளாகினாலும், உரிய தண்டனையைப் பெறுவது.

இந்த மூவகை நிலைதான், மக்கள் வாழ்க்கை யிலே முதலாக நிற்பது. முந்திக் கொண்டு வருவது. வாழ்க்கையில் ஏற்படும் எல்லா நிலைகளுக்கும் வழிப்பாதையாக அமைந்திருப்பது.

மனிதர்களை தெய்வ நிலைக்கு உயர்த்தச் செய்யும் உன்னத லட்சியத்தில், திருக்குறளைத் தந்த திருவள்ளுவர், தாம் கூறப்போகும், எல்லா வற்றிற்கும், முடிவாக விளங்குவது ***பேறும் பேரானந்தமும்*** தான் என்பதை பெறச் செய்ய வேண்டும் என்கிற ஒன்றையே விரும்புகிறார்.

உண்மையை உணர்ந்து கொள்ளவும், நன்மையை தெரிந்து செய்யவும், தீமைகளைத் தீயென ஒதுக்கவும், மக்களைத் தயார் செய்கிற, மாபெரும் பணியில், தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் வள்ளுவர். அதனால் தான் அவர் செய்த குறட்பாக்கள் எல்லாம், ஒழுக்கத்தை வலியுறுத்தின. வழக்கின் கூறுகளை, விளக்கிக் காட்டின. தவறுகளை சுட்டிக் காட்டின. தவறுகளுக்குரிய தண்டனையை, நெருப்பாக சுட்டிக் காட்டின. அச்சுறுத்தின.

அறத்துப் பாலிலும், பொருட்பாலிலும் உள்ள அத்தனைக் குறட்பாக்களும், மனித வாழ்வின் ஒழுக்கத்தையே வலியுறுத்தின. காமத்திலும் கட்டுப் பாடான ஒழுக்கம் வேண்டும் என்று வற்புறுத்தின.

மனித வாழ்வில் மண்டிக் கிடக்கும் மாய் மாலங்களை, மக்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும். மனதைக் கட்டுப்பாட்டுடன் பழக்க வேண்டும். செய்கிற செயல்களில் எல்லாம் செழுமையை வளர்க்க வேண்டும் என்பது தான், வள்ளுவரின் முழு நோக்கமும், ஏக்கமுமாக இருந்திருக்கிறது.

அதற்காக, வள்ளுவர், மிகச் சுருக்கமாகச் சொன்னார். நடப்பதற்கு இதமாகச் சொன்னார். வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பது போல, வாழ்க்கை நெறிகளை திட்டவட்டமாகச் சொன்னார். தீர்மானமாகச் சொன்னார்.

மக்களாக வந்து, பிறந்து, வாழ்ந்து, தாழ்ந்து முதிர்ந்து, தளர்ந்து, முடிந்து இறந்து போவதில், வள்ளுவருக்கு ஏற்பு இல்லை. இந்த வாழ்க்கையில் இல்லாத எப்பொருளும் இல்லை என்று மக்கள் குலத்தின் மேம்பாட்டை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பாடினார்.

தானே முழுதுணர்ந்து, தண்டமிழில் வெண் குறளால், அறம் பொருள், இன்பம் வீடு என்னும் நான்கின் திறம் தெரிந்து, எப்பாலரும் ஏற்றுக் கொள்ளுகிற வண்ணம், மொழிந்தார் வள்ளுவர்.

இன்பம், துன்பம் என்னும் இரண்டும் மன்பதைக் கெல்லாம் எப்பொழுதும் நிகழ்வது இயல்பு தான். அதில் இன்பத்தை எப்படி ஏற்பது, துன்பத்தை எப்படி தீர்ப்பது என்று இதமாக எழுதிக் காட்டினார்.

அதைக் கேட்ட சிந்தை இனித்தது, செவி இனித்தது. சொல்லும் வாய் இனித்தது. வாழ்வில் வரும் இருவினைக்கும் மாமருந்தாக அமைந்தது

என்று, வாயினிக்கப் பாடுகிறார் கவுணியனார் .

**''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''**

என்ற திருவுணர்வுடன் மக்களுக்கு உபதேசம் செய்கிறார் வள்ளுவர்.

ஏன் உபதேசம் என்ற வார்த்தையை, இங்கே எழுதுகிறேன் என்றால், அவர் நமக்குத் தந்தது ஞான போதனை என்பதால் தான்.

வள்ளுவர் வடித்துத் தந்த குறள்கள் எல்லாம், எழுத வேண்டும் என்பதற்காக இயற்ற பட்டவை அல்ல. ஞான தீபமாக ஏற்றப் பட்டவை.

**''குறும்பாவால், வள்ளுவனார் ஏற்றினார்**
**வையத்து வாழ்வார்கள்.**
**உள்ளிருள் நீக்கும் விளக்கு''**

என்று பாடுகிறார் நப்பாலத்தனார் என்னும் புலவர்.

உள்ளிருள் நீக்குபவர் தான் குரு என்று முன்னர் கூறினோம். வள்ளுவரும் குருதான். அவரை ஆன்மீகக் குருவாக, தேவராக, தெய்வமாகவே, எல்லா அறிஞர்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். போற்றிப் புகழ்ந்து போயிருக்கின்றார்கள்.

அவர், ஆரியம் வேதம் உடைத்த தமிழ்த் திருவள்ளுவனார். ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து, அதனில் இணையாக, சீரிய செயல்ஒன்றைச் செய்த குருவாக, வழிகாட்டும் திருவாக விளங்குகிறார் வள்ளுவர்.

அவர் கடவுள் வாழ்த்தில் பாடிய தெல்லாம் குரு பெருமையைப் புகழ்ந்து கூறவேதான்.

குருவின் திருவடித் தாமரைகட்கு, வணக்கம் செய்வது கடமை என்பது, உயர்ந்தோர் பின்பற்றிய பண்பான செயலாகும்.

**"திருத்தகு சீர்த் தெய்வத் திருவள்ளுவர்"** (1)
**"முப்பாலில் தெய்வத் திருவள்ளுவர்"** (49)
**"தேவர் திருவள்ளுவர்"** (41)
**"தேவிற் சிறந்த திருவள்ளுவர்"** (39)

என்று திருவள்ளுவரை, தேவராகவும், தெய்வமாகவும் பாடி இருக்கின்றார்கள் தமிழ்ப் புலவர்கள். இப் பாடல்களை திருவள்ளுவமாலையில் படித்து இன்புற வேண்டுகிறோம்.

அத்தாமரை மேல் அமர்ந்திருக்கும் அயன் தான் வள்ளுவனாகி, வேதப் பொருள்கள் விளங்க, பொய்யாது உலகினுக்குத் தந்தான் குறள்பாக்களை என்கிறபோது;

வள்ளுவர் தெய்வ மனிதராகவே நமக்குத் தோன்றுகிறார். ஆகவே, தன்னைப் போலவே, தமிழர்கள், தமிழ்கற்ற மற்ற மொழிமாந்தரும் வந்து, மகிமை பெற்று, மனித வாழ்விலே தெய்வ நிலையைப் பெற்று, தேவ வாழ்வு வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன், குறட்பாக்களைக் கொடுத்தி ருக்கிறார்.

திருவள்ளுவர் தேடுகிற மனிதர்கள், தெய்வமாகி மறைந்து போக வேண்டும் என்பது அல்ல.

ஆற்றல், பலம், பெருமை, சீர்மை, அறிவு, பற்றற்ற பாங்குடன் வாழ்ந்திட வேண்டும் என்ற பெரிய ஆசை அவருக்கு. அவற்றை அடைய, குருவின்

அருள் வேண்டும் என்பதை வற்புறுத்தவும், வலியுறுத்தவும் பாடிய, கடவுள் வாழ்த்தின் உட்பொருளையே இனி ஒவ்வொன்றாகத் தெரிந்து கொள்வோம்.

**''தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்**
**தெளிவு குருஉருச் சிந்தித்தல் தானே!** *(183)*

என்று திருமூலர் தன் திருமந்திரம் எனும் நூலில் பாடுகிறார்.

தெளிவது என்பது ஞானத்தைக் குறிக்கும். குருவின் திருமேனியைக் காண்பதும், திருநாமத்தைச் சொல்லுவதும் புறச் செயல்கள். குருவின் திருவார்த்தைகளைக் கேட்பதும், அவர் திரு உருவினைச் சிந்தித்து, செயல்களில் சிந்தை கொண்டிருப்பதும் அகச் செயல்களாகும்.

இவ்வாறு அகமும், புறமும் குருவே நிறைந்திருப்பதால், போற்றி ஏற்போரின் ஞானத்தில் சீலமும், செறிவும்; பேரறிவில் மெலும் தெளிவு பெறமுடியும்.

இவ்வாறு என் கருத்தோட்டத்தில் ததும்பி வரும் நிலையைத்தான் எனக்குள் ஏற்பட்ட எழுச்சி என்று முதலில் குறித்திருந்தேன். அதுவும், உருத்திர சன்ம கண்ணர் என்ற புலவர் எழுதிய பாடலே, எனக்குள் இந்த எழுச்சியை, விழிப்புணர்வை ஊட்டியது.

**பிணக்கிலா,**
**வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு**
**ஆய்தொறும் ஊறும் உறிவு.**

(திருவள்ளுவ மாலை 31)

ஆயும் தோறும் ஊறும் அறிவு என்றார். அவர் வழி, பாயும் என் அறிவினால், படைக்கும் இந்த பயன்மிகு புதுப்பொருளை, படிக்கும் வாசகர்கள் பண்புநிலை பொறுமையுடன் ஆய்வு செய்திட வேண்டி, தொடருகிறேன்.

வள்ளுவர் மதம் என்ன? குலம் என்ன? என்று ஆராய முற்படடு, எதுவும் கிடைக்காமல் அவதிப்பட்டவர்கள் அநேகம் பேர்கள்.

அவர் கூறிய வார்த்தைகள் தாம், அவரது அரிய வாழ்க்கையாக அமைந்திருக்கிறது என்று அறிகிறபோது, பெறும் ஆனந்தம் அநேகம்.

வள்ளுவர் வணக்கத்திற்குரியவர் யார்? வள்ளுவர் மனம் கனிந்து, மனம் மகிழ்ந்து வணங்கிய கடவுள் யார் என்பதை, அவரே மிக நுண்மையாக, தனது கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் பாடி வைத்திருக்கிறார்.

பொருள் புரிந்து கொள்வோம். நாமும் வள்ளுவர் வணங்கிய கடவுளைக் கண்டு, வழியாய் கொண்டு, வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்ந்து மகிழ்வோம்.

# 4. எல்லாம் வல்ல பகவன்

**''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு''** **(1)**

என்பது கடவுள் வாழ்த்தில் உள்ள முதல் பாடல். பூவுலகத்தைப் புதுப்பிக்க வந்த, புரட்சிக் குறட்பாக்களின் முதல் பாடல் என்றே கூறலாம்.

இந்தக் குறளுக்கு, உரை விரித்த பரிமேலழகரை, 'பன்னு தமிழ்த் தேர் பரிமேலழகன்' என்று பாயிரம் வாழ்த்தும். இந்நூலுக்குப் பதித்த உரை யெல்லாம், பரிமேலழகன் தெரித்த உரையாமோ என்று மேலும் சிறப்பித்துப் பேசுவார்கள்.

இந்தக் குறளடிக்கு அவர் தந்த விளக்கத்தை அப்படியே தந்திருக்கிறேன்.

***''எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன. அது போல உலகம் ஆதிபகவனாகிய முதலை உடைத்து.***

அதற்குப் பிறகு, அவர் தருகிற விளக்கம் எல்லாம், அவரின் கருத்தாகவே தொடர்ந்து தரப்படுகிறது.

''இந்தப் பாட்டு, தலைமை பற்றி வந்த எடுத்துக் காட்டுவமை, ஆதி பகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை, வட நூல் முடிவு''

பரிமேலழகரைப் பின்பற்றியே, பின் வந்த உரையாசிரியர்கள் எல்லோரும், உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம், ஆதியாகிய கடவுளை, முதலாகக் கொண்டுள்ளன என்றே எழுதினர்.

ஆனால், தமிழ் நெறிப்படி, அதற்கான பொருளை, யாரும் ஆழ்ந்து ஆய்ந்திட வில்லை என்பது தான் என்னுள் எழுந்த எழுச்சியும் ஏக்கமும்.

இப்போது, அகர முதல என்ற பாடலுக்கு நான் கூற வந்த, உரையையும், கொண்டுள்ள கருத்தையும் கூறுகிறேன்.

ஆதி பகவன் முதற்றே உலகு என்பதில் தான், புதிய பொருளைக் காண்கிறேன். ஏன் இந்த உணர்வின் உந்துதல் என்பதற்குரிய குறிப்பினைக் கொடுப்பதும் என் கடமையாகிறது.

ஆதி பகவன் என்றதும், கடவுள் பக்தி உள்ளவர்கள், தாங்கள் உரையை, கடவுள் மேல் ஏற்றிச் சொன்னார்கள். கதைக்கின்ற பேர்வழிகள், அதற்குப் பல கதைகளைக் கட்டி காற்றிலே பரவ விட்டார்கள்.

அதிலும் புண்ணிய புருஷன், தெய்வப் புலவன்,

பிறப்பிற்கே களங்கம் கற்பிப்பது போல, கயமைத் தனமான கதைகளை புனைந்து பரப்பினார்கள்.

முதல் கதை.

ஆதி என்னும் ஓர் அழகிய பெண், தவ முனி என்னும் வேதியன். அருள் மங்கை என்பவருடன் சேரப் பிறந்தவள் அந்த ஆதி. அவள் பிறந்த பிறகு, பிறந்த ஊர் மண்மாரியால் அழிய,' அவள் ஒருத்தியும் பிழைத்து, உறையூரில் உள்ள தாழ்த்தப்பட்ட ஒருவரிடம் வளர்ந்து, நீதி ஐயனிடம் இருந்தபோது, பகவனை மணந்து, ஔவை, முதலியவரைப் பெற்றாள்.

இப்படி ஆதி என்னும் ஒரு பெண்ணின் கதையை அபிதான சிந்தாமணி என்னும் நூலில் - 126ம் பக்கம் காணலாம்.

இனி ஆதியை மணந்த, பகவன் என்பவனின் கதையைப் பார்ப்போம்.

பகவன் என்பவன், பெருஞ்சாகரன் என்பவரின் புதல்வன். இவன் காசி யாத்திரையின் பொருட்டு புறப்பட்டு, மேலூர் அகரத்தில் தங்கினான். அவ்விடம் ஒரு பெண் வர, அவளை புலைச்சி யென்று சட்டுவத்தால் (அகப்பையால்) அடித்துத் துரத்தி, காசி யாத்திரைக்குச் சென்று மீண்டும் மறுபடியும் வந்து, அந்த சத்திரத்தில் தங்கி, முன்பு அகப்பையால் அடிபட்ட அந்தப் பெண்ணைக் கண்டு மயங்கி, அவளை வளர்த்தவரிடம் சென்று, அனுமதி பெற்று அவளை மணந்து, மங்கல ஸ்நானத்தின் பொருட்டு அவள் மயிரை வகிர்ந்து, தாம் அடித்த அடியைக் கண்டு, இவள் ஆதியாள் என்று ஓடுகையில், அவளும்

பின் தொடர, இருவரும் பாணச் சேரியில், ஒரு மண்டபத்தில் புணர்ந்தனர். இவ்விருவருக்கும் ஔவை பிறந்தனள்.

கணவனுடன் செல்ல வேண்டிய ஆதி, குழந்தையை விட மனமில்லாது மயங்குகையில், அக்குழந்தை என்னை விட்டு நீங்க மயங்கற்க என கவியால் கூறக்கேட்டு, அப்புறம் கணவனுடன் சென்று, பல இரவுகள் தங்கி, ஆங்காங்கு **உப்பை, உறுவை, கபிலர், வள்ளி, திருவள்ளுவர்** முதலியவர்களையும் பெற்றுவிட்டுச் சென்றனன். இவனுக்கு ஞானிதந்தன் எனவும் பெயர் (அபிதான சிந்தாமணி. பக்கம் 1001)

இந்தக் கதையின் நாயகனும் நாயகியும் தான், வள்ளுவர் கூறிய ஆதி பகவன் என்று வலிந்து கூறி, விதண்டாவாதக் காரர்கள் மக்கள் மனதிலே, ஒரு மயக்க உணர்வை ஊட்டி, உண்மையை மறைத்துப் போய்விட்டனர்.

காமம் கண் மறைக்க, கண்ட இடத்தில் கூடி, கசப்பான ஒப்பந்தத்தை உண்டாக்கிக் கொண்டு, கண்மணிகளான குழந்தைகளை, கானகத்தே போட்டு விட்டுப் போன, காதகர்களை முன் நிறுத்தி, இந்த ஆதி பகவன் முதற்றே உலகு என்று பொருள் கூறினால், எழுதிய வள்ளுவருக்கு எவ்வளவு அவமானம்? இதனை ஏற்றுக்கொண்ட உலக மக்களுக்குத்தான் எத்தனை கேவலம்?

வள்ளுவர் வாழ்ந்த காலத்தின் வருடங்களே விவாதத்திற்குரியதாக இருக்கிறபோது, இப்படிப் பட்ட கதைகளையும் ஏற்றுக்கொண்டதே இந்தச் சமுதாயம்!

தெய்வமாக ஆதியையும் பகவனையும், உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உரைப்பவர்களை, என்ன சொல்ல? அவர்கள் கட்டுரை தந்த கயமைக் கதைகளால், அவர்கள் வரலாற்றிலிருந்தே, காணாமல் போய்விட்டார்கள்.

இனி, புதிய பொருள் தரும் பாடல் வரிகளைக் காண்போம்.

தென் மொழி, வடமொழி போன்ற அனைத்துக்கும் அகரமே முதலாக இருக்கிறது. அதுபோல உலகுக்கே முதலாக இருப்பது எது? அதைத்தான் உள்ளுறை பொருளாக வைத்து, உயர்ந்த வாழ்க்கைத் தத்துவமாக, விஞ்சிய ஞானம் காரணமாக, விஞ்ஞானப் பொருளை வைத்துப் பாடியிருக்கிறார் வள்ளுவர்.

ஆதி என்பது, மிகவும் பொருள் பொதிந்த சொல்லாகவே விளங்குகிறது.

***ஆதி*** என்ற அந்த அர்த்தமுள்ள அற்புதமான சொல்லுக்கு ***முன்னது*** என்றும், ***முதன்மை*** என்றும், ***தலையாயது*** என்றும், ***மூலம்*** என்றும், எப்பொருட்கும் எல்லாம் ஆனது என்றும் பல பொருட்கள் உண்டு.

ஆதம் (ஒளி) நிறைந்தது ஆதி. ஆதி என்றாலும் சூரியன் என்றே அர்த்தம்.

இந்த பொருள் நிறைந்த சொல்லைத்தான், பகவன் என்ற பதத்திற்கு, பக்க பலம் ஊட்டுவது போல, பொய்யா மொழிப் புலவர் போட்டிருக்கிறார்.

***பகவன்*** என்ற சொல்லுக்கு, அரன், அரி, அருகன்,

பிரமன், புத்தன், பகவான் என்று தான் பலரும் நினைத்துப் பார்த்திருக்கின்றார்கள்.

சூரியன் என்ற ஓர் அர்த்தமும் இருப்பதை, யாரும் நினைக்கவில்லையோ, ஏற்றுக் கொள்ளவில்லையோ தெரியவில்லை. சூரியன் என்ற பொருளையே, சுட்டிக் காட்டமல் பலரும் போய் விட்டனர்.

உலகம் என்று முதலில் பாடுவது தமிழ் மரபாக, சிறந்த தமிழர்களின் பண்பாகவே, இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கிறது.

உலகம் புகழும் இலக்கியம் படைத்த தமிழ்ச் சான்றோர்கள், உலகம் என்ற சொல்லைப் பெய்து, தங்கள் உயர்ந்த உள்ளத்தை வெளிப்படுத்தினார்

ஐம்பெருங்காப்பியங்களில், சிலப்பதிகாரம் ஒரு சிறந்த நூல், அதில் வரும் முதலடி,

★ அங்கண் ***உலகளித்தலால்*** தங்களைப் போற்றுதும்

★ மாண்டால் வருவரோ ***மாநிலத்திர் (உலகத்தீர்)*** என்று ஔவை பாடினாள்

★ ***உலகம்*** உவப்ப வல நேர்புதிரி தரு என்பது திருமுறுகாற்றுப்படையின் முதலடியாகும்.

★ ***உலகத்தீரே உலகத்தீரே!*** மனிதர்க்கு வயது நூறல்லதல்ல (கபிலர் அகவல்)

★ மலர்தலை ***உலகத்து*** என்று நம்பியகப் பொருளில் வரும் முதல் பாட்டில் முதல் அடி பாடுகிறது.

★**உலகம்** யாவையும் தாமுள வாக்கலும் என்பது கம்பராமாயணத்தில் வருகிற, கம்பன் எழுதிய முதற்சொல்.

★ **உலகெலாம்** உணர்ந்து ஓதற்கரியவன் என்பது பெரிய புராணம் பாடிய சேக்கிழார் வாக்கு.

★ வள்ளுவன் தன்னை **உலகினுக்கே** தந்து, வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என்று பாரதியும் பாடுகிறாார்.

ஆக, வள்ளுவரும் தனது முதல் குறட்பாவில், ஆதி பகவன் முதற்றே **உலகு** என்று உலகைக் குறித்துப் பாடி, தன் உயர்ந்த உள்ளத்தை, பரந்த தமிழ்ப் பண்பாட்டை, வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

உலகு என்றால், உயர்ந்தோர் என்றும், ஒழுக்கம் என்றும், பூமி என்றும், மக்கள் என்றும் அர்த்தம் உண்டு. அது போலவே, உலகம் என்று சொன்னாலும், **நன்மக்கள், சான்றோர், உயர்ந்தோர், மக்கள் தொகுதி என்பதுடன், சொர்க்கம்** என்ற பொருளும் உண்டு.

இப்போழுது, அர்த்தங்களை சேர்த்துப் பார்ப்போம்.

மூலமும் முதன்மையும் முன்னதுமாக இருக்கிற சூரியனை, முதலாக வைத்தே, பூமியில் உள்ள மக்கள் கூட்டமும், சான்றோரும் வாழ்வை நடத்தும் வளமையைப் பெற்றிருக்கின்றனர்.

சூரியனை ஆதிப்பொருள் என்றே, சங்க இலக்கியங்கள் சாத்திரங்கள், வேதங்கள், விவிலியம்,

எல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றையும் பார்ப்போம்.

ஆதியில் தோன்றியது சூரியனே என்பதாக:-

**விவிலியம் பேசுகிறது.**

பூமி உருவமற்று வெறுமையாயிருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. கடவுளின் ஆவி தண்ணீர் மேல், அசைவாடிக் கொண்டிருந்தது. வெளிச்சம் உண்டாகுக என்று கடவுள் சொன்னார். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சத்தையும் இருளையும் கடவுள் வெவ்வேறாகப் பிரித்தார். வெளிச்சத்துக்குப் பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். *(பைபிள்: ஆதியாகமம் வசனம் 2-5 வரை)*

பகல் என்பதற்கு ***சூரியன்*** என்று பொருள்.

***பகல்*** செய்வதால், அதற்கு பகலவன் என்றும் பெயர்.

***பகலோன்*** என்றாலும் சூரியன் என்றே பொருள்.

இருளையும் பகலையும் பிரித்ததால் தான் அதற்குப் பகவன் என்று பெயரிட்டனர்.

இந்த, சூரியன் பிறப்பு பற்றி இந்து மதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

''முதலில் இருளான அண்டம் உண்டாயிற்று. அதன் மத்தியிலிருந்த பிரமன், அதைப் பிளந்தான். அக்காலத்தில் ஓம் என்னும் ஒலி உண்டாயிற்று. அந்த ஓங்காரத்தால், சூரியனுக்கு சூட்சம உருவம்

உண்டாயிற்று. ஓம் காரமே ஒளிமயமான பிரம்மனாய் எண்ண வேண்டும் என்பது தான் கொள்கை''

ஆகாய மண்டலத்தினை ஆட்சி செய்யும் தேவதையாக சூரியனே விளங்குகிறான். தேவர்களின் கண்ணாக, சூரியனை வேதம் விவரிக்கின்றது. மேலேயிருந்து இவன், பூமியில் உள்ள எல்லா வற்றையும் காணக் கூடியவன். தினத்தை, இவன் பூமியில் உண்டாக்கித் தருவதால், இவனுக்குத் தினகரன் என்று பெயர் வந்தது.

பேரொளிக்கும், பேராற்றலுக்கும் பருப் பொருளாய் விளங்குபவன். மூச்சுக் காற்றின் உறைவிடமாக சூரியன் இருக்கிறான்.

கிறிஸ்து பிறப்பதற்கு, சில நூற்றாண்டுகளுக்கு முன்பே சமணரும் பௌத்தரும், தமிழ் நாட்டுக்கு வந்து விட்டார்கள் என பல சாசனங்களால் அறியலாம். (1)

சமண நூலான சிலப்பதிகாரத்தில் தொடக்கமான வாழ்த்துப் பகுதியில், **ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்**

என்று இளங்கோவடிகள் சூரிய வணக்கம் பாடுகிறார்.

பௌத்த நூலான மணிமேகலையைப் பாடிய சீத்தலைச் சாத்தனார். நூலின் பாகுபாட்டு முறையை விளக்கிக் கூறம் பகுதியான **பதிகம்** பாடும் போது, **இளங்கதிர் ஞாயிறு** என்று தொடங்குகின்றார்.

சூரியனுக்குத் தருகிற மிக முக்கியமான பெருமையாக, திருக்குர்ஆனில் வருகிற, சில

வசனங்களைப் பாருங்கள்.

1. சூரியன் மீதும், அதன் பிரகாசத்தின் மீதும்,

2. (அது அஸ்தமித்ததற்குப் ) பின் அதைத் தொடர்ந்து உதயமாகும் சந்திரன் மீதும்

3. (சூரியன்) பிரகாசிக்கும் பகலின் மீதும்,

4. (அதனை) மறைத்துக் கொள்ளும் இரவின் மீதும்,

5. வானத்தின் மீதும் அதை அமைத்தவன் மீதும்

6. பூமியின் மீதும், அதை விரித்தவன் மீதும்,

7. ஆத்மாவின் மீதும், அதனை (மனிதனாக ) உருவாக்கியவன் மீதும்,

8. அதன் நன்மை, தீமைகளை, அதற்கறிவித்தவன் மீதும் சத்தியமாக'' (குர் ஆன்: பக்கம் 720.91. வசனம் 1 முதல் 8 வரை)

சத்தியப் படுத்திச் சொல்லும் போது, சாட்சியாக, முதலில் கூறப் படுவது சூரியனாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்கிற போது, மனித வாழ்க்கையும், மத வாழ்க்கையும், சூரியனை முதலாக வைத்தே அமைந்திருக்கிறது என்பதை நாம் உணரலாம்.

உலக மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்துக்கும், ஆதவனே காரணமாயிருக்கிறான் என்று அனுபவ மூலமாக அறிந்து வைத்திருந்தார்கள் நமது ஆன்றோர்கள்.

இன்றோ, சுற்றுப் புறச் சூழ்நிலைகளைத் தூய்மையாக்கி, சுகமும் சுவாசமும் கொடுக்கின்ற சூரியனைப் பற்றி, அனுபவித்தபடி ஆராய்ச்சியே செய்து வைத்திருக்கின்றனர் நமது அறிவியல் வல்லுநர்கள்.

ஆகாய வெளியில் காணப்படும் அண்டங்களுள் சூரியனும் ஒரு கோளமே. இதை அக்னி மேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. முதன்மையான சூரியனை நடுவாகக் கொண்டு, புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன் சனி, யுரேனஸ், நெப்தியூன் என்பவை சுற்றி வருகின்றன. இவையெல்லாம், சூரியனிடமிருந்தே ஒளியைப் பெறுகின்றன.

வட்ட வடிவமான சூரியன், தன்னைத்தானே 26 நாட்களுக்கு ஒரு முறை சுற்றி வருகிறது. இதன் சுற்றளவு 26 லட்சம் மைல்களுக்குமேல் அதிகம். குறுக்களவோ 8 லட்சத்து 70 ஆயிரம் மைல்களுக்கு மேல் அதிகம். இதன் பரப்பளவு நாம் வாழும் பூமியை விட 12 $^1/_2$ லட்சம் மடங்கு பெரியது. இதன் கனம் பூமியை விட 13 லட்சம் மடங்கு அதிகம்.

பூமியிலிருந்து சூரியனின் தூரம் 9 கோடியே, 28 லட்சத்து 30 ஆயிரம் மைல்களாகும். கிழக்கில் உதயமாகிற சூரியன், மணி ஒன்றுக்கு 1500 மைல் வேகத்தில் மேற்கு நோக்கிச் செல்கிறது. என்று சூரியனைப் பற்றி ஒரு பட்டியலே போட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

நாம் வாழும் பூமியின் வெப்பம் 50 டிகிரிக்கும் மேல் போவதில்லை. ஆனால், சூரியனின் வெப்ப ஆற்றல் 15 மில்லியன் டிகிரி சென்டிகிரேடு என்று கணக்கிட்டிருக்கின்றனர். 100 மைல்களுக்கு அப்பால்

நிற்கும் ஒரு மனிதன், சூரிய வெப்பத்தால் கருகிப் போய் விடுவான், என்று அதன் தீக்கதிர் வெம்மையை, கண்டறிந்திருக்கின்றனர்.

1 கிலோ மீட்டர் தூரம் கனமான பனிப்பாறையை, 90 நிமிடங்களுக்குள்ளாக, உருக்கி விடும் ஆற்றல் சூரிய வெம்மைக்கு உண்டு.

இவ்வளவு ஆற்றல் மிக்க சூரியன் தான், உலகத்திற்கு முதலாவதாக; உலக மக்கள் உயிர் வாழ உதவும் மூலக்காற்றை உற்பத்தி செய்து தரச் செய்யும் ஆதாரமாக, உலகுக்கு ஒளிதரும் உன்னதத் திருவாக, உயர்ந்த வாழ்வை உருவாக்கி வழி நடத்தும் உயர்ந்த குருவாக, (சூரியன்) விளங்குகிறது.

மக்களின் மூச்சாக, வாழ்வாக, மூல முதலாக சூரியன் எப்படி விளங்குகிறது என்றும் பார்ப்போம்.

இதயம் இரத்தத்தை, உடம்பு முழுவதும்இறைத்து விடுகிறது. அந்த இறைத்தலினால் ஓடுகிற இரத்தம், உயிர்க்காற்றை எடுத்துக் கொண்டு சென்று எல்லா செல்களுக்கும் தந்து, திரும்பி வருகிறபோது, செல் களில் சேர்ந்திருந்த கரியமில வாயுவை திரட்டிக் கொண்டு வருகிறது.

நுரையீரலுக்கு வந்த அசுத்த ரத்தத்திலிருந்து கரியமில வாயுவை நீக்கிவிட்டு, மீண்டும் உயிர்க் காற்றை கொடுத்து அனுப்புகிறது. இந்தக் காரியத்திற்காக, ஒரு சராசரி மனிதனுக்கு, 1 வருடத்திற்கு கால் மில்லியன் டன் காற்று தேவைப்படுகிறது. ( A quarter of million tonnes)

மனிதனுக்கே இவ்வளவு காற்று தேவை

யென்றால், உலக மக்கள் எல்லோருக்கும் எவ்வளவு காற்றுத் தேவைப்படும்?!

உலக மக்கள் எல்லோருக்கும் உயிர்க்காற்றைத் தர உதவி செய்வதுதான் சூரியனின் பணியாக இருக்கிறது.

பூமியில் உள்ள தாவரங்கள் எல்லாம் சூரிய ஒளியை கவர்ந்திழுத்துக் கொண்டு, தண்ணீருடனும் கரிய மிலவாயுவுடனும் இணைத்து, ஸ்டார்ச்சு தயாரித்துக் கொள்கிறது.

மண்ணுலகில் பசுமையான தாவரங்கள் இல்லையென்றால், பூமி முழுதும் நுண்கிருமிகளும், உயிர் கொல்லும் விஷக் கிருமிகளும் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கும்.

சூரியனோ, இத்தகைய கொடுமை நேராமல், விஷக்கிருமிகளை மாய்த்துத் தீய்த்து, கொடிய உயிரினங்களையும் விரட்டி, மக்களை காத்துக் காப்பாற்றி விடுகிறது.

மரம் வளர்ப்போம், காடுகள் அமைப்போம் என்று மனிதனைத் தாவர உலகைத் வளர்க்கச் செய்வதால், உலகச் சூழ்நிலையே உயிர் காக்கும் சூழ்நிலையாக மாறிவிடுகின்றது.

நாம் பிராணவாயுவை உள்ளிழுத்து சுவாசிக்கிற போது, அது உணவுடன் கலந்து எரிந்து, சக்தியை உண்டு பண்ணுகிறது. அதுவே, மக்களை வலிமையுடன், மகிமையுடன் வாழச் செய்கிறது.

மக்களுக்கு உணவை விளைத்துத்தர வெப்பம், உயிர்காக்க நல்ல உயிர்காற்று தந்து; உலகின் குளிர்ச்சியை மாற்றி சீரான வெப்பம் தந்து, உலகின்

இருளைப் போக்கி, நடமாடவும் நல்வாழ்வு வாழவும் வைக்கிறது.

இதனால் தான், ஆதிபகவன் என்பது, முதன்மையான சூரியன் என்றும், எல்லாவற்றிற்கும் மூலமான ஆதவன் என்றும் இங்கே பொருளுரைத் திருக்கிறோம்.

கைக்கெட்டாத தூரத்தில் இருந்தாலும், கண்ணுக்கெதிரே வந்து காட்சியளிக்கிற கடவுளாக சூரியன் விளங்குகிறது.

ஆதிகால கிரேக்கர்கள், மற்றும் ரோமானியர்கள் மற்றும் அகிலத்தார் எல்லாமே, சூரியனின் சக்தியை வியந்து போற்றி, தெய்வமாக மனதில் ஏற்று, சூரியக் கடவுளாக வைத்துக் கொண்டாடி வாழ்ந்தனர் என்பது வரலாறு.

பண்டைக் காலத்தில், பாரத தேசத்தில் பல மதங்கள் இருந்தன. சூரியவாதி, சந்திரவாதி, நவக்கிரகவாதி, பஞ்ச கோச வாதி, வாழ்வாதி, காலவாதி, மந்திரவாதி, யந்திரவாதி, அவ்விதவாதி எனப் பல மதத்தவர்கள் எல்லோரும் இருந்தார்கள். இம் மதத்தவர்கள் சூரிய சந்திராதிகளையே தெய்வமாகக் கொண்டார்கள். தற்காலத்தில் இந்த மதங்கள் இல்லை. *(அபிதான சிந்தாமணி பக்கம் 1248)*

ஆக, சூரிய வணக்கம் என்பது மக்களுக்குப் புதிதல்ல.

**''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை யாக்**
**கொள்வர் பயன் தெரிவார்''** *(104)*

*என்று வள்ளுவர் பாடியிருக்கிறாரே!*

அதனால் தான், மத உணர்வில் முகிழ்த்துப் போயிருந்த மக்களைத் தன் பக்கம் திருப்பும் பொருட்டு, கடவுள் வாழ்த்து என்ற தலைப்பிட்டுத் தந்து, தான் சொல்லப் போகின்ற நல்ல பல செய்திகளுக்கு, வழிகாட்டுதல்களுக்கு, தன் நூலை பயில வைக்கும் நுண்மாண் நுழை புலத்துடன், ஆதிபகவனை ஆர்ப்பாட்டத்துடன், போற்றி வணக்கம் செய்கிறார்.

சூரியனைக் கதிரவன் என்பார்கள். கதிரவன் என்பதற்கு கடவுள் என்ற பொருளும் உண்டு.

கடவுள் வாழ்த்து என்ற பகுதியில், ஒரு தடவை கூட கடவுள் என்ற சொல்லை, வள்ளுவர் பயன்படுத்தவேயில்லை.

கடவுள் வாழ்த்து என்ற தலைப்பைத் தந்து விட்டு, சூரியனைக் கூறி, சூரியனைப் புகழ்ந்து, சூரியனைச் சுற்றியே உலக வாழ்க்கை அமைந்திருக்கிறது என்று பாடுகிறார்.

உலக மக்கள், சூரியனைப் போல, ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு உறுதுணையுடன் வாழ வேண்டும். அதற்குரிய பரந்த மனப்பாங்கை, பண்பாட்டைப்பெற, வழிகாட்டுகின்ற மோன குருவினைத் தெரிந்து, ஞான வழியில் நடக்க வேண்டும் என்பதற்காகவே முதல் குறளில் சூரிய வணக்கம் செய்திருக்கிறார்.

சூரிய தேவன் என்றும், குரு என்றும் போற்றப்படுகின்ற சூரியனால், வாழ்வு பெறுகின்ற மக்களை, வளமோடு வாழச் செய்வது மட்டுமல்ல, தெளிந்த சிந்தையுடன் தெய்வத் தன்மை மிகுந்த

வாழ்வும் வாழச் செய்ய வேண்டும் என்ற வேட்கையுடன் பக்குவப் படுத்துவது போல, பதமாக கடவுள் வாழ்த்தினைப் பாடி யுள்ளார்.

ஒளிமிகுந்த பகவன் முதலாக உலகு தோன்றியது. உலகத்தில் மக்கள் முதலாக இருந்தனர். அறிஞர்கள் நிறைந்திருந்தனர். அவர்கள் வாயைத் திறந்த போது, அகர ஒலி எழுந்தது. அகர ஒலிக்குப் பிறகு, அகர எழுத்துப் பிறந்தது. எழுத்து சொற்களாயின. சொற்கள் பொருளாயின. பொருள் யாப்பாயின. தளையாயின. இலக்கியம் ஆயின. இலக்கணம் ஆயின. மறை, வேதம், சுருதி என்று தொடர்ந்தன.

இப்படி சூரியன் முதற்றே, உயிரினங்களும் மக்களும் , தாவரங்களும் சொற்களும் என எல்லாம் உண்டாயிற்று என்று முதல் குறளில் , தான் கொண்ட கொள்கையை மறை பொருளாக விளக்கியிருக்கிறார்.

நம்மையும் பயப்படுத்தி, பதப்படுத்தி, இதப்படுத்தி, சுகப்படுத்தி, சொர்க்க வாழ்வை அளிக்க இருக்கும் பாடல்களை, இனி ஒவ்வொன்றாகத் தொடர்ந்து காண்போம்.

# 5. அருகில் உலாவரும் ஆதவன்

கண்ணால் காணமுடிகிறது. கருத்தால் உய்த்துணர முடிகிறது. காட்சியும், களிப்புடனே பெறும் மாட்சியும், அளவற்ற ஆற்றல் மிகுந்த ஆட்சியும் கொண்ட அந்த சூரியனைப் போற்றி வணங்கி, முதலிடத்தில் வைத்ததன் நோக்கம் பயனைத் துய்த்திடத்தான். பாரெல்லாம் பெரும் வளத்துடன் வாழ்வை நடத்திடத்தான்.

கண்ணால் கண்டும், கருத்தால் துதித்தும், காதுகளால் செவி மடுத்தும், நேரே உரையாடியும், நெஞ்சினை நிலைநிறுத்த உதவியும், உடன் உறைகின்ற குருவைத் தான், இரண்டாவதாகச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறார் வள்ளுவர்.

அறிவுள்ளவர்கள் அப்படித்தான் வாழ வேண்டும். அருகில் உள்ளவற்றிலிருந்து பெறுகிற பயன்களையே முதலில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை மிக அழகாகச் சொல்லுகிறார். அதனால்தான் அறிவை

'அழிவு வராமல் காக்கிற கருவி' என்கிறார்.

**'அறிவு அற்றம் காக்கும் கருவி' (421)**

அத்தகைய சிறந்த அறிவு, மெய்ப்பொருளைக் காண வைக்கும். நுண்பொருளில் நுழைய வைக்கும். சான்றோர்களுடன் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும். செயற்கரியதை செய்ய வைக்கும்.

ஆகவே, வாழ்வின் பெருமையை வழிப்படுத்தி, நெறிப்படுத்தி, வயப்படுத்தி வழி நடத்திடும். குருவின் உறவுதான், ஒருவரை குணம் காத்து, குலம் காத்து, நலம் காத்து, புகழ் கொடுத்து, பூவுலகில் பெரும்பேறினைப் பொழியும் என்பதில் வள்ளுவர் உறுதியாகவே பேசுகிறார். அவரே ஒரு தெய்வீகக் குருதானே!

**''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்''**

இது இரண்டாவது குறள்.

பரிமேலழகர் உரை:

எல்லா நூல்களையும் கற்றவர்க்கு, அக்கல்வி அறிவானாய பயன் யாது? மெய்யுணர்வினை உடையானது, நல்ல தாள்களைத் தொழாராயின்.

பிறவிப் பிணிக்கு மருந்து நற்றாள். ஆகம அறிவிற்குப் பயன், அவனது தாளைத்தொழுது, பிறவியறுத்தல் என்பது.

பிறவிப் பிணி என்றதும், கடவுள் வாழ்த்தில் ஒரு பாடல் என்றதும், இறைவனைத் தான் இது குறிக்கிறது என்று பரிமேலழகருக்குப் பின் வந்தவர்கள்

எல்லோரும், சுருக்கமாகவும் உருக்கமாவும் அதைப் பின்பற்றியே உரை எழுதிப்போயினர்.

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன? இது திருக்குறளுக்கு விளக்கம் தந்தவர்களின் தெளிவுரை.

கற்றதனால் ஆய பயன் என்ற சொல்லுக்கு இங்கே நாம் புதிய பொருளைக் காண்கிறோம்.

கற்றவர் என்பவர் கல்வி, கேள்விகளில் சிறந்தவர் ஆவார்.

கற்றதனால் பெற்ற அறிவின் பயனாவது, சிறந்த பேரறிவுடையவரது நல்ல முயற்சிகளைக் கண்டு போற்றி, அவரது தாள்களைப் பணிந்து பின்பற்றி வாழ்தல் வேண்டும்.

வாலறிவன் என்பதற்கு, பேரறிவாளன் என்று அர்த்தம். நற்றாள் என்பது நல்ல+தாள் ஆகும். தாள் என்றால் முயற்சி என்று பொருள்.

நல்ல ஞானத்திற்காக, அதில் மேலும் மெய்ஞானம் பெற முயற்சி செய்கிற பேரறிவாளரை ஆணுகி, அவரின் ஆத்ம சீடராகி, அருந்தவக் கலைகளையும அதன் தொடர்பான உரை நிலைகளையும் அறிய முயற்சிப்பதே கற்றதன் பயனாகும்.

இறைவனின் தாள்களைத் தொழுது பணிவது தான், கற்றதன் பயன் என்றால், கல்லாதவர்கள் கடவுளைத் தொழமாட்டார்களா? கல்லாதவர்க்குக் கடவுள் பக்தி வராதா? இருக்காதா? என்பது போல

கரை ஒன்றைக் கட்டி விடுவது போலவே அமைகிறது அந்தப் பாடலின் உரைகள்.

இந்த நாளில் பார்த்தாலும் சரி, எந்த நாளிலும், படிக்காதவர்கள் தாம், பக்தி விஷயங்களில், பேரளவில் ஈடுபடுகின்றனர். கடவுள் பக்தி, பக்தி விழா கொண்டாட்டம் இவற்றில் மிகுதியாக ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களை வழிநடத்துவதே கடவுள் பக்திதான்.

ஆகவே, கடவுளை வணங்குதல்-அவர் திருவடி தொழுதல் என்பது கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் பொதுவான பண்புதான். ஆனால், கற்றவர் யார்? கல்லாதவர் யார் என்று குறளைப் படிப்பவர்களும், உரை எழுதுபவர்களும், விளக்கம் தருபவர்களும் மயங்கிப்போகின்றார்கள்.

தம் குறள் கருத்தைக் குழப்புவார்கள் என்று திருவள்ளுவர் தெரிந்தேதான், இந்தக் கருத்தை தெளிவாக விளக்க, பல குறள்களை பாடி வைத்திருக்கிறார்.

கற்றவர் யார்? கல்லாதவர் யார்?

வள்ளுவரின் குறள் வழியே சென்று, இதற்குரிய விளக்கம் காண்போம்.

**''அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்''** (427)

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று பின் வரக்கூடியதை முன்னமே அறிய வல்லவர்கள் கற்றவர்கள். அதுதான் கற்றதனால் பயன் பெற்ற அறிவு. அப்படி எதிர்காலம் பற்றி முன் கூட்டியே

அறியமாட்டாதவர்கள், எல்லோரும் அறிவில் லாதவர்கள். அதாவது கல்லாதவர்கள் என்று கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் பேதம் பிரித்துக் காட்டியிருக்கிறார்.

ஆகவே, தமக்குப் பின்னாளில் என்ன நேரும் என்று முன்னரே உணர முடியாத கல்லாதவர்களும், கடவுள் பக்தி உள்ளவர்களாக அன்றும் இன்றும் இருந்திருக்கின்றார்கள். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

அதனால்தான், கற்றவர்கள், தங்கள் எதிர்காலத்தை எப்படி ஏற்றுக் கொள்ள வேண்டும்; மாற்றி அமைத்துக் கொண்டு முன்னேற வேண்டும் என்று விரும்பியே, தங்களுக்கு மேலான பேரறிவாளரைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர். அப்படி தெரிந்து கொள்வது தான், கற்றதனால் பெற்ற பயன், அறிவு என்கிறார் வள்ளுவர்.

கற்றதனால் ஆய பயன் என்பது, தன் எதிர் காலத்தை வளமானதாக்கும் வல்லமையுள்ள ஒரு குருவைத் தெரிந்தெடுப்பதுதான்.

நல்ல மாணவனாக குருவைத் தெரிந்து கொள்வதும், அவர் திருவடி தொழுது ஏத்துவதும் தான் கற்ற பயன்களிலும் மற்ற பயன்களைப் பெறும் மார்க்கமாகும்.

இப்படி அறிவால் தெளிவும், பொலிவும் கொண்டவர்கள் பற்றி, நான்கு வகையாகப் பிரித்துக் காட்டுவார்கள் அறிஞர்கள்.

1. தொலை தூரத்தில் இருந்தாலும், ***தீப்பொறி***

போல எதையும் பற்றிக் கொண்டு, அறிவு பெற்றுக் கொள்கிற ***முதல் தர மாணவன்.***

2. குரு அருகில் இருக்கும்போது, அவர் தொட்டதும், அவரது உணர்வுகளைப் பற்றிப் பெற்றுக் கொள்கிறவன். இவன் ***கற்பூரம் போன்ற இரண்டாந்தர மாணவன்.***

3. பற்ற வைத்தாலும், மரக்கட்டைகள், உடனே பற்றிக் கொள்வதில்லை. பல முயற்சிகளுக்குப் பின்னர் ஊதி ஊதித்தான், தீயைப் பற்ற வைக்க வேண்டும். கட்டைகள் தீப்பற்றுவதுபோல, ***கஷ்டப் பட்டு, அறிவு பெறுகிற மூன்றாந்தர மாணவன்.***

4. என்னதான் சொன்னாலும், எவ்வளவு தான் முயற்சித்தாலும், மனதில் ஏறாத, ஏற்றிக் கொள்ள முடியாத மூடம், அதாவது ஜடம் போன்ற மாணவன். வாழைத்தண்டில் எப்படித்தான் முயன்றாலும் தீயை ஏற்றவே முடியாத ***பச்சை வாழைத்தண்டைப் போன்ற நான்காம் தர மாணவன்.***

இப்படி பல பிரிவுகளில் இருந்தாலும், மாணவர் களது நிலை, தங்கள் குருவின் பின் சென்று பயிலுதல், வாழ்க்கையைத் தொடருதல் என்பது தான் மிகவும் முக்கியம்.

பேரறிவாளனாக விளங்கும் வாலறிவனின் நற்றாள் என்கிறார் வள்ளுவர்.

நற்றாள் என்பதை நல்+தாள் என்று பிரிப்பார்கள். நல்ல தாள் என்பது நல்ல திருவடிகள் என்று பொருள் தரும். நல்ல தாள் என்பது நல்ல முயற்சி என்றும் பொருள் தரும்.

பேரறிவாளனின் நல்ல முயற்சி என்பது, இவ்வுலக வாழ்க்கையிலேயே, பேருயர் நிலையைப் பெறுவதுதான்.

மேலும் மேலும் பெருமுயற்சிகளில் முயன்று, செயற்கரிய செய்கின்ற பெரியோராக, உயர் நிலையை அடைந்து நிற்கின்ற குருவின் நல்ல திருவடிகளை என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

அத்தகைய முயற்சி மிகுந்த திருவடிகளை, **தொழுதல்** என்று ஒரு சிறந்த சொல்லை இங்கே பெய்திருக்கிறார் வள்ளுவர்.

தொழுதல் என்ற சொல்லுக்கு காணல், காண்டல், கைகூப்பல், தெண்டனிடல், பணிதல், பரவுதல், பார்த்தல், பாராட்டுதல், போற்றல் வந்தித்தல், வணங்குதல், வழிபடல் என்று பல பொருள்கள் உண்டு.

கண்ணுக்குத் தெரியாத கடவுளை எண்ணத்தால் நினைத்து, இதயத்தில் ஒரு உருவை இதமாக ஏற்படுத்திக் கொண்டு தான் தொழ முடியும்.

ஆனால், அளவற்ற அன்பினால், முடிவில்லாத மெய்யுணர்வுடன் விளங்கும் குருவினை, நேரே காண முடிகிறது. (காணல்) நிறைவான மனதுடன் தரிசிக்க முடிகிறது. (காண்டல்) மெய் சிலிர்க்க கைக் கூப்பி களி பெற முடிகிறது (கை கூப்பல்) மனம் மகிழ, திருவடிகளைத் தொட்டு மார்பு நிலத்துற விழுந்து வணங்க முடிகிறது. (தண்டனிடுதல்)

அவர் முன்னே எளிமையாகி பணியமுடிகிறது (பணிதல்). அவரது ஆன்ற ஆன்மீக அருஞ் செயல்களைப் புகழ்ந்து சொல்ல முடிகிறது. (பரவல்).

பார்த்துப் பார்த்து, மனம் பரவசப்பட்டுப் பட்டு போற்றியும் புகழ்ந்தும், வந்தித்தும், வணங்கியும், வழிபட்டும் துதி செய்யும் பேறு, எதிரே இருப்பதால் தான் முடிகிறது.

தேடி யலைந்தாலும் தரிசிக்க முடியாத தெய்வத்திற்கு இவை யெல்லாம் செய்ய இயலாத தல்லவா! அதனால் தான் இந்த ஆன்ற சொல்லான, பொருள் பொதிந்த பெருமைமிக்க சொல்லான, **தொழுதல்** என்று பயன்படுத்தினார்.

ஆகவே, கற்றதனால் மேற்கொள்ளும் முயற்சி என்னவெனில், தனது பெயரையும் புழையும் நிலை நாட்டி, இந்தப் பேருலகில் என்றென்றும் வாழ்வதற்கு வழிகாட்டி, உபதேசித்து உதவுகின்ற குருவின் அரிய ஆற்றல்களை, முயற்சிகளை, மனதில் ஏற்று, அவரது சீர்மிகுந்த திருவடிகளைத் தொழுது, வணங்குதல் வேண்டும் என்கிறார்.

கற்றதன் முடிவு, சில சமயங்களில், **தான் நான்** என்ற தற்பெருமையும் தற்போதமும் நிறைந்த தலைக் கனத்தையும் உண்டு பண்ணிவிடும். அதனால், பலர் கல்விமான்களாக இருந்த போதிலும் குணக் கேடர்களாக, மதிகேடர்களாக வாழ்வதுண்டு. சிந்திப்பதுண்டு. செயல்படுவதுண்டு.

மற்றவரை மதிக்காத பண்பை வளர்த்துக் கொண்டு, மித மிஞ்சிய செருக்கால், சீரழிந்து போவதும் உண்டு.

அதனால்தான், கல்வி கற்றதன் பயன், பணிவோடு இருப்பது. பெரியவர்களை மதிப்பது. அவர்கள் தாள் பற்றி நடந்து, தன்னை வளர்த்துக்

கொள்வது. உயர்த்திக் கொள்வது என்ற பயனை, மிகவும் பக்குவமாக வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

குருவினை மனமார ஏற்றுக் கொள்வதுதான், கற்றவர் காணும் நற்பயன். கல்லாதவர்கள் எல்லோரும் குருவை வியந்து பார்ப்பார்கள். விதந்து பேசுவார்கள். அருகில் செல்ல அஞ்சுவார்கள். உரையாடப் பயப்படுவார்கள். கோயில் முன்னே சென்று, தூரத்தே நின்று, வணங்குவதைப்போல, கல்லாதவர்கள் செல்வார்கள் என்ற ஒரு சூழ்நிலையையும், இந்தக் கற்றதன் பயன் என்ற வார்த்தை குறித்துக் காட்டுகிறது.

கற்றதனால் பெற்ற அறிவு, குருவை அறிந்து கொள்கிற ஆற்றலையும், குருவோடு உடனிருக்கும் துணிவையும், கூறுகிற அறிவுரைகளை ஏற்றுக் கொள்கிற பக்குவத்தையும் அளிக்கிறது.

ஆகவே, தன் எதிர்கால வாழ்வினை ஒளிமயமாக்க வல்ல,பேரறிவாளராகத் திகழும் குருவினது, அரிய பெரிய முயற்சிகள் மிகுந்த நல்லாற்றல் மிக்கத் திருவடிகளைத் தொழுது நடந்து, உயர்ந்து மிளிர்வதே கற்ற கல்வியின் பயன் என்று வள்ளுவர் கூறுகிறார்.

***சகல சக்திகளையும் தந்து காப்பது சூரியன்*** என்று முதல் குறளில் பாடினார் வள்ளுவர்.

உயிர் காக்கும் பிராண வாயுவை, தாவரங்கள் மூலமாக, உற்பத்தி செய்து தருவது, காரிருளாகக் கவ்விக் கிடக்கும் இருளை விரட்டி, பகலைத் தந்து உலகில் அழகை வெளிப்படுத்துவது. மனிதர்களைத் தாக்கும் நச்சுக் கிருமிகளை விரட்டியும் மாய்த்தும் மனித குலத்திற்கு நல்வாழ்வை நல்குவது. அத்துடன்

உலகின் குளிரைப் போக்கி, வெப்பத்தை வழங்குவது.

இப்படி உலக மக்களுக்கு எல்லா வகையிலும் காத்து, உற்றுழி உதவி, உயிர் காக்கும் சூரியனைப் போல, மண்ணுலகில் வாழும் மக்களுக்கு வாழ்வளித்து வளம் சேர்க்கிற ஆற்றல் **'குரு'**என்கிற நல்லாசான்களுக்கே உண்டு என்பதைத்தான் இரண்டாவது குறளில் பாடுகிறார்.

அறியாமை இருளை மனதில் இருந்து அகற்றுவது, ஆனந்தம் தருகிற ஆன்ம ஒளியை மனதில் பரப்புவது, அறியாமையால் செய்கிற விஷத் தன்மையுள்ள கொடிய செயல்களை மக்கள் செய்யாமல் விரட்டும் வகைகளை போதிப்பது, உடலால் வலிமையும், உணர்வால் வளமும், வாழ்வால் எல்லா நலமும் பெற குரு உதவுவதால் தான், வானத்தில் உலாவரும் சூரியன் போல அருகில் உலாவருகிற ஆன்ம குரு இருக்கிறார்.

அவரது நற்றாள் தொழுது, பயன்களைப் பெறுக என்பதுதான் இரண்டாம் குறளின் இதயக் குரலாக நமக்கு ஒலிக்க வைக்கிறார் ஒல்காப் புகழ் கொண்ட வள்ளுவத் தேவர் அவர்கள்.

# 6. மலரும் மாண்புகள்

**''மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்'' (3)**

கடவுள் என்ற சொல் **கட+உள்** என்று பிரிகிறது. உள் என்றால் உள்ளம் என்றும், உள்ளது என்றும், அகம் என்றும் பொருள் தருகிறது.

உள்ளத்தை அடக்கும் ஆற்றல்தான், உலகில் அரிய செயல் என்ற உண்மையை, உலகத்தார் அனைவரும் ஒத்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, உள்ளே நிகழ்கிற, தலை விரித்தாடுகின்ற உணர்ச்சிகளை, தவிப்புகளை, ஆசைகளை, வெறிகளை எல்லாம் அடக்கிக் கடந்து வெளிவருகிற வரைத்தான் கடவுள் என்றனர். அவரையே வணங்கி, வழிபட்டனர்.

உலகத்தில் மனிதராகப் பிறந்து, அத்தகைய அரிய ஆற்றலை, வல்லமையை வளர்த்துக் கொண்டு வாழ்ந்து காட்டுகிற, சான்றோராக விளங்குகிற, உயர்ந்தோராகிய குருவையே, இங்கே மலர்மிசை ஏகினான் என்று குறிக்கிறார்.

***மலர்*** என்றால் மலர்ச்சி என்று பொருள். மலர்ச்சி என்றால் எழுச்சி, களிப்பு என்று பொருள். அறிவுத் தெளிவால் மலர்ச்சி பெற்று, அரிய திறமைகளில் எழுச்சி பெற்று, ஆன்மாவில் இன்பத்தைப் பெருக்கக் கூடிய ஆனந்தத்தை மனதில் நிறைத்துக் கொண்டு, அந்த உயர்ச்சி மிகுந்த உணர்வுடன், மேல்நிலையில் உலா வருகிற குரு என்று இதற்கு பொருள் வருகிறது.

***மிசை*** என்ற சொல்லுக்கு உயர்ச்சி, மேல், உணர்வு என்பது பொருள்.

துன்பமே உலகம். துயரமே வாழ்வு. வாழ்வதே சாபம். அதைத் தொடர்வதே பாபம் என்று அன்றாடம் அரற்றுவது மனிதப் பண்பு. அவர்களிடையே, உயர்ந்த வாழ்க்கையும் , உன்னதப் பேராற்றலும் கொண்டு, ஆனந்தக் களிப்புமாக வாழ்கிறவர் அற்புதமானவரல்லவா!

அவரிடம் சென்றுதான் அறிவுடைய மக்கள் சேர வேண்டும். அந்த உயர்ந்தோர் வந்து, மக்களை அழைக்கக் கூடாது. வா என்று ஆணையிடக் கூடாது. வருத்தக் கூடாது. வற்புறுத்தக் கூடாது.

விரும்பியவர், தான் பெற்ற வேட்கை யினாலே, தன்இடம் கடந்து, உயர்ந்தோர் இடம் தெரிந்து, அவர் இடம் போய் சரணாகதி போல சேர்ந்து கொள்ள வேண்டும் என்பதால் தான், ***சேர்ந்தார்*** என்றார் வள்ளுவர்.

இடர்கள் பல வந்தாலும், தடைகள் பல எதிர் நின்றாலும், தடுமாற்ற மில்லாமல் போய் சேர்வதைத் தான், சேர்ந்தார் என்ற சொல்லால், அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார் வள்ளுவர்.

அவ்வாறு, தெரிந்து தெளிந்த, திருவான குருவிடம் போய்ச் சேர்ந்தவர்கள், இந்த நிலமிசை நீடு வாழ்வார். அதாவது இந்த நில உலகில், மக்கள் மனதில், நீண்டகாலம் வாழ்வார்கள். ஆமாம், நிலைத்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

இது எப்படி முடியும் என்று கேட்கலாம். எல்லாம் கடந்தவரை, எதிலும் நிறைந்தவரை, ஏற்றம் மிகுந்தவரை, வாழ்வை வழி நடத்துகின்ற வல்லவரைத் தான் நாம் குரு என்று கூறிக் கொண்டு வருகிறோம்.

குருவின் இயல்பு என்ன? அவர் எப்படி தன்னிடம் வந்து சேர்ந்தாரை, நல்ல மாணவன் என்றும், தொடர்ந்து வழிவருகிற துணிவும் திறமையும் உள்ளவன் என்றும் உணர்ந்து கொண்டு, தெளிவு மிக்க ஞானத்தை வழங்குகிறார்?

குருவானவர் எப்படி மாணவனுக்குப் போதிக்கிறார்? மந்திரம் சொல்லித்தந்தா? இல்லை. அந்த மாணவரை, அறநெறிக்கொள்கையில், ஆழமாக சிந்திக்க வைத்து--மனதில் ஒன்றிப் போய், வயப்பட்டு விடுகிற,மேன்மை நிலையை அளித்து விடுகிறார்.

இதைத்தான், ***தீட்சை*** என்பார்கள். வட மொழியில் தீட்சை என்றால் உபதேசம். உபதேசம் என்றால் நன்மார்க்கத்திற்குறிய அறிவுரை, போதனை என்றும் கூறலாம்.

தன்னைப் பின்பற்றி, தன்னையே நம்பி வாழ்கிற மாணவர்களுக்கு, நன்மார்க்க போதனைகளை, குரு எப்படியெல்லாம் உபதேசிக்கிறார் என்று, வடமொழி நூலார் 9 வகையான உபதேச வழிகளைக் கூறுகின்றார்கள்.

1. குருவானவர், தனது சீடனின் தலையிலோ அல்லது உடலிலோ தொட்டுக் கொண்டு ûJÏÁõJ¿¼. {ÂÁ ***ஸ்பரிச தீட்சை*** என்பர். குருவானவர், மாணவனைத் தொடுகிறபோதே, குருவின் உடலில் உள்ள சக்தி, ஆற்றல், ஞானம் எல்லாம், அதன் வழி மாணவரைப் போய்ச் சேருகிறது என்பது யோகியரின் கூற்று.

2. குருவானவர், தன்னை மறந்த நிலையில் தியானத்தில் இருந்த பிறகு, தன் கண்களைத் திறந்து மாணவனின் கண்களை அருளுடன் பார்க்கும் போது, உண்டாகும் உபதேசம். இதை ***திருஜ்தீட்சை*** என்பார்கள் .

3. குருவைக் கண்டதும், தனது ஐம்பொறிகளும் அடங்க, ஆன்ம உணர்வுகளால் மகிழ, அவருடன் உரையாடுவதாலோ அல்லது அவர் திருமேனி தீண்டுகிற போதோ, உண்டாகும் உணர்வும் தெளிவும். இதை ***சாம்பவி தீட்சை*** என்பர்.

4. குருவானவர், தனது கண்களால், சகமாணவரின் கண்கள் மூலமாக, மெய்ஞானத்தை உணர்த்துவது. இதற்கு ***நயன தீட்சை*** என்று பெயர்.

5. குருவானவர், தனது சீடனுக்கு, தன் மனத்தால் நினைத்தபடியே ஞானத்தை உண்டாக்குவது. அதாவது, சீடரின் செயல்கள் எல்லாம் குருவினைக் கவர்ந்து விடுவதால், அந்த மாணவன் மெய்ஞானம் பெறத் தகுதி பெற்று விட்டான் என்று எண்ணுகிறபோது, இப்படி உபதேசம் செய்வது மரபு என்கின்றனர் இதற்கு ***மானச தீட்சை*** என்று பெயர்.

6. மந்திரம் என்ற சொல்லை மன்+திரம் என்று

பிரிப்பார்கள். மன்என்றால் நினைப்பது என்றும், திரம் என்றால், திரும்பத் திரும்ப என்றும் பொருள்.

அறம் சார்ந்த, திறம் தேர்ந்த நல்ல நினைவுகளைத் திரும்பத் திரும்ப, உச்சரித்து சொல்வதைத்தான் மந்திரம் என்பார்கள்.

இவ்வாறு, உள்ள அரிய மந்திரங்களை உபதேசித்து, மாணவனை அருட்பாலிப்பது. இதற்கு ***வாசக தீட்சை*** என்று பெயர்.

7. தனக்கும் மேலான ஒரு சக்தியைப் பற்றி ஆகம நூல்கள் வழியாக தெளிவாகத் தம் மாணவர்களுக்குப் போதிப்பது. அதற்கு ***சாத்திர தீட்சை*** என்று பெயர் .

8. தன்னை அடக்கும் திறமை மிகுந்த தேக நெறியாகத் திகழ்வது யோகங்கள். அத்தகைய யோக வழியை மாணவனுக்கு உணர்த்துவது ***யோக தீட்சை*** என்று பெயர் .

9. தீ வளர்த்து, அதன் தொடர்பான பல காரியங்களை செய்து, திறனை உணர்த்துவது ***அவித்ரீ தீட்சை*** என்று பெயர்.

இவ்வளவு விளக்கமாக, இந்த அறிவுறுத்தும் தீட்சை பற்றி, இங்கே ஏன் கூறியிருக்கிறேன் என்றால், நான்மறையை ஏட்டில் எழுதி, எல்லோருக்கும் சொல்லக் கூடாது என்று மூடிவைத்தவர்களின் முயற்சியை முறியடித்து, பொதுமக்கள் எல்லோரும் புரிந்து கொண்டு, பயன் பெறும் வகையில் வள்ளுவர் எளிதாக, இனிதாகக் குறளை எழுதினார் என்று ஏற்கனவே நீங்கள் படித்திருக்கின்றீர்கள்.

அப்படிப்பட்ட கருத்துக்களையும் இங்கே

கொடுத்தால், வள்ளுவர் காட்டிய வழியும், ஏட்டில் எழுதாத இலட்சிய முழக்கமும் எத்தகையது என்று தெளிவாக்க முடியும் என்ற அவாவினால்தான்.

குருவானவர், தன்னுடன் சேர்ந்த மாணவர்கள் யாவருக்கும், எப்படியெல்லாம் ஞானத்தை உபதேசிக்க முடியும் என்று கண்டோம்.

அவ்வாறு, குருவைச் சேர்ந்தவர் யாவரும், இந்த நில உலகத்தில், நிலை பெற்ற வாழ்வைப் பெற்று, நீண்டகாலம் துன்பமின்றி இருந்து, இன்பமுடன் வாழ்வார்கள்.

குருவைச் சேர்ந்தால், அவருடன் சேர்ந்து விட்டால், மக்கள் உள்ளங்களில் இடம்பெற்று, நீண்டகாலம் இன்பமாக வாழ்ந்து விடமுடியுமா? என்று நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்கலாம்.

குருவின் திருவடியை சரணடைபவர்கள் செய்கிற காரியம் எப்படி இருக்க வேண்டும் என்று, வள்ளுவர் தன் குறள் மூலமாக சுட்டிக்காட்டிச் சென்றிருக்கிறார்.

**''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்''** (294)

ஒருவன் தன் உள்ளத்தில் உண்மையை நிறைத்து, பொய் பேசாமல் ஒழுகி வந்தால், அதாவது, நிதமும் இந்த நிலையிலிருந்து விலகாது, ஒரே தன்மையில் வாழ்ந்து வந்தால், அவன் உலகத்தில் வாழ்கின்ற அத்தனை பேர்களின் உள்ளங்களிலும் இருக்கிறான்.

பொய்மை என்பது உண்மைக்கு எதிர்மாறானது. வாய்மைக்கு முரண்பாடாகி பெருமையை அழிப்பது.

வாய்மை என்பது தீமை உண்டாக்காத சொல்லைப் பேசுவதாகும். தவத்தோடு தானம் செய்வதை விட, பொய் பேசாமல் வாழ்வது பெரிய செயலாகும். பொய்மை இல்லாது வாழ்ந்தால், அது அற வழிகள் எல்லாவற்றையுமே, ஆற்றுகின்ற ஆற்றலைப் பெற்றுத் தரும் என்கிறார் வள்ளுவர்.

அப்படிப்பட்ட அறவாளர், அகிலத்தாரின் அகங்களுக்குள்ளே நின்று வாழும் நீடு பேறுடையவராக விளங்குகிறார்.

அப்படிப் பொய்மையல்லாத வாழ்வு வாழத்தக்க, பேராற்றலைப் போதித்து, வாழ்வாங்கு வாழச் செய்யும் வல்லமைதான் குருவினிடம் குடி கொண்டிருக்கிறது.

குருதான் திருவாகத் திகழ்கிறார். அவர் காட்டுகிற மார்க்கம் தான், ஒளிமயமான அருள் மார்க்கம். இதைப் பட்டினத்தார், மனம் நெகிழ்ந்து பாடியிருப்பதைக் கேளுங்கள்.

**''குருமார்க்கம் இல்லாத குருடருடன் கூடிக்**
**கருமார்க்கத் துள்ளே கருத்தழிந்து கெட்டேனே''**

**''ஆசாரம் இல்லாத அசடருடன் கூடிப்**
**பாசாங்கு பேசி மதியிழந்து கெட்டேனே''**

குருவானவரின் வழிகாட்டல் இல்லாமல் வாழ்பவர்களை குருடர் என்று அழைப்பதும்; ஆசாரம் இல்லாதவர்களை (ஒழுக்கம் இல்லாத) அசடர் என்று பாடுவதிலிருந்தும், குருவின் உறவு எத்தகைய அருள் மிகுந்த, ஒளிமயமான வாழ்வை அளிக்கிறது என்பதைப் பார்த்தீர்களா!

சித்தி மிகுந்த சித்தராக விளங்கிய தாயுமானவரே, தன் குருவாக இருந்து சித்தர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று வேண்டிப் பாடுகிறார் என்பது நம்மை நெகிழ வைக்கிறது. குருவின் மாண் அடி என்ற சொல்லையும் நாம் பார்ப்போம்.

குருவின் மாண்பு மிகு திருவடிகள் எப்படிப் பட்டது என்றால், மாட்சிமை மிக்க அடிகள் என்று பொருள். மாட்சிமை என்றால் அழகு, பெருமை, அமைதி, ஆற்றல் என்றெல்லாம் அர்த்தங்கள் உண்டு.

இப்போது கூட, பெரியவர்களின் பாதம் பணிந்து வணங்குவது, நடைமுறையில் இருந்து வருகிறது. உயர்ந்த பண்புள்ள, புகழ்பெற்ற பெரியவர்களை சந்திக்க நேர்கிற போது, அவர்கள் முகத்தை முதலில் பார்க்காமல், பாதங்களைத் தான் முதலில் பார்த்து, அந்தத் திருவடிக்கு வணக்கம் செய்து எழுவது, பண்பாடாக இருக்கிறது.

அதற்குப் பிறகே, முழுவதுமாக (குருவைத்) தரிசிப்பது என்பது பண்பாடு. இதையே பாதாதிகேசம் என்றும் கூறுவார்கள். மாண்புமிகு குருவின் திருவடிகளைத் தொழுது விட்டால் போதுமா என்றால், அல்ல. அவர் அடியொற்றி, நடந்து வாழ்கிற போதுதான், எல்லாப் புகழும் உண்டாகும்.

அடி என்பது இங்கே அடியொற்றி (Foot steps) நடத்தல் என்ற அர்த்தத்தைக் குறிக்கும். குருவின் திருவடியை தாமரை மலர்க்கு ஒப்பிடுவதும், அந்தத் திருவடித் தாமரைகட்கு வணக்கம் செய்வது, அறிவோரின் கடமை என்றும் அற நூல்கள் அழகாகக் குறித்துச் செல்கின்றன.

இந்தக் குறளுக்கு எடுப்பான தெளிவுரையை இனி காண்போம். அன்றலர்ந்த மலர்போன்ற சிந்தையும் செழுமையும், அழகும் கவர்ச்சியும், எழுச்சியும் களிப்பும், கொண்ட குருவின் மாண்புமிகு திருவடிகளைப் போற்றி அவரின் வாழ்வுடன் நடந்திட அவரைச் சேர்ந்தவர்கள், யாவரும் இந்த நிலவுலகில் புகழும் பெருமையும், நிலைத்து நிற்கின்ற நீண்ட இன்ப வாழ்வினையும் பெற்று உய்வார்கள்.

# 7. துன்பம் கலவாத இன்பம்!

**''வேண்டுதல்வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல''**

இது திருவள்ளுவர் தந்த நான்காவது குறள்.

முதல் குறளில் அன்றாட வாழ்க்கையில் வளம் சேர்க்கவும்; மக்கள் உடலில், நலமும் பலமும் சேர்க்கவும்; ஆர்வமுடன் வாழ்க்கை நெறிகளை ஒழுங்காகப் பின்பற்றுவதற்காகவும் உதவிகளைச் செய்து காக்கிற சூரியனை வணங்கிப் பாடுகிறார்.

வாழ்த்திப் பாடி, குரு வணக்கம் செய்து, தான் கூறப்போகும் அருமை மிகு அறம் பாடி, அற்புதக் கருத்துகளுக்கெல்லாம், பின்பற்றி ஒழுகப் போகிற மக்களுக்கு, எல்லா காலத்துக்கும் வாழ்வும் வளமும் சேர்க்க வேண்டும் என்ற, நம்பிக்கையுடன் அப்படிப் பாடுகிறார்.

தூரத்திலே தோன்றி, தரக் கூடிய அத்தனை பயன்களையும், வளங்களையும் வழங்கி, மக்களை மருட்டுகின்ற, விரட்டுகின்ற, மிரட்டுகின்ற தீய சக்திகளையெல்லாம் துரத்தி அடித்துக்காக்கின்ற காரணத்தால் தான், ஆதி பகவன் என்று முதலில் அழைத்தார்.

பகவன் என்றால் கடவுள் என்று அர்த்தம். குரு என்று பொருள். சூரியன் என்று அர்த்தம்.

பகவான் என்றாலும் சூரியன் என்றும், கடவுள் என்றும் பொருள்தான். கடவுள் என்றாலும், பகவன், தெய்வம், குரு என்று தான் அர்த்தம்.

அதனால்தான், சூரியனை பகவன் என்று அழைத்தவர்கள் குருமார்களை, பயபக்தியோடு அழைத்த பொதுமக்கள் , சூரியபகவான் என்று கூறி, சூரிய வணக்கம் செய்தார்கள்.

***மெக்சிகோ மதம்*** என்று ஒன்று இருந்தது. அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ தேசத்தவர்களாகிய, ஆதிவாசிகள். அவர்கள் ஆதிகாலத்தில், சூரியனைத்தான் தெய்வமாக பூசித்து வந்தார்கள். (அபிதான சிந்தாமணி பக்கம் 1341)

தன்னை நம்பியவர்களை, ஒரு நாளும் ஏய்க்காமல், கோபித்துத் தீய்க்காமல், கண்போல காத்து வருவதால்தான், கண்கண்ட தெய்வமாக, கை கொடுக்கும் தெய்வமாக, குரு என்று சூரியனை தெய்வமாக்கி வழிபட்டனர் அக்கால மக்கள்.

சூரியன் தூரத்தில் இருந்தாலும், உடல் பூர்வமாக, உணர்வு பூர்வமாக, உயிருக்கு ஆதாரமாக, உடனிருப்பதால்தான், கை குவித்து வணங்கிடும் குருவாகக் கொண்டனர் கற்றோர்கள்.

இத்தகைய உயர்குருவை முன்னிறுத்தி, மனித குலத்தை மாண்பு மிக்க இனமாக உயர்த்தும் வல்லமை யுள்ளவர்களைத் தான் குரு என்றனர். மனித வடிவில் இருந்து, மகா காரியங்களைச் செய்கிற மாமனிதர்கள் தான் குரு ஆனார்கள்.

உலகியல் கலைகளைப் பற்றி போதனை செய்து அறிவை வழங்குபவரை **சிட்சை குரு** என்றும்; மெய்யுணர்வு நெறிபற்றி, மேன்மை நிலைக்கு உயர்த்துகிற வண்ணம், அறிவுறுத்துபவரை, **திட்சை குரு** என்றும் வேதங்கள் விளக்குகின்றன.

ஆகவே, சீடனுக்கு உபதேசிக்கின்ற குருவுக்கு **சுவகுரு** என்றும், குருவின் குருவாக இருந்து, மெய்யுண்மைகளையும், மேன்மை மிகு நுண்மைகளையும் தெரிவித்துத் தெளிவிக்கும் குருவுக்கு **பரமகுரு** என்றும் வேதங்கள் விளக்கம் கூறுகின்றன. பரமகுரு என்றால், ஆசாரியனுக்கு ஆசாரியன். சிறந்த குரு. முற்றுந்துறந்த மேன்மையாளர்.

இத்தகைய பரம குருவுக்கும் குருவாக விளங்குபவன் மேலிடத்தில் இருப்பவன். அவனை **பரமேட்டி குரு** என்பார்கள். பரமேட்டி என்றால், விண்வெளியிலுள்ள, ஐம்பூதங்களில் ஒன்று.

அந்த ஒப்பற்ற ஒன்றுதான் சூரியன்.

சூரியன் தான் குருவுக்கு குருவாக, குரு பராபரனாக இருந்து, மனித குலத்தை மட்டுமல்ல, மண்ணையும் விண்ணையும் காத்து வருகிறான்.

தரைப்பகுதிகள் காற்று மண்டலமாக, கடல் பகுதிகள் நீர் மண்டலமாக, விண் பகுதிகள் அனல்

மண்டலமாக விளங்குவதை நாம் அறிவோம்.

ஐம்பூதங்கள் என்பது, நீர், நெருப்பு, காற்று, நிலம், விசும்பு என்பதையும் நாம் அறிவோம்.

சூரியன் தீப்பிழம்புதானே. நெருப்பிற்குப் பின் நின்று உலா வருவது காற்று.

காற்றிரண்டும் கலந்து (ஹைடிரஜன்+ஆக்சிஜன்) ஒன்றாக மாறுவது நீர். விண்ணில் சூரியனின் தாக்கத்தால் உண்டாகும் முழுமைகள் இவைகள்.

ஆக, ஐம்பூதங்களிலும், முதன்மையாக நின்று விளங்கும் சூரியனே, முதன்மை குருவாக விளங்குகிறார்.

அவனது முகம்பார்த்து, மன்பதைக்குச் சுகமும் சொர்க்கமும் (பேரின்பம்) தருவதற்காகத்தான், மண்ணுலகில், மனித வடிவமாக, வலம் வருகின்ற குருவின் பெருமையைக் கூறி வள்ளுவர், வணக்கம் கூறி பாடுகிறார்.

இந்தப் பாடலை நாம், இப்படிப் பிரிப்போம்.

**வேண்டுதல் வேண்டாமை**
**இலான் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும்**
**இடும்பை இல**

வேண்டுதல் என்றால் என்ன? வேண்டாமை என்றால் என்ன? வேண்டுதல் என்றால் விரும்புதல் என்று பொருள்.

விரும்புதல் என்பது மனித மனத்தின் முதல் நிலை. அப்படியென்றால் மனதின் பல நிலைகள் என்ன?

***விருப்பம், ஆசை, வேட்கை, வெறி*** என்று நான்கு நிலைகள் உண்டு.

1. ***விருப்பம்*** என்பது பார்த்த ஒரு பொருள் மீது, அது பயன் படாது போனாலும் சரி, பிரியம் வைப்பது. அது தேவையென்றாலும் சரி, தேவையில்லை என்றாலும் சரி, அல்லது அது பயன்படாது என்று தெரிந்தாலும் சரி. அடைய வேண்டும் என்பதற்காக ஏற்படுகிற முதல் அவா நிலை.

இந்த விருப்ப நிலையானது, எதிர்பார்த்தது கிடைத்தால் மகிழ்ச்சி பெறுதல். கிடைக்கா விட்டால், சிறிது நேரம் அதற்காக வருந்தி, பிறகு மறந்து போதல்.

இது எல்லோருக்கும், எப்போதும் ஏற்படுகிற சாதாரண நிகழ்ச்சியே. சிறுவர் முதல் பெரியவர் வரை சிந்தையில் ஏற்படுகின்ற சிணுங்கல்கள். சில நிமிடம் கண்சிமிட்டும் சலனங்கள். அவ்வளவு தான் அதற்கு வாழ்வு.

2. ***ஆசை*** என்பது, ஏற்பட்ட விருப்பத்தை அடைய வேண்டும், அடைந்தே ஆகவேண்டும் என்று வற்புறுத்துகிற கட்டாய நிலை. ஆசைப்பட்டதை அடையும் வரை, அன்ன ஆகாரமில்லை. அமைதியான உறக்கமுமில்லை என்று தன்னையும் அலைக்கழித்துக் கொண்டு, சுற்றியிருப் பவர்களையும், சூறாவளியாக ஆட்டுவிக்கும் தன்மை கொண்டது ஆசை.

3. ***வேட்கை*** என்பது ஆசைப்பட்ட ஒன்றை, நியாயவழியில், நீதியான முறையில், நேர்மையாகப் பெற முயலும் அடக்கமான ஆசை. இந்த விவரமான அடிப்படையில் தான், வேட்கையை ***இலட்சியம்*** என்றும் கூறுவார்கள்.

4. ***வெறி*** என்பது, தான் கொண்ட ஆசையை, தணித்துக் கொள்ள முயலாமல், எந்த வழியிலாவது பெற்றே ஆக வேண்டும் என்று புலியாகப் பாயும் பேராசை. கொலை புரியும் கொடூரத் தாண்டவம் ஆட வைக்கும் கொடிய ஆசை.

ஆக, ஒருவரின் மனமதில் முளைக்கின்ற அவாவின் முதல் நிலையைத் தான் குருவானவர் விருப்பம் வராமலேயே தடுத்து நிறுத்தி விடுகிறார் என்பதாக, இதன் பொருள் வருகிறது.

வேண்டாமை என்றால், வெறுப்பு என்பது பொருளாகும். வேண்டாமை எனும் வெறுப்பு வந்து விட்டால், வேண்டலர் என்கிற பகைவர்கள் தோன்றக் காரணமே இல்லாமல் போகிறது.

வெறுப்பு வரக் காரணம் என்ன? அப்படி என்ன மக்கள் மீது ஆத்திரம்? அந்த சூழ்நிலையையும், நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தல் நல்லது.

திருவள்ளுவர் தந்திருக்கும் இரண்டு குறள்களை நாம் கொஞ்சம் ஆய்வு செய்து பார்ப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

**''பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு''. (358)**

ஒருவனின் பிறப்புடன் சேர்ந்த இணக்கமின்மை (அறியாமை) நீங்க, உண்மைப்பொருளைக் கொண்டு அவனுக்கு சிறப்பு அளிக்க முயல்வது அறிவு என்பது இதன் பொருளாகும்.

**''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்'' (972)**

எல்லா மக்களுக்கும் பிறப்பு என்பது ஒரு தவிர்க்க இயலாத தன்மையானதாகத் தான் இருக்கிறது. அவர்களது சிறப்பியல்புகள், அவர்கள் செய்கின்ற தொழில்களின் வேறுபாட்டால் அமைவதில்லை.

இந்த இரண்டு குறள்களையும் இங்கே குறிப்பிட்டுக் காட்டியது, வள்ளுவர் காலத்தில் இருந்த ஒரு காலக்கட்டத்தை சுட்டிக் காட்டத்தான்.

பிறப்பு எல்லா மக்களுக்கும் ஒன்றுதான். பிறப்பென்னும் அறியாமை, அதாவது ஒருவருக் கொருவரிடத்தே உண்டாகிவிடுகின்ற இணக்க மின்மை எதற்கு? என்று வள்ளுவர் பாடியிருக்கிறார்.

மக்களிடத்திலே பிறப்பால் வேற்றுமை இருந்தது என்றால், அந்த வெறுக்கத்தகுந்த வேற்றுமை எப்படி வந்தது என்ற ஒரு குறிப்பை, இங்கே நாம் சிந்தித்தாக வேண்டும்.

பிறப்பு முறை எல்லாம் ஒன்றுதான். ஆனால், மக்கள் எப்படிப் பிறந்தார்கள் என்று, பிங்கல நிகண்டு, அக்கால சூழ்நிலையை, மிக சிறப்பாக விளக்கியிருப்பதைக் காண்போம்.

மக்கள் என்பவர்களை, மாந்தர், மானவர், மானிடர், மண்ணவர், மனிதர் என்றெல்லாம், பொதுவாக அழைப்பது வழக்கம்.

உலகத்தில் மக்களை உண்டாக்குகின்ற, பிறப்பிக்க வைக்கின்ற, வாய்ப்பு பெற்ற ஆண், பெண் இருவரும் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பொறுத்தே, பிறக்கும் குழந்தைக்குப் பெருமையும், பிறப்புக்கு மரியாதையும் வழங்கப் படுகிறது.

உடல் உறவுக்காக கூடுகின்ற வாய்ப்பு பெறுகிற

ஆண், பெண் இருவரின் மண நிலையை, நாம் மூன்று பிரிவாகப் பிரித்துக் காண்போம்.

1. அற நிலை இன்ப இயல்.

2. மற நிலை இன்ப இயல்

3. அவ நிலை இன்ப இயல்

*1. அற நிலை இன்ப இயல்:*

இது அற வழியில், நீதி முறையில், பெண்ணைப் பெற்றோரும், ஆணைப் பெற்றோரும், ஒத்த கருத்துடன் பேசி, மணம் முடிக்கும் பெருமைக்குரிய திருமண வாழ்வியல்.

**ஒத்த குலமும், ஒத்த ஒழுக்கமும்**
**ஒத்த குணமும் ஒத்த ஆயுளும் (பிங்கலம் 765)**

கொண்ட, ஆண் பெண் இருவருக்கிடையே, உற்றோர், பெற்றோர் இவர்கள் வாழ்த்துதலுடன் வாழ்ந்து, அந்த இல்லறத்தார் பெறுகிற குழந்தைகள்.

*2. மற நிலை இன்ப இயல்:*

ஏறு தழுவுதல் மூலமாக, வித்தையின் மூலமாக, பொருள் கொடுப்பதின் மூலமாக, வலிந்து கொள்வதின் மூலமாக, மணம் முடிப்பதை, ***மற நிலை*** என்கிறது பிங்கலம். *(766)*

*3. அவ நிலை இன்ப இயல்:*

அவநிலையென்றால் அறத்திற்கும் மாறான, விருப்பத்திற்கும் புறம்பான பழிநிலை, பார்ப்பவர்கள் பரிகாசத்திற்கும், ஏச்சுக்கும் பேச்சுக்கும், இழிவுக்கும் ஆளாகிற நிலை.

முறையாக திருமணம் ஆகாமல், மனம்போல விழைந்து, உடலுறவில் கலந்ததால், உண்டான பிள்ளைகள். இப்படி முறைகேடாக, தரக் கேடாக பிறந்த குழந்தைகள், அவர்களுக்குரிய தனிப் பெயர்களைக் கேளுங்கள்.

ஒழுக்கம், விழுப்பம், நற்குடி, உயர்திணை இவற்றில் பிறந்தவர்கள் ***உயர்குலம்*** என்றும், அஃதில்லாதவர்களை இழிந்த அல்லது தாழ்ந்த குலம் என்று அன்று வரையறுத்து வாழ்ந்திருக்கின்றார்கள்.

1. நற்குலத்தில் உயர்ந்த ஆணும், இழிந்த குலத்தில் பிறந்த பெண்ணும் கூடி, பிறந்த பிள்ளைகளுக்கு ***அநுலோமர்*** என்பது பெயர்.

**உயர்ந்த வாணினு மிழிந்த பெண்ணினும்**
**வியந்த கூட்டத் தவரநு லோமர்**

(பிங்கலம் 967)

2. நற்குலத்தில் உயர்ந்த பெண்ணும், இழிந்த குலத்தில் பிறந்த ஆணும் கூடி, பிறந்த பிள்ளைகளுக்கு ***பிரதிலோமர்*** என்று பெயர் .

**உயர்ந்த பெண்ணினு மிழிந்த வாணினும்**
**வியந்த கூட்டத் தவர்பிரதி லோமர்**

(பிங்கலம் 968)

3. அநுலோமத்து ஆணும், பிரதிலோமத்து பெண்ணும் கூடிப் பிறந்த பிள்ளைகளுக்குப் ***அந்தராளர்*** என்று பெயர்.

**அநுலோ மகூட்டத் தாணிலு மவ்வழி**
**பிரதிலோ மகுலப் பெண்ணினு மிக்க**
**வியந்த கூட்டத் தவரந்த ராளர்.**

(பிங்கலம் 969)

4. அநுலோமத்தில் பெண்ணும், பிரதிலோமத்து ஆணும் கூடிப் பிறந்த பிள்ளைகளுக்குப் பெயர் ***விராத்தியர்.***

**பிரதிலோ மர்குலத் தாணினும் பின்ன**
**ரநுலோ மர்குலப் பெண்ணினு மவ்வழி**
**வியந்த கூட்டத் தவர்விராத் தியராகும்.**

*(பிங்கலம் 970)*

5. உரிய கணவனுக்கு இல்லாமல், கள்ளப் புருஷனுக்குப் பிறக்கும் பிள்ளையின் பெயர் ***குண்டகன்*** என்பது.

**கொண்டோற் பிழைத்துப் பெறுமகன் குண்டகன்.**

*(பிங்கலம் 964)*

6. கணவனை இழந்த விதவையானவள், வேறொரு வருடன் கூடிப் பிறந்த பிள்ளைக்குப் பெயர் ***கோளகன்.***

**விதவை பயந்த மதலை கோளகன்**

*(பிங்கலம் 965)*

7. கல்யாணம் ஆகாமலேயே, கள்ள உறவு கொண்டு கற்பவதியான கன்னிப் பெண் பெற்ற பிள்ளை ***கானீனன்*** என்றழைக்கப்படுகிறான்.

**கன்னியிற் பிறந்தோன் கானீன னாகும்.**

*(பிங்கலம் 966)*

இப்படி பிறந்த பிறப்பால் பல பேதங்கள் ஏற்பட்டன. சமுதாயக் கொடுமையாக, மக்கள் செய்கிற தொழிலைப் பார்த்து, பேதம் பார்க்கிற

சிறுமைகளும், கொடுமைகளும் அந்நாளில் இருந்தது கண்டு தான், வள்ளுவர் பிறப்பு எல்லார்க்கும் ஒத்தது என்று பாடினார்.

குழந்தைகளை தாங்கள் அறியாமல்தானே பிறக்கின்றார்கள். பெற்றவர்கள் தவறால் கேவலப் படுகிற குழந்தைகளை, வளர்ந்த மக்களை வெறுக்க மாட்டார்கள் குருமார்கள் என்ற கருத்தில் தான், வேண்டாமை இலன் என்றார் வள்ளுவர்.

பிறப்புமுறை, எல்லோர்க்கும் ஒன்றுதான், என்று அன்று பாடிய வள்ளுவரின் சிந்தனைக்கு, இன்று வடிவமும் உயிர்ப்பும் கொடுத்திருக்கிற அறிவியலார்கள், பிறப்பு பற்றிக் கூறியிருக்கின்ற தன்மையையும் இங்கே ஒத்துப் பார்ப்போம்.

குழந்தைகள் (மனிதர்கள்) எல்லோரும் எப்படிப் பிறக்கிறார்கள்?

ஆண் பெண் உடலுறவில் ஆண் அனுப்புகிற விந்தில் உள்ள 350 மில்லியன் உயிரணுக்களும், பல மணிநேரம் தாய் கர்ப்பப்பையினை நோக்கி ஓடுகின்றன. கர்ப்பப்பையின் அருகே செல்லக் கூடிய வலிமை பெற்ற உயிரணுக்கள் மொத்தத்தில் 100 முதல் 1000 என்பது கணக்கு. அதிலும் பல சோர்ந்து போய், பல திசைமாறிப் போய், பல பலமிழந்து போய், அழிந்து போகின்றன.

இறுதியாகப் போய்ச் சேருவது ஒரு 100 உயிரணுக்களே. அவற்றில் ஒன்றுதான், பெண்ணின் கருமுட்டையுடன் கலந்துவிட, அது ஜீவனாகிறது என்பது விஞ்ஞானம்.

இப்படி பல மணிநேரம் ஓடிய உயிரணுக்களின்

ஓட்டப்பந்தயம் தான், பிறப்புக்குப் பெருமையை அளிக்கிறது. வென்ற உயிரானது ஜீவனாகிறது. அதனால், பிறப்பால் எல்லோரும் ஒன்றுபடுகிறோம். பேதம் எதுவுமில்லை என்று அன்றே பாடினார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

இவ்வாறு விருப்பும் வெறுப்புமின்றி, எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கும் பண்புள்ள குருவின், திருவடிகளை சேர்ந்தார்க்கு, அதாவது அவரின் அடிச் சுவட்டைப் பின்பற்றி வாழ்க்கையில் அறம் சான்ற வழிகளில் நடப்போர்க்கு, யாண்டும் இடும்பையில என்கிறார் வள்ளுவர்.

***யாண்டும்*** என்றால், எங்கும், எப்போதும் என்பது அர்த்தம். **இடும்பை** என்றால், துன்பம் என்று தான் பொருள் எழுதிச் சென்றிருக்கின்றனர். துன்பம் என்றால், மனதுக்கும் வருத்தம், உடலுக்கும் வருத்தம் என்றும் கூறலாம்.

அப்படிப்பட்ட துன்பமும் துயரமும், வருத்தமும் வேதனையும், தன்னாலும் வரும், பிறராலும் வரும், இயற்கையாலும் வரும், செயற்கையாலும் வரும் என்பார்கள்.

இதை ***அகச் சூழ்நிலை, புறச் சூழ்நிலை*** என்றும் பிரிக்கலாம். அச்சம், பயம், அகந்தை, அவமானம், வெறுப்பு மனநோய் இவற்றை அகத் துன்பம் எனலாம்.

எந்த உயிரின் மீதும், எந்தப் பொருளின் மீதும் வேண்டும் என்ற விருப்பமோ அல்லது வேண்டாம்

என்ற வெறுப்போ இல்லாமல், எதையும் சமமாக எடுத்துக் கொள்கிற, பக்குவப்பட்ட பண்பாளராக விளங்கும் குருவின் அடியொற்றி, வாழ்ந்து வந்தால், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எவ்விதத் துன்பமும் ஏற்படாது என்கிறார் வள்ளுவர்.

வெயிலுக்கு நிழலாக, மழைக்குக் குடையாக, மன்பதைக்குப் பாதுகாப்பாக, மக்களுக்கு வழி காட்டியாக, துன்பம் கலவாத இன்ப வாழ்வுக்கு துணையாக இருக்கும் குருவை சேர்ந்து கொள்வதே இனிய வாழ்வு தரும் .

# 8. பொருளும் புகழும்

**"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு"**

இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்று பிரித்துப் பொருள் தருகிறார் பரிமேலழகர் பின்வருமாறு.

மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையும் உளவாகா; இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து என்பது அவரின் உரை.

**"இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தர் மாட்டு,**
**இருள்சேர் இருவினையும் சேரா "**

என்று பிரித்துப் பொருளைத் தருகிறார்கள் பலர்.

அறிவாற்றலில் சிறந்த மக்களின் ஒரு பெருந்தலைவரின் பொருள் பொருந்திய புகழை விரும்பி, அவரது அறிவுரையிபடி வாழ்பவரிடத்து,

அறியாமைமால் உண்டாகும் பெருந்துன்பங்கள் எவையும் வந்து சேரா என்பது நாவலரின் விளக்கவுரையாகும்.

கடவுளின் உண்மையான புகழை விரும்பி நினைப்பவரை, அறியாமையால் வரும் நல்வினை தீவினை ஆகிய இரு வினைகளும் வந்து சேரமாட்டா என்று பேராசிரியர் அ.மாணிக்கம் தமது தெளிவுரையில் கூறுகிறார்.

இந்தக் குறளைப் படித்த போது, எனக்குத் தோன்றிய பொருள் வேறு விதமாக இருந்தது. அதை அப்படியே இங்கு தருகிறேன்.

**"இறைவன் மாட்டு பொருள் சேர் புகழ் புரிந்தார்**
**இருள் சேர் இரு வினையும் சேரா"**

என குறளைப் பிரித்திருக்கின்றேன்.

தலைமை ஏற்று நமக்குத் தலைவனாக விளங்குகிற குரு இடத்து, (இறை) சேர்ந்தபின், அவர் அறிவுரையின் படி, பொருளாக இருக்கும் உடலில், புகழாகிய மேன்மையை, (வலிமையை) உயர்த்திக் கொள்கிற போது, சொல்லும் செயலுமாகிய வினைகளால், அவருக்குத் துன்பமும், மயக்கமும் வந்து சேராது என்பது எனது பொழிப்புரையாக அமைகிறது.

இனி இதற்குரிய விளக்கத்தைக் காண்போம்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் உள்ள 2, 3, 4வது குறள்களைப் பாருங்கள். ***வாலறிவன் நற்றாள் தொழ; மலர் மிசை ஏகினான் மாணடி சேர; வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர***

என்பதாக வள்ளுவர் கூறியிருக்கிறார்.

நல்வாழ்வை, நல் உயர்வை, அகத் தெளிவை யெல்லாம், ஆருயிருக்கு வலிமை சேர்க்க வேண்டுமென்று விழைபவர்கள், முதல் காரியமாக செய்ய வேண்டியது, குருவினைக் கண்டு, அவரை சேர்வது ஆகும். இந்த மூன்று பாடல்களும், குருவின் திருவடி அருகில் போய்ச் சேருகிற அறிவான முயற்சிகளைக் குறித்துக் காட்டுகின்றன.

அப்படிச் சென்று, சிறப்பான இடத்தைச் சேர்ந்தவர்கள், செய்ய வேண்டிய சீர்மையான செயல் முறைகளைத் தான், மேலும்தொடர வேண்டும், தொடர்ந்து படர வேண்டும் என்பதாக, 5வது, 6வது குறள்களைக் கொடுத்திருக்கிறார்.

தன்னை வழி நடத்தும் தலைவரின் சொல் கேட்டு, நடக்க வேண்டும் என்பதுதான் தலையாய கடமையாக, மாணவருக்கு அமைகிறது .

குரு வாழ்கிற இடமானது, மாட மாளிகைகள் அல்ல. கூட கோபுரங்கள் அல்ல. மக்கள் வாழ்கிற இடங்களை விட்டு விலகி, இயற்கைப் பிரதேசங்களில், இருப்பதையே விரும்பினார்கள்.

அவர் மூழ்குவது ஏழ்கதிர். தோய்வது தூய்மையான காற்று. நீராடுவது அருவி. புகுவது புதுமலர் பூத்த நறுமணச் சோலை. இருப்பது பசுமையான மரங்களின் கொழு நிழலில். படுத்துக் கிடப்பதோ பாறை. உயிர்ப்பது தூய்மை மிகு நறுமணம். குருவானவர்கள் குடியிருப்பு இப்படித்தான் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட இயற்கைச் சூழலில், வாழ

வேண்டிய அவசியம். அந்தக் காலத்தில், அனைத்து மக்களுக்கும் இருந்திருக்கிறது.

இயற்கையின், ஆற்றல்களோடு வாழ்ந்தாக வேண்டும் என்று வாழ்வித்த காலக் கட்டம். அப்போது, அதற்காக, இயற்கையோடு இயைந்து வாழ வேண்டிய வாழ்க்கைமுறை. இயற்கையில் மாற்றங்கள் ஏற்படுகிற போதும், சீற்றங்கள் ஏற்படுகிற போதும், எதற்கும் நோயுறாத ஏற்றத்தன்மையை உடலானது பெற்றிருக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டளை

அந்த ஏற்றத்திற்கு ஊட்டச் சத்தாய், உயிர்ப்பு சக்தியாய் விளங்குவது உடல் தானே. அதனால் தான் **உடம்பை வலிமை செய்**, மேன்மை செய், மேம்பாடு கொள்ளச் செய், சீர் பெறச் செய், தோற்றத்தில் ஒளி பெறச்செய், வாகை பெறச் செய் என்றெல்லாம், குருவின் போதனையாய் மலர்ந்தன. அவற்றை தலை மேற் கொண்டவராக, குருவைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்தாக வேண்டும்.

அதனால்தான் **பொருள்சேர் புகழ் புரிந்தார்** என்று குரு சொல் கேட்கும் மாணவர்கள் பற்றி கூறுகின்றார்.

உலகத்தில் பயனில்லை என்று ஏழு கருத்துக்களால் எடுத்துரைக்கிறது ஒரு அழகான பாடல்.

**ஆபத்துக்கு உதவாப் பிள்ளை;**
**அரும்பசிக்கு உதவா அன்னம்;**
**தாபத்தைத் தீரா தண்ணீர்;**
**தரித்திரம் அறியாப் பெண்டிர்;**

**கோபத்தை அடக்கா வேந்தன்,**
**குருமொழி கொள்ளாச் சீடன் ;**
**பாபத்தைத் தீராத் தீர்த்தம்;**
**பயனில்லை ஏழுந்தானே**

(விவேக சிந்தாமணி)

என்பதால், பயனில்லா காரியம் பண்ண அங்கே இடமில்லை. குருவின் அரிய கட்டளை, **உடலை *வலிமை செய்*** என்பதுதான்.

இங்கே உடல் எப்படி வந்தது? வலிமை எப்படி வந்தது என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

***பொருள்*** என்ற சொல்லுக்கு பொன் என்றும், உடல் என்றும் அர்த்தம் உண்டு.

***புகழ்*** என்ற சொல்லுக்கு அருஞ் செயலாற்றி பெறுகின்ற கீர்த்தி என்பது மட்டும் அர்த்தமல்ல. மேம்பாடு, மேன்மை, சீர், ஏற்றம், ஒளி, தேற்றம், வாகை என்றெல்லாம் அர்த்தம் உண்டு.

பொருள் சேர் புகழ் புரிந்தார் என்றால், உடலில் சேர்கின்ற மேன்மையான ஒரு காரியத்தைப் புரிந்தார். அதாவது மனிதர் (Manhood) என்றாலே, வலிமை என்றுதான் அர்த்தம். ஆமாம், வலிமையான உடல்தான். வாழ்வில் பெறவேண்டிய அனைத்தையும் பெற வைக்கிறது. சேரவேண்டிய இடத்திற்கும் சென்று சேர வைக்கிறது.

நாம் இயல்பான ஓர் உதாரணத்தையும் இங்கே பாார்ப்போம்.

பானை ஒன்று இருக்கிறது. பானையில் தண்ணீர் நிறைய இருக்க வேண்டும் என்று விருப்பம். தண்ணீர்

உள்ள பானைக்குத் தான், பயன் கருதி மரியாதை. அதற்காக, பானையில் தண்ணீர் ஊற்றுகிறோம்.

ஊற்றுகிற தண்ணீர் பானையில் இருக்க வேண்டும். அந்தப் பானை நீரில்லா நிலைமையிலே இருந்தால், தந்த தண்ணீரைத் தேக்கிவைத்துக் கொள்ளும் திறம் அதற்கு இல்லையென்றால், பானைக்கு மரியாதை என்ன?

பானையில் பழுது என்றால், பயன்கள் அங்கே கிடைக்காதல்லவா!

அதுபோலவே, குருவிடம் கற்றுக் கொள்ள முடியாத தகுதி ஒருவருக்கு இல்லையென்றால், அவர்களால் எப்படி சிறந்த சீடர்களாக இருக்க முடியும்?

நல்ல உடல் தான், நல்ல படகுக்குச் சமம். வாழ்க்கை நீரோட்டத்தில் எதிர்த்தோ, அல்லது நீர் வழியோ சென்று சேர உதவும் படகு, ஓட்டையாக இருந்தால், பயணம் பாழாகும். அல்லது வாழ்வே மூழ்கிப் போகும்.

படகு திடமாக இருந்தால், பாதுகாப்பான பயணம் நடக்கும். அதைப் போலத்தான், உடல் வலிமாக இருந்தால், மட்டுமே வாழ்வும் வலிமையாக அமையும் என்பார்கள்.

அறம் சார்ந்த அரிய அறிவை, ஆன்மீக ஒளியை, செல்வத்தைப் பெற விரும்புவோர்க்கு, வலிமையான உடல் ஏன் வேண்டும்? என்று கேட்பவர்களும் உண்டு.

நல்ல உடலில் தான் நல்ல மனம் இருக்கும். வலிமையான உடலில் தான் வலிமையான மனமும் இருக்கும்.

நல்ல உடலில் நல்ல மனம் என்றால், அதில் **அருள்** இருக்கும்.

நலிந்த உடலில் நலிந்த மனம் என்றால், அதில் **இருள்** இருக்கும்.

நலிந்தும் நைந்தும் போன உடலில் உள்ள மனம், நலிந்து நைந்து கிடப்பதால் தான், அங்கே இருள் மட்டுமல்ல, மருளும் நிறைந்து கிடக்கும்.

இங்கே இருள்சேர் இருவினை சேரா என்ற சொற்களுக்கு நாம் காணவேண்டிய அர்த்தம், இந்த வலிமையான உடலில் இருந்தே தொடங்குகிறது.

இருள் என்றால் அறியாமை என்றும், மயக்கம் என்றும், துன்பம், குற்றம், ஆணவம் என்றெல்லாம் பொருள்கள் உண்டு.

இப்படிப்பட்ட இருளானது, மனதில் சேர்கிறபோது, உண்டாகும் நினைவுகள், நினைவுகளால் நிகழும் செயல்கள். அந்தச் செயல் களினால் விளையும் காரியங்கள் எல்லாம், கொடுமையாகவும், கடுமை யாகவும் தானே அமையும்!

இருட்டில் விளைவன ஒன்று முரட்டுத்தனமாக இருக்கும். அல்லது திருட்டுத் தனமாக இருக்கும். இருளில் நிகழ்வன அறத்திற்கு அப்பாற்பட்டவை! அவர் செயல்கள் எல்லாம் மறத்திற்கு உட்பட்ட வையாகவே மாறிப்போய்விடும்.

இருள் சூழ்ந்த இதயத்தில் ஏற்படுகிற எல்லாமே அவச் செயல்களாகத் திகழும் என்பார்கள். அதைத் தான் தீக்குணம், தீச் செயல்கள் என்றும் கூறுவார்கள்.

இப்படிப்பட்ட தீய சூழ்நிலையைத் தோற்றுவிக்கும், இருள் மனத்தில் தோன்றுவன எல்லாமே பேராசைப் பற்று, காமகுரோதம், கொலைச் செயல்வெறி.

இந்த மூன்று தீக்குணங்களான பேய்க்குணங்கள் வந்து விட்டால், அவற்றின் வாரிசுகளாக வளையம் வருபவை. **பொய் பேசுதல், புறம் சொல்லுதல், கோபப்படுதல், பயனிலா காரியங்களைப் பண்ணுதல்.**

இவை மனத்தின் கண் தோன்றுகிற மாய்மலங்களான தீய எண்ணங்கள், அவற்றைத் தொடர்ந்து மேற்கொள்கிற மோசமான செயல்கள் தாம் கொலை, களவு, காமம் என்பவை.

இங்கே ஒன்றை நாம் கவனிக்கவேண்டும்.

செயல் என்றால் என்ன? வினை என்றால் என்ன?

***செயல்*** என்றால், செய்யப்படுகிற ஒரு செயல், அதற்கான விளைவுகள், அப்பொழுதே நடந்து, எழுந்து, முடிந்து போய் விடுவது. அந்தச் செயல் முடிவுற்ற பிறகு, மீண்டும் அதைப் பற்றிய நினைவுகள் இல்லாமல் போகும். அல்லது வந்த விளைவுகள் தொடராமல் போகும்.

வினை என்பது அப்படி அல்ல.

ஒரு காரியத்தைச் செய்யும் போது ஏற்படுகிற விளைவானது, அது நன்மையோ தீமையோ, செய்தவருடன் தொடர்ந்து வரும் அல்லது செய்யப்பட்டவருக்கு வரும்.

இதைத்தான், முற்பகல் செய்யின் பிற்பகல்

விளையும் என்ற ஒரு பழமொழியில் தந்தார்கள் நமது பெரியவர்கள்.

இதையேதான் இரண்டாகப் பிரித்து, நல்வினை, தீவினை என்றார்கள். மனம் இருளாகப் போனால் வருகிற நினைவுகள், அதனைத் தொடர்ந்து எழுகிற செயல்கள், விளைவுகள் பற்றி தீக்குணம், தீச்செயல் என்பதன் மூலம் அறிந்தோம்.

அதுபோலவே, நற்குணம் என்றால் என்ன? அதன் விளைவுகள் என்ன என்றும் பார்க்கலாம்.

உண்மை உரைத்தல், நல்வார்த்தை பேசுதல், இனிய சொற்களால் கூறுதல், பயன்தருகிற வார்த்தைகளைச் சொல்லுதல், அவற்றால் நிகழும் செயல்களில் ஆசைகளை அடக்கும் குணமும், வெறியற்ற அருள் நினைவும், பற்றுகிற காமச் சிந்தனைகள் மாறி, சகோதரச் சிந்தனைகளும், சமாதானச் செயல்களும் ஏற்படும்.

இவ்வாறு விதவிதமான வினைகள் நிகழ்வ தெல்லாம், சுனைகள் போல் மனதில் ஊறும் நினைவுகளால் தான்.

இப்போது நாம், இந்தக் குறளின் பொருளைப் பார்ப்போம். குரு அறிவுறுத்துகிறார். நல்ல உடலை வளர்த்துக் கொள்என்று, நல்ல உடலில் நல்ல மனம் வருகிறபோது, அங்கே இருள் சேர இடமில்லை. அதனால் மனதில் இருக்கும் நினைவும் செயலும், இருள் சேராமல், இருக்கிறது.

இருள்சேரா என்று நாம் இங்கே சொற்களைச் சேர்க்கிறோம்.

இரு வினை சேர் என்றும் பிரித்துக் காட்டுகிறோம்.

**இரு** என்றால் பெரிய என்றும், தங்கியிருக்கிற என்றும், இரண்டும் என்றும் பலபொருட்கள் உண்டு.

***இருவினை*** என்பது பெரிய காரியம். பெரிய என்பது உயர்ந்த என்பதனையும் குறிக்கும். இருவினை என்பது, மனதில் தங்கி இருக்கின்ற நல்லவை என்றும் பொருள் கிடைக்கிறது.

இரு வினை என்கிறபோது, ஏற்படுகிற எண்ணம் ஒன்று. செய்கின்ற காரியம் இரண்டு என்று நாம் கொள்ளலாம்.

குருவின் கொள்கையாம் வலிமையான உடலை வளர்த்துக் கொள் என்கிற போது, வலிமையான, உறுதியான உண்மையான மனம் கிடைக்கிறது என்று கூறினோம்.

மனம் வலிமையானால் என்ன கிடைக்கும்?

மன்+அம் என்று பிரிகிற இந்தச் சொல்லுக்கு, அழகாக சிந்திப்பது என்று அர்த்தம். மனம் உள்ளவன் தான் மனிதன்.

மனம் போல் வாழ்வு என்பது ஒரு பழமொழி.

***மனமது செம்மையானால், மந்திரம் செபிக்க வேண்டாம்*** என்பதும் அகத்தியர் கூறுகிற ஒரு தந்திரமாகும்.

மனம்போல வாழ்வு எப்படி அமையும்? அதுவும் வளமான நலமான வாழ்வு எப்படி அமையும் என்றும் சிறிது ஆராய்வோம்.

சிந்திக்கின்ற மனம், நல்லவைகளை நினைத்துக் கொண்டிருக்கும்போது, தேகத்தில் ஏற்பட்டு நடந்து கொண்டிருக்கிற சுகம் தரும் சுவாச முறையானது. இயல்பாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

சுவாசம் இயல்பாக ஒழுங்காக நடக்கிற போதெல்லாம், வாயுவின் பரிமாற்றம், உயிர்க்காற்றுடன் உடல் முழுதும் வேகமாக ஓடுகிற இரத்த ஓட்டம், உள்ளுறுப்புக்கள் தூய்மை பெற்று செழுமையாகவும் முழுமையாகவும் செயல்படும் ஊக்கம் எல்லாம், தொடர்ந்து சிறப்புற நடந்து கொண்டேயிருக்கும்.

மனதிலே நல்லெண்ணங்கள் மாறி, தீய எண்ணங்களான கபடு, சூது, களங்கப்படுத்தும் யுக்திகள் என்று தோன்றிய உடனேயே, திக்கென்று ஓர் இதயத்துடிப்பு. திகைப்புடன் மாற்றம் பெறுகிறது.

அதனைத் தொடர்ந்து, சுவாசத்தில், ஒழுங்காக நடந்து வந்த இயக்கம் தடைபட்டு, மீண்டும் தொடர ஆரம்பிக்கின்றது. அந்த மாற்றத்தினால், நாம் முன்னே கூறிய அத்தனை உடற்பணிகளில் எல்லாம், தடுமாற்றம் ஏற்பட்டு, நடைமாற்றம் கொள்கின்றன.

தீய மனதினனாக, தொடர்ந்து சிந்தித்துக் கொண்டே செயல் படுபவனுக்கு, மன இறுக்கம், மன அழுத்தம் (Tension, stress and strain) ஏற்பட்டு விடுவதால், அவனது முகத்திலும் முக அழுத்தமும் இறுக்கமும் ஏற்பட்டு விடுகின்றன.

முகத்திலே சிறு சிறு, துண்டுத் துண்டுத் தசைகள், அரை அங்குலத்திற்கும் குறைந்த அளவுள்ளதாக 30 தசைத்துண்டுகள் இருக்கின்றன. இவற்றிற்கு சரியான

இரத்தமும், தேவைக்கு மிகுதியான உயிர்க்காற்றும் கிடைக்கிறபோது, மலர்ச்சியோடும் பொலிவோடும் விளங்கும்.

மன இறுக்கம் ஏற்படும் பொழுதெல்லாம், முகத்தசைகளில் இறுக்கம் ஏற்பட்டு விடுகிறது. இறுக்கப்பட்ட தசைகளுக்கு இரத்த ஓட்டம் சரியாகப் பாய்ச்சல் படாமல் போவதால், முகம் கறுத்துப் போகிறது. இருளடைந்தும் போய்விடுகிறது. அதனால் தான் தீயவர்கள் முகம் பார்த்தவுடன், இவர்கள் நல்லவர்கள் அல்ல என்ற குறிப்பை பறை சாற்றி விடுகிறது.

இந்தக் காரணத்தை வைத்துக் கொண்டுதான், அகத்தின் அழகு, முகத்தில் தெரியும் என்று அறிவாளர்கள் பாடி வைத்தார்கள். இப்பொழுது இந்தப் பழமொழியின் பொருள் எளிதாக விளங்கும் என்று நம்புகிறேன்.

இப்படி அகத்தை முகந்து காட்டுவதால்தான் அதற்கு முகம் என்று பெயர்.

உடல் சேர்ந்த (பொருள் சேர்) வலிமையை மேன்மைப்படுத்தும் பொருட்டு (புகழ் புரிந்தார்), தலைவனாகிய குரு நாதரின் வழிகாட்டுதலுக்கேற்ப (இறைவன் மாட்டு) உடலை வளர்த்து வைத்துக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, நல்ல எண்ணமும் நல்ல செயலும் (இருவினை சேர்) சேரும். அறியாமையும் துன்பமும், ஆணவமும் கலந்த இருள் மனம் சேராது. (இருள் சேரா)

இந்தக் குறளும், அடுத்து வருகிற 6வது குறளும், குருவின் போதனைகளைக் கேட்டு, செம்மாந்த

வாழ்வு வாழ தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். தகுதியுள்ளவர்களாகத் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்துக்களை வற்புறுத்தியே கூறுகின்றார் வள்ளுவர்.

**''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு''**

என்ற குறள், குருவைப் பின்பற்றி வந்துள்ள மாணவர்கள் (மக்கள்) முதல் தகுதியாக உடலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

உடலை வைத்துத் தான் உலக வாழ்க்கை என்பதை, வள்ளுவர் தெரிந்தவராதலால், இந்தக் குறளை இப்படிப் பாடியிருக்கிறார்.

ஒரு மனிதர் மனம்போன போக்கிலே திரிந்தார். உணவைப் பெரிதாகக் கருதாமல், ஒருவாய் சோற்றுக்காக, இட்ட பிச்சையை நாய்போல நன்றி உணர்வுடன் அருந்தினார். எங்கு, எதில், தனக்கு வேண்டியது கிடைக்கும் என்று நாயாய் அலைந்தார். பார்த்த பெண்களைத் தாயாகக் கருதினார். அடக்கமான மனதோடு சேய் போல இருந்தார். யார் அவர்?

பரமஞானி பட்டினத்தார் தான்.

**பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து**
**இட்ட பிச்சை எல்லாம்**
**நாய்போல் அருந்தி, நரிபோல் உழன்று**
**நன்மங்கையரைத்**
**தாய்போல் கருதி, தமர்போல் அனைவர்க்கும்**

**தாழ்மை சொல்லி**
**சேய்போல் இருப்பவர் கண்டீர் உண்மை**
**ஞானம் தெளிந்தவரே**

(பட்டினத்தார்)

அவர் பாடலில் உள்ள ஒரு குறிப்பை நாம் காண வேண்டும்.

உலகத்தில் பேயாக அலைந்தது. பிணம் போல் கிடந்தது. பசியை விரட்டி, கிடைத்ததை உண்டது என்பதையெல்லாம் உடல் வலிமையுள்ளவர்களே செய்கின்ற காரியங்கள். அதனால், அந்த உடல் வலிமையால் கிடைத்த பயன் என்னவென்றால், உள்ளம் செம்மையடைந்தது. மனம் பக்குவம் அடைந்தது. அதனால் விளைந்த செயல்களில் பரிபூரணம் ஏற்பட்டது.

ஆமாம், கண்டதும் காம உணர்வுகளைத் தூண்டும் நல்ல மங்கையரைப் பார்த்ததும், தாய் போல் எண்ணுகிற தன்மை நிறைந்த மனப்பக்குவம். உறவினர்போல உலகத்தினரை நினைக்கும் உள்ளத்தின் மாற்றம். அனைவரிடமும் தாழ்மையாக இருக்கிற சேய் போல, தன்னடக்கம்.

எப்படி ஞானம் பெற முடியும் என்கிற துன்பங்களையெல்லாம், அருமையான பாடல் மூலம் விளக்குகிறார் பட்டினத்தடிகள்.

இப்படிப்பட்ட உண்மை ஞானம் பெறச் செய்யும் கடுமையான காரியத்தைத்தான், குருவானவர், களிவோடு காட்சி தந்து, கருணையுடன் வழிகாட்டி, வழி நடத்தி வருகிறார்.

# 9. வலிமையின் விந்தைகள் (வித்தைகள்)

> "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்றார் நீடு வாழ் வார்" (6)

மீண்டும் மேன்மை மிகுந்த, கேண்மை நிறைந்த ஞான குருவானவர் காட்டுகின்ற கட்டுப்பாடுள்ள வாழ்க்கையை வலியுறுத்துவதற்காக, இந்தக் குறளை எழுதியுள்ளார் வள்ளுவர்.

அறம் பெரிதாற்றி, அதன் பயன் செம்மையுடன் கொண்டு, சிறந்ததோர் உலகம் படைத்து வழிநடத்துகிற வல்லமை மிக்க குருவானவரின், திறம்கூறுகிற தெளிந்த கருத்தாகத்தான், இந்தப் பாடல் அமைந்திருக்கிறது.

பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழ்வார் என்றுதான் எல்லா உரையாசிரியர்களும் பதம் பிரித்து, பொருள் எழுதத் தொடங்கியிருக்கிறார்கள்.

பொறிவாயில் ஐந்தவித்தான் என்றதுமே, அவ்வாறு அவிக்கும் ஆற்றல் இறைவனுக்கு மட்டுமே உண்டு என்றுதான் பரிமேலழகரும் அவரைப் பின்பற்றிய உரையாசிரியர்களும் எழுதிச் சென்றுள்ளனர்.

கண்ணுக்குக் காட்சிதராத கடவுளுக்கு, அருவம் தான், உருவம் இல்லை. ஆனால் அவனோ, **ஏகன் ஆகி, அநேகன் ஆகி, இறைவனாகி, விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் கிடப்பவன்** என்று திருவாசகம் காட்டுகிற தெளிபொருள் காட்சி இது. கடவுள் பற்றிய சாட்சிக் கவிதை.

**தொன்மையான் தோற்றம் கேடில்லாதான்** என்று தேவாரம் எழுதிய சம்மந்தர் பாடுகிறார்.

ஆக, உருவமற்ற கடவுளுக்கு, ஐம்பொறிகள் எங்கே வந்தன என்று கேட்பது அறிவுடையார் பண்புதான். **உருவமும் உயிருமாகி** என்று அப்பர் பாடுவதால், எல்லோரும் நம்புகிற கடவுள், மனித வடிவெடுத்துத்தான், மன்பதையில் உலவுகிறார் என்பதும் ஒரு நம்பிக்கை.

நமது மதக் கலாச்சாரம், நம்மை அப்படித்தான் நம்ப வைத்திருக்கிறது.

மனிதர்கள் எல்லோரும் கடவுளின் சாயலாக படைக்கப் பட்டார் என்பதும் மதங்கள் கூறும் விளக்கங்கள் தான்.

இந்தப் பாடலில், பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்கள் என்று பொருள் தருகின்றனர்.

அந்தப் புலன்கள் ஐந்தும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்ற ஐம்பெருங் காரியங்களை ஆற்றி வருகின்றன.

இந்த உலக வாழ்க்கையை உணர, உய்த்துச் சுவைக்க, அனுபவிக்க, ஆனந்தம் பெற, ஐம்புலன்கள் தான் அதிகமாகப் பயன் படுகின்றன.

இந்தப் புலன்களை ஒருவர் அடக்கி விட்டால், அவர் அற்புதமானவர். இவைகளுக்கு அவர் அடங்கா விட்டால், நெறிகள் மாறி வீழ்வர்.

இதனால்தான், ஒவ்வொரு மனிதரும் ஐம்புலன் ஆட்சியினை விடல் வேண்டும். வெற்றி கொள்ள வேண்டும் (அடல் வேண்டும் ) என்ற ஒரு குறளையும் பாடியுள்ளார்.

**“அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு”** (343)

இப்புலன்களின் பேராற்றலை, அடக்கி, வென்று ஒரு சேர விட்டு விட வேண்டும் என்பது மனிதர்களின் ஆசைதான். ஆனால் அப்படி முடிகிறதா என்ன?

சிந்தை தெளிந்த சித்தர்களும். இந்த ஐம்புலன்களிடம் சிக்கிக் கொண்டு பாடுபட்டு, பங்கப்பட்டு, வதைப்பட்டு, சிதைப்புற்று, வழிமாறித் தவித்ததை எல்லாம், புலம்பித் தானே பாடிச் சென்றிருக்கின்றனர்.

இந்த ஐந்து நல்ல புலன்களை எல்லாம், அவர்கள் கள்ளப்புலன்கள் என்றல்லவா கதறிக் கதறிப் பாடிச் சென்றிருக்கின்றனர்.

ஐம்புலன்களை **நாய்** என்றனர், **பேய்** என்றனர், **மாடு** என்றனர், **குரங்கு** என்றனர், **பாம்பு** என்றனர், **ஆனை** என்றனர், **காக்கை** என்றனர், **ஆமை** என்றனர்.

**'நாய் போற் பொறிகளை நானாவிதம் விட்டோர்**
**பேயரென்றே ஊது குழல் கோனே'**
என்றும்;
**'கட்டாத நாயெல்லாம் காவலுக்கு எப்போதும்**
**கிட்டா வென்று ஊது குழல் கோனே'**

என்றும் இடைக்காட்டுச் சித்தர், ஐம்புலன்களை நாய்க்கு ஒப்பிடுகிறார்.

***ஐந்தும் பெரும் பூதம்*** என்றும்; ***ஐந்து தலை நாகம்*** என்றும் அகப்பேய்ச் சித்தர் பாடுகிறார்.

ஐந்து பொறிவழிபோய் அலையும் இந்தப் பாழ்மனம், அந்த ***மனமென்னும் மாடு*** என்று பத்திரகிரி சித்தர் பாடுகிறார்.

இந்த உடம்பை ***ஆறு*** என்றும், உடம்பில் உள்ள ஐம்புலன்களை ***முதலை*** யென்றும் உருவகித்து, ***ஆற்றிலே 'அஞ்சு முதலையடி'*** என்று கொங்கண நாயனார் எனும் சித்தர் அஞ்சிப்பாடுகிறார்.

**''பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்**
**பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்''**

*(திருமந்திரம் 2153)*

ஊசி என்றால் பொறி. பை என்றால் தோல்பையான தேகம். விருகம் என்றால் காக்கை. காக்கையின் குணம் தந்திரம் என்றும்; திருட்டுத்தனம் என்பது எல்லோரும் அறிந்ததுதான்.

நமது சிந்தையுள்ளே அன்பு, பண்பு தான் இருக்கும் என்று நினைத்திருந்தால் அது தவறு. அங்கே சிங்கங்களும், நரிகளும் யானைகளும் இருக்கின்றன என்று திருமூலர் பாடுகிறார் பாருங்கள்.

**"திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று**
**நகைக்கின்ற நெஞ்சுக்குள் நரிக்குட்டி நான்கு**
**வதைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன்று ஐந்து"**

(2174)

***சிங்கங்கள் மூன்று*** என்பது ***காமம், வெகுளி, மயக்கம்***

***நரிகள் நான்கு*** என்பது, ***எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு***

***யானைக்கன்றுகள்*** என்பது ***செவி, மெய், நோக்கு, நாக்கு, மூக்கு.***

ஆக, ஐந்து பொறிகள் என்றால், அவை ஆபத்தின் வழிகள். அநியாயத்தின் தூதுவர்கள், அடக்கமுடியாத கொடியவர்கள் என்று, அறிவு தெளிந்த எல்லோருமே பாடுகின்றனர். அவர்கள் பட்டப் பாடுகளை அனைவருடனும் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஐந்து பொறிகள் என்பது செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகும். இவற்றை அறிதற்கருவி என்பார்கள். இவை அறிகின்ற தன்மைகள் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம், .

வாய், கால், கை, எருவாய் , கருவாய் ஆகிய ஐந்தும் செய்கின்ற கருவிகளாகும். இவை செய்கின்ற காரியங்கள் **நவிலுதல், நடத்தல், நலமுறக்**

***கொடுத்தல், கழித்தல், களித்தல்*** என்பனவாகும்.

இந்தப் பத்தும் படுத்துகிற பாடுதான், பெரிய பாடுகள் என்று நாம் எல்லாம் அறிந்த ஒன்றுதான்.

ஐம்புலன்கள் அடங்காதவை, அடக்க முடியாதவை என்று எல்லோரும் பேசுகின்றார்களே? அப்படி என்ன ஆற்றல் இருக்கிறது இவைகளுக்கு இன்று அறிவியல் மூலம் தெரிந்த சில உண்மைகளை, அவற்றின் ஆற்றல்களை, நாம் இங்கே அறிந்து கொள்வதும் நலம் பயக்கும்.

**1. *செவி:*** கேட்பதற்காகப் பயன்படும் ஒரு பொறி, ஓசையின் தன்மையைக் கேட்டு, அதை மூளைக்கு அனுப்பி வைக்கும் ஆற்றல் கொண்டது. இந்த ஓசையை நான்கு விதமாகப் பிரித்துக் காட்டுவர்கள். ***நுண்ணோசை, நினைவோசை, மிடற்றோசை, செவியோசை*** ஆகும்.

இந்த செவியானது, ஏறத்தாழ, 200,000 ஒலிகளை ஏற்று அவற்றை, தெளிவறத் தெரிந்து கொள்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்கிறது. செவிகள் இரண்டும் ஓசைகளை சதா நேரமும் மூளைக்கு அனுப்பிக் கொண்டுதானே இருக்கும்.

ஓசையைக் கேட்கின்ற மூளையும், வேலை செய்து கொண்டு, அதற்கேற்றாற்போல், துரித கதியில் செயல்பட்டுக் கொண்டுதானே இருக்க முடியும். அலைபாயும் மூளைக்கு அமைதி எப்போது? அதுதான் செவிகளின் தர்மமும், தரும் சிரமமும்.

**2. *மெய்*** என்பது உடலைக் குறிக்கிறது. மெய்யின் தன்மை அதன்மேல் படுகின்ற தன்மையை, பரிசத்தால் உணர்ந்து, மூளைக்குத் தெரிவிப்பதுதான்.

***அனல், குளிர்ச்சி, வாதம், அசனி, பதுன், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவறாமை*** (கோபம் குறையாமை) என்னும் பனிரெண்டு விதங்களால், உடம்புக்கு வேதனை உண்டாகிறது.

வேதனை மட்டும் வந்தால், மெய் சமாளித்துக் கொள்ளும். இந்த உடம்புக்கு பதினெட்டு வகை குற்றம் உண்டு என்றும் ஒரு கணக்கைக் குறித்துக் காட்டுகிறது பிங்கல நிகண்டு. *(பக்கம் 83)*

***பசி, தாகம், பயம், வெகுளி, உவகை, குறைக்காக இரத்தல், நினைப்பு, உறக்கம், நரை, நோய் படுதல், மரணம், பிறப்பு, மதம், இன்பம் அதிசயம், வியர்த்தல், துன்பம், செயலற்றுப் போதல்*** என்ற 18 விதங்களில், மெய் அனுதினமும், அகலாத நொடிப்பொழுதும் அவதிப் பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

இப்படி மெய், நொய்யாக நொறுங்கிப் போகும் பொழுது, இதன் பிடியிலிருந்து விடுபட்டு வருவது எப்படி? எப்போது? அதனால்தான், மெய்யை, ***பிணிக்கும் பொல்லாப் பொறி*** என்றனர்.

***3. கண்:*** அறிவின் வாயில் என்றும் அனுபவத்தின் சாரளம் என்றும், உலகை ரசிக்கச் செய்யும் உன்னத மகத்துவம் என்றும் கண்களைப் போற்றுவார்கள்.

வண்ணங்களைப் பார்க்க உதவும் செல்களுக்கு ***கோன்*** (Cone) என்றும்; கறுப்பு வெள்ளையைப் பார்க்க உதவும் செல்களுக்கு *ராட்* (Rod) என்றும் பெயர். நமது இரு கண்ணுக்குள்ளே 7 மில்லியன் கோன் செல்களும், 125 மில்லியன் ராட் செல்களும்

இருக்கின்றன என்றால், கண்ணின் துல்லிய அமைப்பைப் பார்த்தீர்களா?

வெளியுலகப் பொருட்களைப் பார்க்க மட்டும் கண்கள் பயன்படவில்லை. வெளியுலகச் செய்திகளையும் விழிப்புடன் தருவதும் தான். கண்கள் மூளைக்கு விவரங்களை அனுப்புகிற அங்கமாக இருக்காமல், வெளிப்புறத்தில் நிகழ்பவைகளுக்குத் தொடர்பு கொள்கின்ற மூளையின் ஒரு பகுதியாகவே செயல்படுகின்றது.

கண்ணோட்டம் கொள்வது தானே கண்ட துன்பங்களுக்கெல்லாம் தேரோட்டமும் நீரோட்டமும் ஆக அமைந்து விடுகிறது.

*4. **வாய்:*** வாய் என்றதும் நமக்கு நாக்குதான், நினைவுக்கு வருகிறது. வாய்க்குப் பெருமை சொல்லும் சுவையும் தான்.

அன்பான, பண்பான சொற்கள் வாழ்வு தரும். அகங்காரச் சொற்கள் அழிவைத் தரும். அதுபோல, சுவைக்கின்ற நாக்குத் தன்மையானது, சுகமும் தரும், சோகமும் தரும்.

மேல் நாட்டிலே, இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு என்று நான்கு சுவைகளைக் கூறுவர். தமிழ் நாட்டிலே ஆறு சுவையினைக் கூறுவர். அவை, ***தித்தித்தல், கூர்த்தல், துவர்த்தல், கார்த்தல், கைத்தல், புளித்தல்.*** இதை வைத்துத்தான், அறுசுவை விருந்து என சமைத்தும் படைத்தும் மகிழ்ந்தார்கள்.

ஒருவர் நாக்கிலே 9000 சுவை அரும்புகள் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். இப்படி, நாவின் சுவைக்கு

ஆட்பட்டவர் அனுபவிக்கும் துன்பத்தை பட்டினத்தார் மிகவும் எச்சரித்துப் பாடியிருக்கிறார்.

**நீ தின்றன அனைத்தும் நின்னைத் தின்றன**

இதைத்தான் வள்ளுவரும், யாகாவாராயினும் நாகாக்க என்றும், அப்படிக் காக்காதவர்கள் நோய்வாய்பட்டு, துன்பப்படுவர். நோயினால் பற்களை இழக்கக் கூடும். பல் போனால் சொல்போகும். சொல்லில் குறை ஏற்படும். அதனால், துன்பங்கள், அவமானங்கள் பல நேரிடும் என்று பாடியிருக்கிறார்.

**5. மூக்கு:**

மூக்கின் இயல்பு பற்றி, விளக்க வந்த பிங்கல முனிவர், மணம், முருகு, மன்றல், வாசம், விரை, வதுவை, ஞானம், வேரி கடி, தேன், வம்பு, கான், நறை, கந்தம், மோதம், நாற்றம், கமழல், வெறி என்று பலவாறு விளக்கிச் சொல்லுகின்றார்.

ஏறத்தாழ 30 வகை மணங்கள் (Smells) இருக்கின்றன என்பர். வெளியிலுள்ள மணங்களை நுகர்ந்து, விரைவாக மூளைக்கு அனுப்புவதற்காக, 50,000 நரம்பிழைகள் இருக்கின்றன என்று கண்டறிந்திருக்கின்றனர்.

அல்சேஷன் நாய்க்கு மூக்குப் பகுதியில் 220 மில்லியன் செல்கள் இருப்பதால் தான், அதற்கு மோப்ப சக்தி அதிகம் உண்டு என்பார்கள்.

மனிதருக்கு மூக்குப் பகுதியில் 5 மில்லியன் செல்கள் தான் உள்ளன. அதனால்தான், முகர்ந்தறியும் ஆற்றல் குறைந்திருக்கிறது. மூக்கின் வாசனை

நுகர்ச்சியால், பின் செல்பவர்கள், தன்னை இழப்பதுடன், தன் பெருமையையும் இழந்து போகின்றார்கள் யோசிக்காமல்.

இவ்வளவு விளக்கம் எதற்காக என்றால், பொறிகள் என்பது, அளவற்ற ஆற்றல்களைக் கொண்டிருக்கின்றன என்பதைக் குறித்துக் காட்டத்தான்.

இத்தகைய ஐம்புலன்களைத்தான் விடல் வேண்டும்; அடல் வேண்டும் என்கிறார்கள். அவ்வாறு விட்டவரைத் தான் அவர் துறவினை மேற்கொண்டிருக்கிறார். புலன்களைப் புறம் கண்டிருக்கிறார் என்று கூற முடியும்.

இனி, நாம் பாடலின் பொருளுக்கு வருவோம்.

**''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறி நின்றார் நீடுவாழ்வார் ''**

என்ற, குறளுக்கு அப்படியே பதம் பிரித்து, பொருள் தந்தார்கள் பல உரையாசிரியர்களும்.

நான் பதம் பிரித்த விதத்தை இனி இங்கே காண்போம்.

ஐந்துபொறி/வாயில்/அவித்தான்/பொய்/தீர்/ஒழுக்கநெறி/நின்றார்/நீடுவாழ்வார்/

என்று பிரித்திருக்கிறேன்.

இக்குறளில் ஒள்ள ஒவ்வொரு சொல்லும், எவ்வளவு கருத்துடன் சொல்லப்பட்டிருக்கிறது என்ற அழகை, தொடர்ந்து அறிந்து இன்புறுவோம்.

**ஒன்பது வாயில் கொள் கோட்டையுண்டே-அதில்**
**உள்ளே நிலைக்காரர் அஞ்சு பேராம்**

(கொங்கண நாயனார்)

இந்த அஞ்சு பேரும் அச்சத்தை விளைவிக்கும் ஆற்றலும்; எப்படிப் பட்டவர்களையும் ஆட்டிப் படைக்கும் வேகமும் கொண்டவர்களாவார்கள். அதனால்தான் பட்டினத்தாரும்,

**'ஐவர் கலகமிட்டு அலைக்கும் கானகம் '**

என்று பாடினார்

***'ஐம்பொறி ஆடகம்'***

என்று திருமூலர் பாடுகிறார். (2131) ஆடகம் என்றால் உடம்பு என்று அர்த்தம்..

பொறி என்றால் புலன் என்றுபொருள். ஐம்பொறி என்றால் ஐந்து புலன்கள் என்று அர்த்தம்.

இங்கே பொறி என்றால் ***தீப்பொறி*** என்று கொள்ள வேண்டும். ஐந்து பொறிகளும் ஆற்றல் மிக்கத் தீப்பொறிகள்.

அவித்தான் என்றால் அடக்கக் கூடியவன் என்று கூறாமல், தீயை அணைத்தவன் என்பது அர்த்தம்.

***அவித்தல்*** என்ற சொல்லுக்கு, அணைத்தல், அழித்தல், துடைத்தல், நீக்குதல் என்று அர்த்தம்.

தீயை அடக்கி விட்டால், மீண்டும் தலை தூக்கி எழும். அதனால் தான் நீறு பூத்த நெருப்பு என்று சொல்வார்கள்.

இங்கே ***வாயில்*** என்ற சொல்லை வள்ளுவர் பெய்திருக்கிறார். வாயில் என்றால், வாசலில் அதாவது அதன் ஆரம்பத்திலேயே என்று அர்த்தம்.

தீயை பரவவிட்டுப் பிறகு அடக்கத் துடிக்காமல், அணைக்க முயலாமல், அதன் தொடக்க நிலையிலேயே அழித்துவிடு, தொலைத்து விடு. அதுதான் அறிவுடையோர்க்குரிய செயலழகு என்பதை மிக சூட்சமமாக சொல்லியிருக்கிறார்.

சிங்கத்தை அதன் குகையிலேயே பிடி என்பது பழமொழி. மாடு பிடிக்கும் கலையில், அது புறப்படுகின்ற கொட்டடியில் இருந்து பிடிப்பது தான், வெற்றிகரமான வழி என்றும் குறிப்பிடுவார்கள்.

மாடாகக் குதித்து, சிங்கமாக சீறி, பாம்பாகக் பயப்படுத்தும் பொறிகளை, அதன் முளையிலேயே, முனையிலேயே, கிள்ளி எறிவது போல அணைத்திட வேண்டும் என்பதற்காகத்தான், பொறிவாயில் அவித்தான் என்று பாடினார்.

***பொய்தீர் ஒழுக்கம்:*** பொய்மையில்லாத, உண்மையான தவ ஒழுக்கம். அதாவது அற ஒழுக்கம்.

இங்கே பொய்தீர் என்ற வார்த்தையை, வள்ளுவர் ஏன் பயன்படுத்தினார் என்பதையும், இங்கே நாம் விரிவாகக் காண வேண்டும்.

பொய் என்பதற்கு போலி என்ற குறிப்புண்டு.

வள்ளுவர் காலத்தில், மக்களிடையே போலித் துறவிகள் நிறைய பேர் இருந்தனர் போலும். மக்களிடையே மரியாதை பெற, பொருள் புகழ் பெற, தவத்தவர்கள் போல, அருள் மிகு துறவிகள் போல,

வேடம் கொண்டு அலைந்தார்கள். அவர்களின் அநியாய வாழ்க்கை முறையைக் கண்டு, வள்ளுவர் மனம் நொந்திருந்தார் என்று அவர் பாடிய குறட் பாக்களே, சான்றாக விளங்குகின்றன.

துறவிக் கோலம் பூண்டு, தீய வழிகளில், வஞ்சகமாய் வாழ்வோர் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**''மனத்தது மாசாக மாண்டார் நீர் ஆடி**
**மறைந்தொழுகும் மாந்தர் பலர்''** (278)

அவ்வாறு, உண்மையாக துறவறம் கொள்ளாமல், தூயவழி வாழாமல், வாழ்கின்ற பொய்த் துறவிகளை விடக் கொடியவர்கள், இந்த உலகில் வேறு யாருமே இருக்க மாட்டார்கள்.

**''நெஞ்சின் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்''** (276)

உலகின் பற்றுக்களை யெல்லாம், ஒழித்து விட்டோம்; அழித்து விட்டோம் என்று பொய்களைக் கூறி, பலரையும் நம்ப வைத்து; பிறர் வெறுக்கும் தீய ஒழுக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்து வரும் போலித் துறவியர்க்கு, பல துன்பங்கள் நேரும். கட்டாயம் வந்து சேரும் என்று கடுமையாகவே பாடுகிற குறளைப் படியுங்கள்.

**''பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று**
**ஏதம் பலவும்வரும்''** (275)

தவத்தார் போல ஜடாமுடி வேண்டாம். தூக்கணாங் குருவியின் கூடுபோல தாடியும் தொங்க வேண்டாம். முடியை மழிக்கவும் வேண்டாம்.

உலகத்தார் பழிக்கும் பாவ காரியங்களை செய்யாமல்இருந்தால், அதுவே பெரிய அறம். பெருந்தவம் என்கிறார் வள்ளுவர்.

உண்மையான ஒழுக்க நெறி என்று அவர், நேரடியாகவே சொல்லியிருக்கலாம். பொய்தீர் ஒழுக்கம் என்று அவர் கூறியதால்,பொய் தோற்றம்கொண்டு, போலி வாழ்க்கை நடத்திய பொல்லாத பேர் வழிகள் இந்நாளில் இருப்பது போல,அந்நாளிலும் இருந்திருக்கிறார்கள்.

வஞ்சக வாழ்க்கை நெறி, வழிவழியாகத் தொடர்கிறது. பார்த்தீர்களா! இந்த வஞ்சக வாழ்க்கையை, வால்மீகர் எனும் சித்தர், மனம் வெறுத்து, *''**மன்னிப்பே கிடையாது. இத்தகைய மாபாவிகளுக்கென்று**''*, மனம் வெறுத்து வசை பாடி இருக்கிறார். இந்தப் பாடல், வள்ளுவர் குறளுக்கு நல்ல விளக்கமாய் அமைந்திருக்கிறது.

**''..........உலகத்தில் சிற்சில் லோர்கள்**
**தெற்றுவார் அவர் பிழைக்க அநேக வேடம்**
**தேகத்தில் அணிந்து கொண்டு திரிகு வார்கள்**
**பற்று வார் குருக் களென்பார் சீடர் என்பார்**
**பையவே திட்சைவைப்பார் தீமை என்பார்**
**கத்துவார் திரிமூர்த்தி தாமே என்று**
**காரணத்தை அறியாத கசடர் தானே!**
**தானென்ற உலகத்தில் சிற்சில் லோர்கள்**
**சடைபுலித்தோல் காசாயம் தாவடம் பூண்டு;**
**ஊனென்ற உடம்பெல்லாம் சாம்பல் பூசி**
**உலகத்தில் யோகியென்பார் ஞானி என்பார்**
**தோனன்ற சிவ பூசை தீட்சை யென்பார்**

**திருமாலைக் கண்ணாலே கண்டோம் என்பார்**
**கானென்ற காட்டுக்குள் அலைவார் கோடி**
**காரணத்தை அறியாமல் கதறுவாரே''**

*(வால்மீகர்)*

இதை மனதில் வைத்துக் கொண்டுதான், வள்ளுவரும் மிக அருமையாக, பொய்தீர் ஒழுக்கம் என்று பாடினார்.

ஒழுக்கம் என்பது ஒழுகுதல் என்ற வார்த்தையால் பிறந்த ஒன்று. ஓடை நீர் ஓடுகிறது; அருவி நீர் குதிக்கிறது; கடல் நீர் அலை பாய்கிறது; நதிநீர் நடை போடுகிறது என்பார்கள் அது இயற்கையான நீரின்இயக்கம்.

ஆனால், தண்ணீர் ஒழுகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லும் போது, தடையில்லாமல், சீராக, தொடர்ச்சியாக, தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் போதுதான், ஒழுகுகிறது என்று சொல்கிறோம்.

ஒழுக்கம் என்பது, நன்மை பயக்கின்ற நல்ல காரியங்களை, எந்த நேரத்தில் எந்தத் தடை நேர்ந்தாலும் தடுமாற்றமின்றி, தயக்கமின்றி, சீராக, சிறப்பாக, தொடர்ச்சியாக, தொய்வில்லாமல் செய்து கொண்டு வருவதையே குறித்துக் காட்டுகிறது.

ஒழுக்க நெறி நின்றார் என்ற வார்த்தைகளும், இன்னும் கொஞ்சம் ஆழமாக, அழுத்தமாக, நம்மை சிந்திக்கத் தூண்டுகின்றன.

நிற்றல் என்றால், நிலையாக, ஓரிடத்தில் இருப்பது என்பது பொருளாகும். அது போலவே, ***நின்றார்*** என்றால், நிலைத்து நின்றார், விடாது

நின்றார், வெற்றிகரமாக வேள்வி இயற்றுவது போன்ற வேட்கையுடன், வெற்றிகரமாக நின்றார் என்று கொள்ள வேண்டும்.

இதுவரையில், நாம் பொருள் கூறிவந்த பதங்களுக்குரிய தொகுப்பினை, இங்கே நாம் தொகுத்துக் காண்போம்.

***ஐந்து பொறிகளான தீப்பொறிகளின் ஆரம்ப நிலையிலேயே, எரிந்து பரவ விடாமல், அவித்து அணைத்து, புறத்தால் வென்றது போல, அகத்திலும் இருள் அழித்து, ஒளி விளைத்து, ஒழுக்கமான உயர் வாழ்க்கையில் ஒழுகி, தினம் அந்த உயர்ந்த நிலையிலேயே வாழ்ந்து வருகிற ஞானகுருவின், சீரிய வழியிலே செல்கின்ற சீடர்கள் எல்லோரும், புகழுடன், பெருமையுடன் நீண்ட காலம் வாழ்வர்கள்.***

இங்கே பொறிகளை தீப்பொறிகள் என்று குறிப்பிட்டதற்கு, தீயின் தன்மையனவாக, பொறிகள் ஐந்தும் இருப்பதே காரணமாகும்.

எதைப் போட்டாலும், ஏற்றுக்கொண்டு எரிக்கும் இயல்புள்ளது தீயாகும். எரிக்கும் போது, தானும் எரிந்து கொண்டும், எரித்து விடுவதும் அதன் இயல்பான குணமாகும்.

**'கள்ளப் புலன் என்னும் காட்டை வெட்டிக்**
**கனலிட்டு எரித்திட்டால், காணலாம் வீட்டை'**

என்று கடுவெளிச் சித்தர் பாடுவதையும் இங்கே நினைவு கொள்வோம்.

***'அஞ்சு பஞ்ச பூதம் அறிந்தால் அநித்யம்***

***போம்'*** என்ற சித்தர் பாடலும்; ***பஞ்சப் பொறிகளை நெஞ்சார அழிப்பதற்கு, ஆகிற சாத்தியமில்லை*** என்று குறிப்பதையும் இங்கே நினைவு கொள்ளலாம்.

சாதாரண மனிதன், துறவு கொள்ள விழையும் போதும், துன்பங்களிலிருந்து விடுபட வேண்டும் என்று விழைகிற போதும், அவர்கள் ஐம்பொறிகளின் ஆதிக்கத்தை அகற்றி விட வேண்டும், அவற்றை வெற்றி கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் வழியைக் காட்டி, அறிவுறுத்திப் பாடுகிறார்.

ஆனால், துறவிகளுக்கும், சித்தர்களுக்கும் குருவாக விளங்குகிற ஞான குருவானவர், ஐம் பொறிகளை அடக்கினால் போதாது. அவற்றின் ஆட்சியை அழித்து, ஆணவத்தை ஒழித்து, அகங் காரத்தை ஒடித்து, தன்னிடமிருந்தே அப்புறப் படுத்தி விட வேண்டும் என்பதற்காகத்தான், **அவித்தான்** என்ற சொல்லை, பொருத்தமாக எழுதிக் காட்டினார்.

ஐம்பொறிகளின் செயல்களை அவித்து விட்டால், என்ன வாழ்க்கை அது என்று நீங்கள் கேட்கலாம்.

அதுதான் தண்ணீரில் இருந்தும் மூழ்கிப் போகாமல், மிதக்கும் ஆற்றல். மக்கள் கூட்டத்தில் இருந்தாலும், வாழ்க்கைக்குள் மூழ்கிப் போகாமல், வெற்றிகரமாக மேலே வீற்றிருக்கும் அரிய செயல்.

***செத்தாரைப் போலத் திரியும் மெய்ஞ்ஞானி*** என்கிறார் ***குதம்பைச் சித்தர்.***

நல்லதைக் காண, நல்லதைக் கேட்க, நல்லதைப் பேச, நன்மைகளைச் சுவைக்க, நல்லதற்காக

முயலவே, ஐம்பொறிகளையும் பயன்படுத்துகிற ஆற்றல் கொண்டவர்களே, ஞானகுருவாகத் திகழ்கிறார்கள்.

அத்தகையோர் காட்டுகின்ற செம்மையான நெறிகளிலே, சீரான பாதைகளிலே, சிந்தை கலந்து, செயல் புரிந்து வாழ்கிற போது, எண்ணிய திண்ணம் போலவே, எல்லாம் காய்க்கும். பண்ணிய புண்ணியங்களின் பயனாகவே, பல வளங்களும் நலங்களும் வாய்க்கும்.

ஆகவே, ஐம்பொறிகளின் ஆற்றலை அடக்கித் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் தேவ வலிமையே முக்கியத் தேவை என்று முன் குறளில் விளக்கினார் வள்ளுவர்.

வல்லமை மிகுந்த உடலில் தான், வலிமையான மனம் அமையும் என்பதற்கேற்ப, வலிமையான மனதால் தான் வரிக்குதிரைகளாகப் பறக்கும் வலிய சக்திகளைக் கொண்ட பொறிகளை அடக்கும் ஆற்றல் சித்திக்கும் என்ற அருமையான குறளை, அடுத்துப் பாடி வைத்தார்.

**உரன் எனும் தோட்டியால் ஓர் ஐந்தும் காப்பான் (24)**

என்ற குறளின் பொருளைப் பாருங்கள்.

***உரன்*** என்றால் வலிமை, பலம், திண்மை, ஊக்கம் என்றெல்லாம் பொருள்கள் உண்டு. ***தோட்டி*** என்றால் காவல், கதவு, ஆயுதம் என்றும் பொருள்கள் உண்டு.

வலிமை மிகுந்த (உடல் வலிமை) பலத்தையும்,

ஊக்கத்தையும் கொண்டு, காவல் முறையால் ஐம்புலன்களைக் காப்பவன் என்று வள்ளுவர் பாடியிருப்பதால், உடல் வலிமையின் பெருமையைக் குறிக்கும் குறளாக, இக்குறளைக் கொண்டு, வலிமை மிகுந்த குருவழி செல்வோர், திருவும் தெளிவும் பெற்று, பல்லாண்டு பல்லாண்டு வாழ்வார்கள் என்கிறார். உண்மை தானே.

# 10. கவலையை மாற்றும் கலை

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது" (7)**

ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாதவனது தாளை சேர்ந்தார்க்கல்லது, மனத்தின் கண் நிகழும் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது என்று பரிமேழகர் உரை கூறுகின்றார்.

தமக்கு ஒப்புவமையாக எவரும் இல்லை என போற்றப்படும் அறிவாற்றலிற் சிறந்த சான்றோரின் அறிவுரைகளைப் பின் பற்றுபவர்க்கு மட்டுமல்லாமல் மற்றவர்க்கு, அவர் தம்மனத்தின் கண் தோன்றும் கவலைகளை மாற்றுவது என்பது இயலாத ஒரு செயலாகும் என்று மற்றவர்கள் உரை கூறுகின்றது.

கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில், கடவுள் என்ற சொல் எங்குமே எழுதப்படவில்லை.

கடவுள் வாழ்த்து என்ற பாயிரத்தில், எழுதப்

பட்டதினாலேயே, பொருள் கூறவந்த பெரியவர்கள், எல்லோரும் இறைவன் என்றே, எல்லா பாடல்களுக்கும், அர்த்தத்தைத் திணித்து, அரும் பொருள் எழுதினார்கள்.

எல்லா பாடல்களுக்கும், இறைவன் என்று பொருள் கூறியவர்கள், இந்தப் பாடலில் தனக்கு நிகரில்லா தவனது தாள் என்று தான் பொருள் கூறி யிருக்கின்றார்கள்.

உலகைப் படைத்தவன் பரம்பொருள் என்றும், பிரம்மம் என்றும், பரமபிதா என்றும், அவரவர் மதத்தின் கொள்கைக்கு ஏற்ப நமக்கு அறிவுறுத் தினார்கள்.

அவர்கள் கூற்றை நான் மறுக்கவோ, மாற்றவோ, எதிர்த்து எழுதவோ, இந்தப் பகுதியை நான் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

மனிதர்களிலே மேம்பட்ட ஞானத்தையும், மேன்மை மிகுந்த வாழ்வையும் கொண்டு, மனித குல வழிகாட்டியாக விளங்கும் மோன குருவைத் தான், கடவுள் என்று இங்கே வள்ளுவர் குறித்திருக்கிறார் என்றுதான் எனது கருத்தாக இருக்கிறது.

அதற்காக, நான் கடவுளுக்கு எதிரி என்றோ, கடைந்தெடுத்த நாத்திகன் என்றோ, நீங்கள் நினைத்து விட வேண்டாம். கடவுள் என்று, அந்த உயர்ந்த நிலையில் வைத்து வணங்கப்படுகிற மனித இனத்துடன் ஒருவராக, ஒன்றி வாழ்கிற குருதேவரை வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். வாழ்வு வளம் பெறும். ஒளிபெறும். வதைக்கின்ற நோய்களும், எரிக்கின்ற கவலைகளும் உங்களை அணுகாது,

அண்டாது, அலைக்கழிக்காது என்று அறிவுறுத்தவே, கடவுள் என்ற சொல்லைக் நாம் கொள்ள வேண்டும்.

கடவுள், தெய்வம் என்று சொன்னவுடனேயே, அவர் எல்லாவற்றிற்கும் மேலானவர் என்றுதான், எல்லோருக்கும் தெரியுமே!

அப்படி உயர்ந்து நிற்கும் கடவுளுக்கு, நிகரானவர் யார் என்று ஏன் கேட்க வேண்டும்? அவருக்கு உவமை யாரும் இல்லையென்று ஏன் பேச வேண்டும்?

அப்படி ஒரு நிலையை, கடவுளுக்குக் கொடுக்கக் கூடாது என்று வள்ளுவர் அறியாதவரா? பிறகு ஏன் உரையாசிரியர்கள் எல்லோரும் கடவுள், கடவுள் என்று வற்புறுத்தி, வலியுறுத்தி, அதை நிலை நிறுத்தி விட, நூறாயிரம் சான்றுகளைத் தேடி ஏன் ஓடினார்கள்? இன்னும் ஓடுகின்றார்கள் என்றுதான் புரியவில்லை என்கிறார்கள் புரிந்தவர்கள்.

மனிதர் என்றால் அவர் திறமையானவர், அவர் திறமைக்கு ஏது நிகர்? ஏது உவமை? ஏது சமானம் என்று பேசுவது இயல்பு தான்.

இங்கே வள்ளுவர் குறித்திருக்கும் ஞான குருவுக்கும் குருவாக விளங்கும் மோனகுருவுக்கும் விளக்கம் சொல்லவே, தனக்குவமை இல்லாதான் என்று பெருமையாகப் பாடுகிறார்.

தனக்குவமை என்ற சொல்லின், உவமை என்பதற்கு, ஒப்புமை, ஈடு, இணை, எதிர், சமம், சாயல், நிகர், நேர் என்றெல்லாம் பொருள்கள் உண்டு.

இங்கே எல்லையற்ற ஞானத்தினரான குருதேவர்,

ஆற்றலால் உயர்வு பெற்ற பெரியார். செயற்கரிய செயல் செய்யும் சீராளர். வல்லமைக்கு வாழ்வளிப்பவர். உயர்வுக்கே உயர்வு தருபவர். அப்படிப்பட்டவர். வழங்குகின்ற வழிகாட்டுதலுக்கு ஈடு இணையே இல்லை . சமமும் இல்லை.

அத்தகைய ஆற்றலானது குருவிற்கு எப்படி வந்தது? விளைந்தது என்ற வினாவுக்கு விடை காண, நாம் வள்ளுவரைத்தானே நாட வேண்டியிருக்கிறது.

***இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார் (23)***

என்று துறந்தார் பெருமையில், சூட்சமத்தைத் திறந்து காட்டுகிறார்.

இருமை என்பதற்கு பிறப்பு, வீடு என்று குறிப்பார் பரிமேலழகர். நன்மை, தீமை என்று பேசுவார்கள் முற்போக்குச் சிந்தனையுள்ள உரையாசிரியர்கள்.

இங்கே வள்ளுவர் குறித்த இருமை என்பது இருமெய்களாகும். அந்த இரு மெய்யானது **உள்மெய், புறமெய்** என்பதாகும்.

இதை உடலுக்கு உள்ளேயும், புறத்தேயும் என்ற இங்கே நாம் பொருள் கொள்வதற்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன.

உடலை நான்கு விதமாகப் பிரித்துக் காட்டுவார்கள் சித்தர்கள்.

***1. பருவுடல் 2. நுண்ணுடல் 3. போர்வை உடல் 4. முதலுடல்***

**பருவுடல்:** என்பது வெளிப்புறத்தைக் குறிப்பது. பருவுடலில் இடம் பிடித்துக் கொண்டிருக்கும் புலன்கள் ஐந்து. இந்த ஐம்புலன்களின் வேகத்தையும், விளைகளையும், நாம் ஏற்கனவே முன்பகுதியில் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

***நுண்ணுடல்:*** என்பது உட்புறத்தில், உரத்து எழுகின்ற உணர்வுகளின் போராட்ட பூமியாகும்.

மனம், எழுச்சி, இறுப்பு என்பதுடன், ஓசை, ஊறு ஒளி, சுவை, நாற்றம் என்பதுடன் கூடிய எட்டுடனும் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களை எல்லாம், அவற்றின் வகை தெரிந்து, அவற்றின் ஆதிக்கத்தை அழித்து, அடிமைப்படுத்தியதன் காரணமாக, அற நிலைக்கு உயர்ந்த அரியவர், செயல்களால் பெரியவர். ஆமாம் இந்த உலக மக்களின் வணக்கத்திற்கும் வாழ்த்திற்கும் உரியவர்.

அதனால்தான், அவர் யாருக்கும் இணையில்லாத, உவமை இல்லாத பேறு பெற்றவர்.

குரு என்றதும், நமக்கு பல குருதேவர்களின் நினைவு வரும். அது இயல்புதான்.

அறிவினை விளக்கித் தெளிவளிப்பவர் **குரு.**

தெளிந்த அறிவின் தேர்ச்சியின் அறிவான ஞானத்தை அளிப்பவர் **ஞானகுரு.**

ஞானத்தின் ஞானமான மோனத்தை வழங்குபவர் **மோனகுரு.**

மோனகுரு என்றால், முதன்மையான ஞானம் கொண்டவர் என்பது பொருளாகும்.

ஞானகுருவுக்கும் குருவாக விளங்கும் மோனகுருவுக்கு, யார் நிகராக இருக்க முடியும்?

***நின்னிலும் சிறந்தவர் நீரே. நினக்குப் பிறர் உவமம் ஆகா*** என்று போற்றப்பட வேண்டிய பேராளர்.

அவரது தாள் சேர்ந்தார்க்கு என்று, அடுத்துவரும் சொல்லுக்குரிய அரும் பொருளையும் ஆய்ந்து பார்ப்போம்.

தாள் என்றால் திருவடி என்பார்கள். திருவடி என்றால் ஞானம் என்று பொருள் உண்டு.

சேர்தல் என்பதற்கு, இடைவிடாது நினைத்தல், நினைந்து உருகுதல் என்றெல்லாம் அர்த்தம் உண்டு.

தனக்கு நிகர் யாருமில்லாத குருவின் ஞானத்தை இடைவிடாது நினைத்து, அந்த நினைவிலே தோய்ந்து, அவரது அடியொற்றி சார்ந்து, சேர்ந்து, அவரது திறங்களைக் கற்று, வரங்களைப் பெற்று, வாழ்க்கை நெறியை வடிவாக அமைத்து உயர்த்திக் கொண்டவர்களுக்கு, மனக்கவலைகள் வராது. வந்தாலும் நிலைக்காது மாறிப் போகும்.

என்றாலும் வள்ளுவர் இந்தக் குறளில் பெய்திருக்கும் வார்த்தைகள் மனக்கவலை மாற்றல் அரிது என்பதாகும்.

மனக் கவலையை மாற்றல் அரிது என்பதால், மனம் இருக்கும் வரை, மனதிலே நினைவுகள் பிறக்கும் வரை, கரையானாக அரிக்கும் கவலைகள் இருந்து கொண்டே இருக்கும் என்ற வாழ்க்கையின் இயல்பை, மக்களின் பக்குவத்தை ஒட்டித்தான் பாடியிருக்கின்றார்.

மனக்கவலை எவ்வளவு வல்லமையுள்ளது என்பதையும் நாம் இங்கே அறிந்து கொண்டாக வேண்டும்.

கவலை என்ற சொல்லுக்கு, அச்சம், துன்பம், மனச் சஞ்சலம், பல நினைவு, விசாரம் என்றெல்லாம் பொருள்கள் நிறைய உண்டு.

நீச்சல் தெரியாதவர்கள், வெள்ளத்திற்குள் விழுந்து விட்டால், வெளியே வர முடியாமல், நிற்கவும் முடியாமல், தவித்து, தத்தளித்துப் போய் மூச்சு முட்டித் திணறுவதைப் போலவே, கவலை கொண்டவர்களும் அப்படித்தன் ஆடிப்போய் விடுகின்றார்கள். மனதை ஆட்டிப்படைத்து, அழுத்தி வளைத்து, கீழாக இழுத்துத் தொலைத்து, பலத்தையெல்லாம், அழித்துப் போடும், பயங்கரத்தைத் தான் கவலை என்றுகூறுகின்றார்கள்.

கவலை என்ற சொல்லே, எப்படி பிறந்திருக்கிறது பாருங்கள்.

***க+வலை*** என்று இந்தச் சொல்லை, இந்தக் கல்லைப் பிளந்து பார்க்கிறோம்.

வலை என்றால் பிடிக்கும் கருவி, கண்ணி என்று பொருள். எதையும் இழுத்துப் போடுவது, வளைத்துப் போடுவது என்பதற்கும் வலை என்று தான் பெயர்.

இது எப்படிப்பட்ட வலை என்றால் **க** என்கிற வலை.

அந்த **க** என்ற சொல்லுக்கு, அத்தனை அழுத்தம் எதற்கு என்றால், அதுதான் அந்த வலையை பயங்கரமாக மாற்றும் பெரும் சக்தியாக இருக்கிறது.

க என்பதற்கு, தீ, காற்று, தண்ணீர், வியாதி, எமன், காமன், காலம், மனம் என்று பல பொருட்கள் உண்டு.

இப்போது கவலையை பாருங்கள். எத்தனை விதமான வலைகள். இது நெருப்பு வலை, காற்று வலை, தண்ணீர் வலை, வியாதி வலை, எம வலை, காம வலை, காலத்தின் வலை என்று பல வகையான வலைகள், மனதை பிடித்துக் கொண்டல்லவா இருக்கின்றன.

அதனால்தான், கவலை கொண்டவர்கள் எல்லோருமே காற்றாக அலைகிறார்கள். அக்கினியால் முகம் கறுத்து, உடல் இளைத்துப் போகிறார்கள். நீராக ஒலித்து, புலம்பி நிற்கிறார்கள். காலத்தைக் கடத்த முடியாமல், கடக்கவும் இயலாமல் வியாதிக்குள் விழுந்து, எம வலைக்குள் மாட்டிக் கொள்கிறார்கள்.

கவலையே, காமத்தால் வருவதுதான். சகல துன்பங்களுக்கம் சாமரம் விரிப்பது காதலும் காமமும் தானே.

ஆகவே, இப்படிப்பட்ட மனக்கவலையை அழிக்கமுடியுமா, வேரோடு பிடுங்கி எறிய முடியுமா என்றால், முடியாது. முடியவே முடியாது என்று, மனிதர்களாகப் பிறந்தவர்களான அத்தனை பேருக்கும் தெரியும்.

அதனால்தான், வள்ளுவர் மாற்றல் என்று ஒரு வார்த்தையைப் போட்டார்.

மாற்றல் என்றால், மாற்றி வைத்தல், அதாவது ஒரு பொருளை ஓரிடத்தி...

இடத்திற்கு மாற்றி வைத்தல் என்று கூறலாம்.

மனதிலிருக்கும் கவலையை, அங்கிருந்து மாற்றி வைக்கலாம். ஆனால், அதை எடுத்தெறிந்து விட முடியாது. அறவே நீக்கிவிட முடியாது என்பதையும், நாம் உணாந்திருக்கிறோம்.

இங்கே மாற்றுதல் என்றால் எதை எப்படிச் செய்வது என்பதையும், நாம் கொஞ்சம் விளக்கமாகக் காண்போம்.

மனதிற்குள்ளே எண்ணங்கள் எப்போதும் சுனையாகக் கிளம்பி, ஊற்றாக ஊறி, அலையாகப் புரண்டு, வெள்ளமாகப் பெருக்கெடுக்கும் வேலைகள் தான், வேகமாக நடந்தேறிக் கொண்டே இருக்கும்.

இப்படி அலைபாயும் நினைவுகளில், மெலிதான விருப்பம் பிறக்கும். அது அவாவாக பறக்கும். பிறகு, ஆசையாக வெடிக்கும். வெறியாக உடைக்கும் நிகழ்ச்சிகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த நினைவுகள் நல்லதாக இருந்தால், மனத்தில் கொஞ்சம் அமைதி பிறக்கும். சலனம் குறையும். சபலம் மறையும்.

வெறியும் வேகமும், எதிர்பார்ப்பும் ஏக்கமும் மனதில் கூடியிருந்தால், கவலைகள் வந்து, கூடு கட்டிக் கொள்ளும். பாடுபடுத்திக் கொல்லும்.

அப்படிப்பட்ட கவலைகளை, மனதிலிருந்து மாற்ற வேண்டும் என்றால், அவற்றை மாற்றுகின்ற பொருள், தகுதியானதாக ஒன்று இருந்தாக வேண்டுமே!

மாற்றுகிற காரியம் நடைபெறுகிறபோது,

கவலைகள் மாற்றி வைக்கிற அந்த இடத்தில், தரமான நினைவுகளை வைத்தால் தானே, கவலைகள் நகர்ந்து இடம் கொடுக்கும். கவலை என்ற கல்லை நகர்த்த, பொருத்தமான சூழ்நிலையை மனதுக்குள் வைத்தாக வேண்டுமே! வளர்த்தாக வேண்டுமே!

எடுக்கும் இடம் காலியாகிறபோது, கொடுக்கும் பொருள் மிடுக்காகவும், மேன்மையாகவும் இருந்தாக வேண்டுமே!

நேற்றின் கதவுகள் இரும்பாலானவை. அதை அசைக்கவோ, திருப்பவோ, நமக்கு ஏற்றாற்போல, திறக்கவோ முடியாது.

நாளைய கதவுகள் எங்கே இருக்கின்றன என்பது நாமறியாத ஒன்று. வழியில்லாத பயணத்திற்காக, இன்றே ஏன் வாடி, வருந்தி, வதங்க வேண்டும்?

இன்றைய பயணத்திற்கு எதிரே வழிகள். இயக்க முடிகிற கதவுகள். எதற்கும் ஒத்துழைக்கின்ற மன நுட்பாளிகள் எல்லாம், மனதை ஒரு நிலைப்படுத்த உந்தும் உற்சாக மீட்டல்கள்.

ஆக, கவலைகளை களையெடுப்பதுபோல, மனதுக்கு மாற்றுச் சிந்தனைகள் வழங்கும் வழி வகைகளைத் தான் குருவானவர் கற்றுத் தருகின்றார் என்ற நினைவையும் இங்கே குறித்துக் கொள்வோம்.

1. நடக்கின்ற பயண வழியில், அடுத்து வைக்கின்ற காலடியை, தடத்தை மட்டுமே பார்ப்போம். தூரத்தில் தெரிகின்ற, மங்கலான பாதையை உற்றுப் பார்த்து, விழித்து, விளங்காமல் வெறுப்புற்று வருந்துவது எதற்காக?

2. கையில் இருப்பதை வைத்து, கண்களுக்குத்

தெரிவதை வைத்து, நெஞ்சுக்குள் நிகழ்ச்சி நிரல்களை நெறிப்படுத்திக் கொள்வது தான், மனதுக்கு சுகத்தைக் கொடுக்கும் . கவலைகளை கண்காணாத இடத்துக்கு விரட்டி அடிக்கும்.

3. ஒரு நேரத்தில் ஒரு வேலை. அந்த வேலை முடியும் வரை, அதைப்பற்றியே சிந்தனை. அதைப் பற்றியே பேச்சு. அதைப்பற்றியே முயற்சி என்று இருக்கிற போது, மனம் ஒரு நிலைப்பட்டுவிடுகிறது. வீணாண கவலைகள் அங்கே விளைவதுமில்லை. கிளைப்பது மில்லை. கிறுகிறுக்க வைப்பதுமில்லை.

4. இன்றைய நிகழ்ச்சிகளில், மனம் ஈடுபட்டு விடுகிற போது, எதிர்ப்படுகின்ற பதட்டங்கள், பரபரப்புகள், மன அரிப்புகள், மன அழுத்தங்கள், மன இறுக்கங்கள், (Tensions, stress and strains) எல்லாம் முகத்தை மூடிக் கொண்டு, மறைந்தே விடுகின்றன.

5. ஒவ்வொரு நாளும் புதிய முயற்சிகள், புதிய இலட்சியச் சிந்தனைகள், மனதில்புகுந்து கொள்கிற போது, மனக்கவலைகள் தங்கள் இடங்களைத் தந்து விட்டு, விடைபெற்றுக் கொள்கின்றன.

6. நாட்கள் தான் மாறிக் கொண்டு வருகின்றன. ஆனால் நாட்கள் எனும் மாறுகின்ற காலத்தை மாற்றுகின்ற இயற்கை விதிகள் எல்லாம், மாறாமலேயே இருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஆக, மனதை முழுமையாக, புது வாழ்வைப் படைக்கும் பாணியில், தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியை, அறிவின் மலர்ச்சியை, ஆன்ம வளர்ச்சியை , தனக்கு உவமையில்லாமல், தலைமை இடத்தை வகித்து

வருகின்ற குருவால் தான் கொடுக்க முடியும். கற்பிக்க முடியும்.

அதனால்தான், தனக்கு உவமை என்று யாரும் இல்லாத, நிகரில்லாமல் வாழ்கின்ற குருவின் அரிய ஞானத்தைப் பெற, அவருடன் சேர்ந்து விட்டால், மனக்கவலைகளை மாற்றிவிட முடியும்.

அவ்வாறு அரிய குருவின் திருவடிகளை சேர்ந்து வாழ இயலாதவர்களுக்கு, எந்த நாளும் மனக் கலலையை மாற்றவே முடியாது என்கிறார் வள்ளுவர்.

***அல்*** என்றால் இருள் என்றும், ***ஆல்*** என்றால் நஞ்சு என்றும் பொருள் உண்டு.

இந்த மனக் கவலை என்பது மனித குலத்தை இருள் மயமாக்கக் கூடிய ஆற்றலும், நச்சுத்தன்மையை விளைவிக்கும்வேகமும் கொண்டது என்பதால், அல் ஆல் மனக்கவலை என்றும் நாம் பிரித்துப் பார்க்கிறோம்.

ஆகவே, குருவின் திருவடி, மனித குலத்தைக் காக்கிறது. வளமான வாழ்வுக்கு வழி காட்டுகிறது. அந்த அற்புத வாழ்வின் ஒளியை அடைய, ஆழ்ந்த வைராக்யத்தையும் வளர்த்து விடுகிறது.

குருவின் நெறியே, கொழிக்கும் ஞானமே, பின்பற்றுபவர்களின் பெரும் பாக்கியமாக இருக்கிறது என்பதால், உள்ளத்தை நெறிப்படுத்தும் குருவின் ஞான போதனைகளைக் கொண்டு, ஞான தீபத்தை ஏற்றி வைத்து, ஞாலத்தில் ஒளிமயமான வாழ்வு பெற்றுக் கொள்க என்பதையே இந்தக் குறளில், வள்ளுவர் வலியுறுத்தி வழி நடத்துகின்றார்.

# 11. ஞானமும் வலிமையும்

**"அற வாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிற வாழி நீந்தல் அரிது" (8)**

அறக் கடலாகிய அந்தணனது, தாளாகிய புனையைச் சேர்ந்தார்க்கல்லது, அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது என்கிறார் பரிமேலழகர்.

அறம் பொருள் இன்பமென உடன் எண்ணப் பட்ட மூன்றனுள், அறத்தை முன்னர்ப் பிரித்தமையின், ஏனைப் பொருளும் இன்பமும் பிறவெனப் பட்டன என்று மேலும் விரிவுரை வழங்குகிறார் பரிமேலழகர்.

**"அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**பிற ஆழி நீந்தல் அரிது "**

என்று குறளைப் பிரித்துப் பதம் காணுகிறோம்.

அற வாழி என்பதனை **தர்மசக்கரம்** என்று சமயவாதிகள் பொருள் கூறுகின்றனர்.

அறக் கடலாக விளங்கும் அந்தணனின் தாளை சேர்ந்து கொள்ளா விட்டால், பிற கடல்களை நீந்திக் கடக்க முடியாது என்று முற்போக்குச் சிந்தனையாளர்கள் பொருள் கூறுவார்கள்.

இந்தக் குறளில் எடுத்தாளப் பட்டிருக்கும் சுவையான சொற்சுனைகள் எவ்வளவு சுகமான இனிமையும், பொருண்மையும் கொண்டு விளங்குகின்றன என்று நாம் சிறிது சுவைத்துப் பார்ப்போமே!

அற ஆழி என்றவுடன், அறக்கடல் என்று அர்த்தம் நமக்குத் தெரிகிறது.

அறத்தின் கடல் என்பதாக, ***அற*** என்ற சொல்லுக்குப் பொருள் காண்கின்றனர்.

இங்கே, வள்ளுவப் பெருமகன், அறம் என்று கூறவில்லை. குறிக்கவில்லை. அற என்றுதான் தந்திருக்கிறார்.

அறம் என்பதை ***செய்தலும், விலக்கிய ஒழித்தலும் ஆம்*** என்று விளக்கம் கூறுகிறார்கள்.

மனு முதலிய நூல்கள் ஒரு சாராருக்கு வாழ்க்கைத் தரவும், புகழ்பாடுவதற்காகவும், படைக்கப்பட்டவை. அவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்வது, அடிமையாக வாழ்ந்து, அறியாமைக்குள் ஆழ்ந்து, அறிவிருந்தும் மனிதராக வாழ முடியாமல், குழப்பச் சேற்றில் மூழ்கிச் சாகிற நிலைமையே சேரும் என்று அறிஞர் பலர் கூறுவதால், அவ்விளக்கத்தை நாம் இங்கே விட்டு விடுகிறோம்.

நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டவே வள்ளுவர்

திருக்குறளை எழுதினார். அவரது பொய்யில்லாத குறட்பாக்களுக்கு, உரை தர வந்த பலர், அவரது குறள்களுக்கு மூட நம்பிக்கைகளை முக்காடாகப் போட்டு மூடி, சமயத்தீயில் போட்டு, சமைத்து விட்டனர். தகர்த்து விட்டனர்.

சமயக் கணக்கர்களுக்கு, வாய்ப்பும் வசதியும் இருந்த காரணத்தால், அவர்கள் எழுத்தும் பேச்சும், குறள்களுக்குரிய உண்மைக் குறிக்கோள்களை, மக்களுக்கு வேறு விதமாய் போய்ச் சேரச் செய்தன.

இங்கே ***அற*** என்ற சொல்லுக்கு, நாம் கொண்டிருக்கும் நம்பகமான பொருளாவது, உடலியல், மனித வள இயல், உலகியல் என்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது.

உலக வாழ்க்கையை உய்த்திட, உயர்த்திட, ஒளி மயமாக்க உதவுவது உடலேயாகும்.

உடலால் உள்ளமும் உறுதியும் வலிமையும் பெற மனித வளம் மிகுதியாகிறது.

மனித வளம் மேம்பாடு பெறப்பெற, உலக வாழ்க்கை உன்னத நிலைக்கு உயர்ந்து போகிறது.

ஆகவே, இங்கே அற என்ற சொல், உடலைக் கெடுக்கின்ற தீய செயல்களை, மனித வளத்தினை மாய்த்துப் போடுகின்ற மாய்மாலச் செயல்களை, பிறர் பழிக்கும் பண்பற்றச் செயல்களை முழுவதுமாக அறுத்தெறிகிற உண்மை நிலையைத்தான் ***அற*** என்று சொல்லியிருக்கிறார்.

அற என்பதற்கு, ***முற்ற, முழுதும், அறும்படி, தெளிவாக, செவ்வையாக,*** என்று பல பொருள்களை நாம் அறிகிறோம்.

**உலகம் பழிக்கும் படியான, உடலைக் கெடுக்கும் படியான தீச் செயல்கள் அறும்படி, அற்றுப் போகும்படி, முற்ற முழுதுமாக விலக்கி, அழித்து, ஒழித்து நிற்கும் பண்பாளர் தான் அந்தணர் என்கிறார் வள்ளுவர்.**

***ஆழி*** என்றால் கடல் என்பர். கட்டளை என்பர்..

அற ஆழி என்பதை, அறக்கடல் என்கிறார்கள். ஆழி என்றால் கடல் என்றால், கடல் என்பதற்கு மிகுதி என்ற ஒரு பொருளும் உண்டு.

இல்லறத்தில் இருந்து வெளியே வருவதை ***துற*** என்றனர். ஆசைகளைத் துறந்து வருவது மட்டுமல்ல துறவு. அத்தனை அவாக்களையும் ஆசைகளையும் அறுத்து வெளிவருவதுதான் துற அறம் என்றனர். **துறவு எளிது. துறவறம் தான் கடினம்.**

ஆக, உலகத்தில் இன்பம் என்பது எது எது என்று, அவரவருக்கு ஏற்ப வகுத்துக் கொண்டு மக்கள் எல்லோரும் ஆளாய் பறக்கின்றார்களோ, அவற்றையெல்லாம் அறவே துறந்த கடல்போன்ற பெருமை கொண்டவராக விளங்குபவரையே அந்தணன் என்கின்றார்.

அப்படியென்றால், அந்தணர் என்கிறபோது, ஏதோ ஒரு சாதியினரை பெருமைப்படுத்த வேண்டும் என்ற சொல்லிய சொல்லா? சாதாரண மக்கள் இப்படித்தான், திசை மாறி சிந்தித்துக் கிடக்கின்றனர்.

அந்தணர் என்போர் அறவோர் என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாலும், அந்தணர் என்பவர்கள் ஐயர்கள், பார்ப்பனர்கள் என்றுதான் பலர் நினைவு

கூர்கின்றனர். உலக நிலையின் உண்மை நிலையும் இதுதானே!

அப்படியில்லை என்று, அந்தக் காலத்திலேயே, பிங்கல முனிவர் தன் நிகண்டில், நேரான பொருளைச் சொல்லியிருக்கிறார்.

***அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கம்*** என்று தொல்காப்பியம் விளக்கம் தருகிறது.

**''ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல்**
**ஈதல் ஏற்றல் என்றிவை ஆறும்**
**ஆதிக் காலத்து அந்தணர் தொழிலே''**

(பிங்கலம் 729)

அவர்களுக்கு தாமரை மாலை, வேதக் கொடி என்பதை ***மாலை கமலம் மறை கொடியாகும்*** (பிங்கலம் 730) என்றும்;

அவர்களின் தொழிலுக்கு உதவுகிற பொருளாக உள்ளவை ***தருப்பையும் முஞ்சியும், சமித்தும் அவர்க்கே*** (பிங்கலம் 731) என்றும் விளக்கி யிருப்பதைக் காணலாம்.

***அந்தணர் அவர்க்கே வேதமார்க்கம்*** (பிங்கலம் 2091) என்பதையும் இங்கே நாம் புரிந்து கொண்டால் குழப்பம் தீர்ந்து போகும்.

அறிவாண்மையாலும், ஆன்ற சான்றாண்மை யாலும், சீரிய பண்பாண்மையாலும், நேரிய அருளாண்மையாலும் நிமிர்ந்து நிற்கும் குருவானவர் தான், ***அந்தணர்*** என்று இங்கே குறிக்கப்படுகின்றார். அவர்களிலிருந்து அறிவாண்மையும் செந்தண்மையும்

கொண்டவர்களே இந்த அந்தணர்கள் என்று பிரித்துக் காட்டவே அந்தணர் என்று கூறியிருக்கிறார்.

***அறம்புரி அருமறை அந்தணர்*** என்று ஐங்குறு நூறு புகழும். மனித குலத்திற்கு அறத்தையும், உயர்வாக்குதற்குரிய உண்மை மறைபொருளையும் விளக்குகின்ற மாண்பாளராகத் தெரிவிக்கிறது.

அத்தகைய அந்தணர்களுக்கு அருளானது குடையாக விளங்குகிறது. அறமானது செங்கோலாகத் திகழ்கிறது.

அதனால்தான், அந்தணர் என்பவரை ***அறவாழி ஆள்வோன்*** என்று மணிமேகலை புகழ்ந்து பேசுகிறது.

இத்தகைய பேராண்மை மிக்க அந்தணராகிய, குருவிற்கு, அத்தனை பேர்களையும் அரவணைத்துக் கொள்கின்ற, ஆதரித்துச் செல்கிற பண்புகளைக் குறிக்க, அந்தசொல்லே அறிவுப் பூர்வமாக உருவாக்கப் பட்டிருப்பது போலல்லவா தெரிகிறது!

***அம் +தணன்*** = அந்தணன் என்று பிரிப்பார்கள்.

***தணன்*** என்றால் தீ போன்றவன். ***அம்*** என்றால் அழகு என்றும், நீர் என்றும் பொருள் உண்டு.

அந்தணராக விளங்கும் குருவானவர், தணலாகவும் இருக்கிறார். தண்ணீராகவும் இருக்கின்றார்.

அதாவது தட்ப வெப்பம் நிறைந்த மண்ணுலகம் போல, மழையையும் ஒளியான வெம்மையையும் தருகிற விண்ணுலகம் போல; குருவ்வானவர் திகழ்கிறார்.

அவர் பெற்றிருக்கும் ஞானத்தால், மோனத்தால், ஒளி மிகுந்த அழகு உருவமாகத் திகழ்கிறார் என்கிற பொருள்களையெல்லாம் உள்ளடக்கிய சொல்லாக, ***அந்தணன்*** என்று சொல் அமைந்திருக்கிறது.

அந்தணருடைய தாள் சேர்ந்தார்க்கல்லால் எனும் வரிக்கு, முந்தைய குறளில், விளக்கமாக எழுதி யிருப்பதால்,இங்கே தொடரவில்லை.

பிறவாழி என்ற சொல்லைப் பிரித்து ***பிற+ஆழி*** என்று வருகிற போது, மற்றைய கடல்கள் என்று பொருள் வருகின்றது.

வாழ்க்கையை நீண்ட நெடும் பயணம் என்று கூறுவார்கள். அது நில வாழ்க்கைக்குப் பொருந்தும்.

நிலவுலகைச் சுற்றி நீருலகம் இருப்பதால், அதை நினைவு படுத்துகிறபோது, வாழ்க்கைப் பயணத்தை எதிர்நீச்சல் என்பார்கள்.

எதிர் நீச்சல் போடுகிற திறமையும், தேர்ச்சியும் மிகுந்தவர்கள் தாம், எதிலும் வெற்றி பெற முடியும் என்பது பெரியோர்கள் கருத்தாகும்.

இங்கே அந்த எதிர்நீச்சலை எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டளையைக் கொடுக்கவே, இங்கேயும் ஆழி என்ற சொல்லைப் போட்டிருக்கிறார்.

***கடல்*** என்றால் ***மிகுதியும்*** என்ற பொருள் உண்டு.

நிலவுலகில் மிகுதியான இடத்தை நீர் உலகம் அதாவது கடலுலகம் தான் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது.

கடலை நீந்துதல் என்றார். நீந்துதல் என்றால் கடல் என்று தான் அர்த்தம்.

பிற ஆழி என்றால் பிற கடல்கள் என்று பொருள் என்றால், முதலில் அற ஆழி என்றதனால், நமக்கு பிற கடல்கள் எளிதாகவே தெரிகிறது.

பிறகடல் என்பது வாழ்க்கையில் வந்து வாட்டுகின்ற துன்பங்களை எல்லாம் துன்பக் கடல்; துயரக் கடல், தீமைக் கடல், தொல்லைக் கடல் என்று பல கடல்களாகக் கூறுவார்கள்.

மனதை மகிழ்விக்கின்ற நிகழ்ச்சிகளை, அன்புக் கடல், பண்புக் கடல், அருட்கடல், அறிவுக்கடல், அறக்கடல், பொருட்கடல் என்றும் கூறுவார்கள்.

ஆகவே, இப்படிப்பட்ட கடல்களை யெல்லாம் நீந்த வேண்டும் என்றால், அகிலத்து சொந்த பந்தங்களை, ஆசாபாசங்களை, பொருள் இன்பம் போன்றவற்றை யெல்லாம், அறவே ஒழித்து, முற்றும் துறந்த செந்தண்மை மிக்க அந்தணரான, மோன குருவின் ஞானத்தைப் பெற்று, அவர் வழி சார்ந்து, அயராமல் நடந்திடவேண்டும்.

இதுவரையில், குருவிடம் சென்றால் என்ன பெறலாம்? எப்படி பெறலாம்? அதனால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்ற ஞானத்தின் உண்மையை உரைத்துக் கொண்டே வந்தார் வள்ளுவர்.

கற்றதனால் பெற்ற அறிவினால், குருவின் ஞானத்தைப் பெறவேண்டும் என்றார்.

அப்படி பெறுகின்ற ஞானத்தின் பயனால்

பெருமையும் புகழும் பெற்று நிலத்திலே நீடு வாழ்வார் என்றார்.

அவரின் அறிவுரை பெற்று, ஞானவழி நடந்தால், எப்போதும் துன்பம் இல்லை. துன்பமே தொடராது என்றார்.

குருவின் ஞானம் அகத்தின் இருளைப் போக்கிவிடும் என்றார்.

பொறிவாயில் அவித்தவனின் நெறி நின்றால் நீடு வாழ முடியும் என்றார்.

அத்துடன், மனக்கவலைகளையும் மாற்றி விட முடியும் என்ற நம்பிக்கையை தெரிவித்தார் வள்ளுவர்.

ஏழு குறள்களில் கூறாது விட்டதை, எட்டாவது பாடலில், குருவானவரின் ஞானம் மட்டும் போதாது. அந்த ஞானத்தை கைவரப் பெற்றதால் மட்டும் போதாது என்று புத்தியில் படும்படியான பாதையைக் காட்டுகிறார்.

***ஞானத்தை அகத்தில் ஏற்றுக் கொண்டு, அதனை செயல்படுத்த, புற தேகத்துக்கு வலிமை வேண்டுமல்லவா!***

அந்த வலிமையை சுட்டிக் காட்டவே, நீந்தல் என்ற சொல்லை இங்கே கொடுத்திருக்கிறார்.

நீந்தல் என்பதை நீச்சல் என்று சொல்வார்கள்.

இந்த நீச்சல் வேலையை இரண்டு விதமாகச் செய்யலாம். ஒன்று வெள்ளத்துடன் பின்னே செல்லுதல், மற்றொன்று வெள்ளத்தை எதிர்த்து முன்னே செல்லுதல்.

வெள்ளத்தை எதிர்த்து நீந்துவதுதான் எதிர் நீச்சல் என்பதாகும். இந்த எதிர் நீச்சல் முறையைத் தான் வள்ளுவர் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

***நீந்தல்*** என்ற சொல்லுக்கு, கடத்தல் என்றும் வெல்லுதல் என்றும் அர்த்தமாகும்.

***கடத்தல்*** என்றால், தாண்டல், பாய்தல், மீறுதல், மேற்படுதல், செலுத்துதல், நேரே பொருதல் என்ற பொருள்களை அறியும் போது, நீந்தும் செயலுக்கு, இத்தனை முயற்சிகளும் தேவைப்படுகிறதே!

இத்தனை முயற்சிகளையும் செய்து, எதிர்த்து நீந்த, உடல் வலிமையோடு இருந்தால்தானே முடியும்!

நீந்துவதற்கு வலிமையான கைகள், வலிமையான கால்கள், மூச்சடக்கும் திறன், தளராத மனம், துணிந்து முன்னேறும் உற்சாகம், உத்வேகம், தூரத்தைக் கடக்கும் ஆர்வம், அந்த ஆர்வத்தால், எழும் எதிர்ப்புகளை எதிர்த்துப் பொருதல், போராடுதல் எல்லாம் வேண்டுமல்லவா!

ஆறுகளிலும், குளங்களிலும், ஊருணிகளிலும், ஏரிகளிலும் நீந்துவது எளிது. அங்கே தண்ணீரின் ஓட்டம் குறைவாக இருக்கும். வேகம் இருக்கும். அவற்றை எளிதாக சமாளித்து நீந்த முடியும்.

ஆனால், ஆழம் நிறைந்த ஆழி இருக்கிறதே! பரந்து விரிந்த கடல் இருக்கிறதே! அந்தக் கடல் காண்பவர்களை அச்சப்படுத்துவதே, அது எழுப்பும் அலைகளால் தான்.

பயமுறுத்துகின்ற அலை, பாய்ந்து நீந்த வருபவர்களைப் பலஹீனப் படுத்தி, விரைவில் சோர்ந்து போகச் செய்து விடும்.

அப்படிப்பட்ட சோர்வு வந்து விட்டால், தீர்வு காண முடியாமல் தோல்வியைத்தானே சந்திக்க வேண்டும்! அதனால்தான் வலிமையும் வேண்டும் என்பதை, மறைமுகமாக வலியுறுத்தியிருக்கிறார்.

நீந்தல் அரிது என்பதால், நீந்தவே முடியாது கடக்கவே முடியாது. கரையை அடைய முடியாது. வினைகளில் வெற்றி பெற முடியாது.

ஆகவே, **ஞானமும் வலிமையும் இரண்டு கண்களாக இருக்க வேண்டும்** என்பதையே, இங்கே கோடிட்டுக் காட்டுகிறார்.

வலிமையில்லாத தேகம் வாழ்க்கைக்குப் பயன்படாது. தெளிவில்லாத ஞானம், குழப்பத்தை உண்டாக்கி, தேறாமல் செய்து விடும்.

இப்படி ஒரு கருத்து, இந்தக் குறளில் எப்படி வரும் என்ற ஒரு சந்தேகத்தை, நீங்கள் கேட்கலாம். நியாயம் தானே!

இதை அடுத்து வருகிற ஒன்பதாவது குறளில், ஐம்பொறிகள் பற்றிப் பாடி, அவை அவற்றிற்கு உரிய பணியை செய்யாவிட்டால், அவற்றால் பயனேது என்று வள்ளுவர் ஒரு வினாவை எழுப்புகின்றார்.

ஆழி என்பதற்குரிய விளக்கத்தை ஆழியும் கடலும் என்ற பகுதியில் காணவும்.

ஐம்பொறிகள் அவற்றின் ஆற்றலை, செயல்படும் வலிமையை இழந்தால், அவற்றால் பயனேது என்கிறார்.

அதுபோலவே, ஐம்புலன்களை தன் புறத்தே

கொண்டிருக்கும் தேகம், தானும் வலிமையின்றி இருந்தால், என்ன ஆகும்!

தேகம் என்பது முதல் அல்லவா! தேகம் என்பது உயிர்நிலை அல்லவா! ஐம்பொறிகளுக்கும் அது தாயாக இருந்து திடப்படுத்துகிற தல்லவா!

ஆகவே, மனிதர்க்கு ஞானத்துடன், உடல் வலிமையும் வேண்டும் என்பதற்காகவே, நீந்தல் என்று சொல்லி வைக்கிறார்.

அவனியின் ஆசைகள் அனைத்தும் அறுத்து அடக்கி, முற்றும் துறந்த மேன்மையை மிகுதியாகப் பெற்ற குருவான அந்தணரின் ஞானத்தை, வலிமை சார்ந்த வாழ்வு முறையை, வாழ்க்கையாகக் கொள்ளா தவர்கள், வாழ்வில் ஏற்படும் பிற துன்பங்களை கடல்களை யெல்லாம் நீந்திக் கடப்பது என்பது முடியாத காரியமாகும். அப்படியென்றால், நீந்தி செயிப்பதற்கு ஞானத்தோடு உடல் வலிமையும் வேண்டும் என்பதே பொருளாகும்.

# 12. தலையாய தலை

**"கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"** ***(9)***

"தத்தமக்கேற்ற புலன்களை, கொள்கையில்லாத பொறிகள் போல, பயன்படுதல் உடையவை அல்ல; எண் வகைப்பட்ட குணங்களை உடையானது தாள்களை வணங்காத தலைகள்" என்பது பரிமேலழகர் உரையாகும்.

எண்ணிலடங்கா நிறைந்த பண்புகள் பல வற்றையும் உடைய, அறிவாற்றலின் சிறந்த சான்றோரைப் போற்றிப் புகழ்ந்து வணங்காதவர்கள், ஐம்புலன்களையும் இழந்த ஐம்பொறிகள் போல, பயனற்றவர் ஆவர் என்பதும்; எட்டு குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காத தலைகள், கேளாத செவி முதலியவை போல பயனற்றவையாகும்" என்று பலரின் கருத்துரைகள், தெளிவுரையாக வந்திருக்கின்றன.

வள்ளுவர் பெருமான் கூற வந்த கருத்து என்ன என்பதையும் தொடர்ந்து காண்போம்.

***கோள் இல்பொறி இன்குணம் இலவே எண்குணத்தான் தாளை வணங்கா தலை*** என்று பதம் பிரித்திருக்கிறோம்.

இனி, ஒவ்வொரு சொல்லின் உட்பொருளையும் முதலில் காண்போம்.

***கோளில் பொறி*** என்பதற்கு கொள்கை இல்லாத பொறி என்று பரிமேலழகரும்; ஐம்புலன்களையும் இழந்த பொறிகள் என்று நாவலர் நெடுஞ்செழியனும் பொருள் கண்டிருக்கிறார்கள்.

***கோள்*** என்பதற்கு கிரகம் என்றும், கோட்பாடு என்றும், கொள்கை என்றும், வலிமை என்றும் பொருள்கள் உண்டு.

இங்கே கோள் என்பதற்கு வலிமை என்றே பொருள் காண வேண்டியிருக்கிறது. பொறிகள் என்றால் இங்கே ஐம்பொறிகள் தானே இருக்கின்றன!

வலிமை இல்லாத பொறிகள் என்று பொருள் காணுகிற போது, பொறிகள் வலிமையாக இருக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் உறுதிசெய்து கொள்கிறோம்.

வலிமையற்ற பொறிகள் வாழ்க்கைக்கு உதவாது போகின்றன.

***பொறி*** என்றால், இந்திரியம் என்றும், தீப்பொறி என்றும், அடையாளம் என்றும், செல்வம் என்றும் பல பொருட்கள் உண்டு. அறிவு, புலப்பொறி என்றும் கூறுவார்கள்.

எண்குணம் என்றால் வலிமையான குணம் என்று

பொருள். ஆனால் குணம் என்பதற்கு தன்மை, ஒழுக்கத் தன்மை, தகுதி, திறன், இயல்பு, என்றெல்லாம் அர்த்தங்கள் உண்டு.

எண் குணத்தான் என்றால் கடவுள் என்றும், அருகன் என்றும் பொருள்கள் உண்டு.

அருகன் என்பதற்கு, பக்குவன், தக்கவன், அதிசயன், அந்தணன், அறிவன், ஆசான், புண்ணியன், புனிதன் என பல பொருட்களைக் காண்கிறோம்.

இங்கே, கோளில் பொறி எண் குணம் இலவே என்ற சொற்களுக்கு நாம் பொருள் காண்கிற போது, வலிமை இல்லாத ஐம்பொறிகளான கண், காது, வாய், மூக்கு, செவி, மெய் எல்லாவற்றிற்கும் வலிமையான (குணம்) நலம் இல்லையே என்பதாகத்தான் ஏற்க முடிகிறது.

ஐம்பொறிகளும் வலிமையோடு இருந்தால்தான், ஒருவர் முழு மனிதராக உலகில் வாழ முடியும். உலா வரமுடியும்.

ஏன் அப்படி என்றால், அதுதான் மானிட பிறவியின் மகிமையாகும். மரியாதை மிக்க மதிப்பான சிறப்புமாகும்.

இயற்கைப் பொருட்கள், மற்ற உயிரினங்கள் எல்லாவற்றையும் நாம் ஆராய்ந்து பார்க்கிறபோது, அப்படிப்பட்ட உண்மை தான் நமக்குக் கிடைக்கிறது.

ஒரு ரோஜாப் பூவை எடுத்து, அதன் இதழ்களை ஒவ்வொன்றாய் பிய்த்துப் பாருங்கள். எத்தனை இதழ்களை அந்தப் பூ இழந்தாலும், அதற்கு ரோஜா என்றுதான் பெயர்.

ஒரு மரத்தின் கிளைகளை எத்தனை தான்

வெட்டினாலும், அதற்கு மரம் என்றுதான் பெயர். ஆனால், மனித உடலில் உள்ள உறுப்புக்களில் ஒன்று குறைந்தாலும், அவனை, மனிதன் என்று கூற மாட்டார்கள். அவன் எந்த உறுப்பை இழந்தானோ, அந்த உறுப்புக்கேற்ற பெயரை வைத்துத்தான், விகாரமாகக் கூறுவார்கள்.

கண்ணை இழந்தால் குருடன், காதை இழந்தால் செவிடன், வாயை இழந்தால் ஊமை, மூக்கை இழந்தால் மூக்கரையன், அதேபோல,மெய்யில் கையை இழந்தால் நொண்டி, காலை இழந்தால் முடவன், தலையை இழந்தால் முண்டம், உடம்பின் சுகத்தை இழந்தால் நோயாளி, உயிரை இழந்தால் பிணம்.

இந்தக் குறைகளை பிங்கல நிகண்டு விளக்கமாகப் பேசுகிறது.

**''சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்**
**கூனும் குறளும் ஊமையும் செவிடும்**
**மாவும் மருளும் என்ப மக்கட்கு**
**ஏயும் சிறப்பிலா எண்பெயர் எச்சம்''**

(பிங்கலம் 430)

சிதடு என்றால் குருடு; உறுப்பில்லாமல் குழந்தை பிறக்கும் போது பிண்டம்; கூன், குள்ளத்தன்மை, ஊமை, செவிடு, மிருகத்தன்மை, உறுப்பு மயக்கம் என்று எட்டு ஊனங்கள்.

உறுப்புக்கள் இல்லாதபொழுது, அதற்குப் பெயர்கள் வேறு. பயனில்லாத எந்த பொருட் களுக்கும் பெருமை இல்லை என்பது தான் உலக இயல்பு.

அதுபோல, இருந்தும் பயனில்லாத உறுப்புக் களுக்கு பெருமை எப்படி கிடைக்கும்?

அதனால்தான், வலிமை இல்லாத ஐம்பொறி களின் இயல்பாக இருக்க வேண்டிய நலம் இல்லை யென்றால், அவற்றால் எதுவும் பயன் இல்லையே.

உலகக் காட்சிகளை பார்க்கிறேனே! எழுகின்ற ஒலிகளைக் கேட்கின்றேனே! வருகின்ற மணங்களை நுகர்கின்றேனே! தருகின்ற சுவையினை ருசிக் கின்றேனே! உடம்பால் குளிரையும் வெப்பத்தையும் மட்டுமல்ல, உணர்வுப் பூர்வமானவற்றை தூய்க்கின்றேனே என்று பலரும் கூறலாம்.

மேலே கூறிய எல்லா நிகழ்வுகளையும், ஐந்தறிவுயிர்களும் செய்கின்றன. மாக்களும் மற்ற விலங்கினங்களும் தான் செய்கின்றன. அப்படி யென்றால், மனித செய்கைகள் அவற்றிற்கு மாறுபட்டனவா என்று கேட்டால், ஆமாம் என்றுதான் அர்த்தம்.

**"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே**
**மெய்யுணர்வு இல்லாதவர்க்கு"** **(354)**

ஐம்பொறிகளாலும் ஒருவர் எல்லாம் பெற்றாலும் கூட, உலகில் உள்ளனவற்றை ஆராய்ந்து பார்த்து, தெளிந்து, உண்மையை உணராவிட்டால், அது பயனில்லாமல் போகும் என்று வள்ளுவரே பாடி, நம்மை வழிப்படுத்துகிறார்.

கண்ணோட்டம் இருக்குமிடத்தில் அன்பும், செவி நாட்டம் இருக்குமிடத்தில் இரக்கமும், நாசி ஓட்டம் இருக்கும் இடத்தில் தூய்மையும், நாவோட்டத்தில் வாய்மையும், மெய்யோட்டத்தில் உழைப்பின்

மேன்மையும் விளங்க வேண்டும் என்பது தான் மெய்ப்பண்பாட்டின் முக்கிய வேள்வியாகத் திகழ்கின்றது.

ஆக, ஒவ்வொரு பொறிக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தக் குணமாகிய பண்பெனும் தொழில், அந்த ஐந்தும் ஆற்றல் மிக்கதாகவே இருக்க வேண்டும் என்பது இயற்கை நெறி.

அந்தப் பொறிகள் எப்பொழுது பயனற்றுப் போகின்றன என்றால், எண்குணத்தான் தாளை வணங்காதத் தலை என்கிறபோது, என்கிறார் வள்ளுவத் தேவர்.

எண்குணத்தான் என்ற சொல்லில் எல்லோரும் தடுமாறிப் போகின்றார்கள். தங்களை மறந்து போகின்றார்கள் சிலர். இன்னும் சிலர் தங்களையே இழந்து போகின்றார்கள்.

எண்குணத்தான் என்றால், எட்டு வகையான குணங்களை உடையான் என்கிறார் பரிமேலழகர். எண்குணம் என்றால் எளிய குணம் என்கிறார்கள் சில உரையாசிரியர்கள். எண் வகைப்பண்பு என்றும் சொல்கிறார்கள்.

இறைவனுக்குத்தான் எண் குணம் உண்டு என்று அடித்துப் பேசுகின்ற ஆன்மிகத்தார் பலருண்டு. அவர்களிலும் பலவகையினர் உண்டு. அருகனுக்குரிய எண் குணம், சிவனுக்குரிய எண் குணம், வணிகருக்குரிய எண்குணம், மனிதருக்குரிய எண் குணம் என்று பலவகையான எண் குணத்தாரை நமக்கும் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார்கள் நமது முன்னோர்கள்.

அவற்றை யெல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்கிற போது, தேர்ந்து கொண்டு, ஒரு முடிவுக்கு வருகிற திடமான ஞானம் நமக்கு வந்துவிடும் என்ற நம்பிக்கையுடன், ஆய்வினைத் தொடருவோம்.

1. அருகன் எண்குணம் (அருக தேவன்)

1. *அனந்த சுகம் - அளவில்லாத சுகம்*
2. *அனந்த ஞானம் - அளவில்லாத ஞானம்*
3. *அனந்த தரிசனம் - அளவில்லா காட்சியர்*
4. *அனந்த வீரியம் - அளவில்லாத வலிமை*
5. *நிர்க்கோத்திரம் - உறவின்மை*
6. *நிர்நாமம் - பெயரின்மை*
7. *நிராயுஷ்யம் - வாழ்நாள் இன்மை*
8. *அழிவின்மை - நிலைத்திருக்கும் தன்மை*

அருகதேவனுக்கு மட்டுமே, இத்தகைய எண் குணங்கள் உள்ளன. ஆகவே, அவரின் தாள்களை வணங்காத தலை என்ன தலை என்று அர்த்தம் கூறியவர்கள் பலர்.

2. சிவனுக்குரிய எண்குணம் (சைவாகமக் கருத்து)

1. தன் வயத்தனாதல்
2. தூய உடம்பினனாதல்
3. இயற்கை உணர்வினனாதல்
4. முற்றும் உணர்தல்
5. இல்பாகவே பாசங்களில் நீங்குதல்
6. பொருளுடைமை
7. முடிவிலா ஆற்றலுடைமை
8. வரம்பில் இன்பமுடைமை

மேலே கூறிய இரண்டு வகையான, எண் குணங்களும் இறைவனுக்குரியது என்பார்கள்.

ஒளி மயமானவன் இறைவன், கண்ணுக்குத் தெரியாத சக்தி கடவுள் என்ற பிறகு, பிறப்பின்மை, பேரின்மை, உறவின்மை, பாசமின்மை என்றெல்லாம் பேசினால், எங்கேயோ இடறுவது போல, நமக்குத் தெரிவதால், கடவுளுக்குரிய எண்குணத்தை நாம் இங்கே நினைவு கூறவேண்டாம்.

மனித இயல் பற்றியே வள்ளுவர் பாடியிருக்கிறார் என்பதால், எல்லா நிலையிலும் உயர்ந்த மனிதர்கள், அத்தகைய மனிதர்களுக்கு வழிகாட்டியாய் அமையும் சித்தர்கள், சித்தர்களுக்கும் சித்தியை அளிக்கின்ற ஞான குருக்களுக்குரிய எண்குணத்தையும் இங்கே பார்க்கலாம்.

1. உயர்நிலையாருக்குரிய எண்குணம்:

1. குடிப்பிறப்பு, 2. கல்வி, 3. ஒழுக்கம் 4. வாய்மை 5. தூய்மை 6. நடுவு நிலைமை 7. அழுக்காறாமை 8. அவாவின்மை.

2. தெளிவு பெற்றவர்க்குரிய எண்குணம்:

1. தனிமை ஆற்றல் 2. முடிவில்லாமை 3. இடனறிந்து ஒழுகுதல் 4. பொழுதறிதல் 5. உறுவது தெரிதல் 6. இறுவது அஞ்சாமை, 7. ஈட்டல் 8. பகுத்தல் இவற்றை விவரித்தால் விரிவாகும் என்று அஞ்சி விடுகின்றேன்.

3. சித்தர்களின் எண்குணம்:

எண் பெரும்பேறு என்றும், அஷ்டமா சித்தி

என்றும், அழைக்கப்படுகின்ற எண்வகை குணங்களையும் காண்போம்.

1. அணிமா 2. மகிமா 3. கரிமா 4. லகிமா 5. பிராத்தி 6. பிராகாமியம் 7. ஈசத்துவம் 8. வசித்துவம்

இவை பற்றிய விளக்கம்:

1. ***அணிமா:*** நுண்மை என்று பொருள். உடல் குறுகி இருத்தல்

2. ***மகிமா:*** பருமை என்று பொருள். விஸ்வரூபம் எடுத்தல்.

3. ***இலகிமா:*** மென்மை. காற்றினும் கடுகி நடத்தல்.

4. ***கரிமா:*** விண்தன்மை.
இருந்த இடத்திலிருந்து உலகில் நடக்கும் எல்லா நடப்புகளையும் அறிதல்

5. ***பிராத்தி:*** விரும்பியதை எய்தல்

6. ***பிரகாமியம்:*** நிறைவுண்மை. வடிவம் பல எடுத்தல்.

7. ***ஈசத்துவம்:*** ஆட்சியனாதல். உலகை ஆள்கின்ற அரும் பெறு பெறுதல்.

8. ***வசித்துவம்:*** கவர்ச்சி. உலகம் முழுவதையும் தன்வயமாக்குதல்.

இவையெல்லாம் சித்தர்கள் செய்தார்கள் என்று சித்தர் பாடல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் காலத்தில் இவை நடப்பதில்லை என்பதால், நம்புவதற்கும்

முடியாமல் போகின்றது.

இப்படி எண்குணங்கள் ஏராளமாக இருக்கின்றன. பிறப்பின்மை, இறப்பின்மை, ஆசையின்மை, பெயரின்மை, உவமையின்மை, ஒரு வினையின்மை, நிறைவுடைமை, கோத்திரமின்மை என்பனவற்றை, கடவுளுக்குரியதாகக் கூறிவிடுகின்றார்கள்.

மனிதர்களிடையே பிறந்து வளர்ந்து, துறவறம் மேற்கொண்டு, அறவறத்தால் மகிமைப் பெற்று, மேலும் ஒன்றிப் போய், அகத்தவத்தால், எண் வகையோகத்தால், எண் வகைப் பேறுகள் பெற்று விளங்கும் குருவானவர் தான் எண்குணத்தான் என்று இங்கே நாம் முடிவாகக் கொள்ளலாம்.

நம் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணை, யோகம் ஞானம் இவைகளால் திறக்க வேண்டும். இப்படித் திறக்கப் பெற்றுக் கொண்டவனுக்கு, உலகின் எல்லா அனுபவங்களும் பட்டப்பகல் போல் தெரியும். அவன்தான் சுத்த ஞானி. மோனகுரு என்று நாம் கூறலாம்.

இத்தகைய அரிய சக்தியும் ஞானமும், மோனமும் கைவரப்பெற்றவரின் தாளை வணங்காத்தலையால் என்ன பயன் உண்டு?

இங்கே வணங்குதல் என்ற சொல், மிகவும் பொருள் பொதிந்து விளங்குவதாகும்.

வணங்குதல் என்ற சொல்லுக்கு காணல், காண்டல், கை கூப்பல், தெண்டனிடுதல், தொழுதல், பணிதல், பரவுதல், பார்த்தல் போற்றல், வந்தித்தல், வழிபடல்.

ஆக, ஐம்புலன்களும், ஒத்த உணர்வோடு செய்வதுதான் வணங்குதல் என்பதாகும். இங்கே தலை வணங்குதல் என்று வள்ளுவர் குறித்திருக்கிறார் ஐம்பொறிகள் பற்றி, முதல் வரியில் குறித்த வள்ளுவர், இரண்டாவது அடியில் ஏன் *தலை* என்று கூறவேண்டும்?

தலை என்றால் தலைமை, பெருமை, முதல், சிரம், அதிகாரம் என்ற பல பொருள்கள் உண்டு.

எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பார்கள். தலை என்பது, உடலுக்கே தலைமை இடத்தை வகிப்பதாகும்.

ஒருவரை, பார்க்கும் போது, அடி முதல் முடிவரை என்பார்கள் ***'பாதாதிகேசம்'*** என்பார்கள்.

தலைக்கு அதிகாரம் என்று ஓர் அர்த்தம் உண்டு. தலைக்கு அப்படி ஒரு அதிகாரம் எப்படி கிடைக்கும்?

கழுத்துக்கு மேலே உள்ள பகுதியைத் தலைப் பகுதி என்பர். தலை என்னும் அந்த பிரதான உறுப்பை, மூன்று பகுதிகளாக அறிவியலார் விளக்கிக் கூறுவார்கள்.

1. உடம்பின் உச்சமான உயர்ந்த பகுதி. முகத்தையும் மண்டை ஓட்டு மேற்பகுதியையும் கொண்டு விளங்குவதுடன், மூளை எனும் பிரதான, முக்கியமான உறுப்பையும் கொண்டிருக்கிறது. முகத்திலே பார்க்க, கேட்க, சுவைக்க, நுகர போன்ற சிறப்புப் புலன்களும் இருக்கின்றன.

2. முண்டத்தையும் தலையையும் இணைக்கும் முதுகெலும்பு இணையப்பெற்றுள்ளது.

3. உடம்பிலே உள்ள உறுப்புக்களில் பெரியது.

இங்கே ஏன் தலையைப் பற்றி, இவ்வளவு விளக்கமாக எழுதுகிறேன் என்றால், தலைக்குள்ளே உள்ள மூளையைப் பற்றியும் கூறினால்தான், இந்தக் குறளுக்குரிய விளக்கமும் முழுமைபெறும்.

மூளை என்பது, உடலின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தி, கட்டுக் கோப்போடு நடத்துகிற பிரதான பெரும்பணியைப் புரிந்து கொண்டிருக்கிறது.

உடம்பின் உள்ளேயும், புறத்தேயும் நடக்கின்ற நிகழ்வுகளையெல்லாம், ஏற்றுக் கொண்டு, சேர்த்து வைத்துக் கொண்டு, அவற்றை ஒழுங்கு படுத்தி, ஆணைகளைப் பிறப்பித்து, சுமுகமாக செயலாற்றிக் கொண்டு இருக்கிறது.

அத்துடன், அறிவு, நினைவு, உணர்ச்சிகள், ஆளுமை, மற்றும் விழிப்புணர்ச்சித் தன்மைகளை வளர்த்தும் விளைத்தும், பேராற்றல் மிகுந்ததாக விளங்குகிறது.

மூளையானது முக்கிய மண்டலமாகவும், ஐம்புலன்களை செயல்படுத்தும் நிலைக்களனாகவும் இருப்பதால்தான், எண் சாண் உடம்புக்கே சிரசே பிரதானம் என்றார்கள்.

இவ்வளவு பெருமை வாய்ந்த தலையானது, ஒருவரை வணங்குகிறது என்றால், ஐம்பொறிகளும் அடங்கி, மூளையும் இணங்கி ஒருங்கிணைந்து செயல்படுகின்றது என்றுதானே அர்த்தம்.

அதாவது அகமும் புறமும், அந்த செயலை அங்கீகரித்திருக்கிறது, அனுமதித்திருக்கிறது என்பதை, இங்கே தெளிவாகப் புரிந்து கொள்வோம்.

தாளை வணங்குவது என்றால், திருவடியை எனலாம். திருவடி என்பது ஞானத்தைக் குறிக்கிறது.

அறிவு, ஆலோசனை, அருள், இரக்கம், கருணை, ஞானப் பெருக்குடன், எளிமையும், மதிப்பும், வலிமையும் நற்செய்கைகளும், கொண்டு, நல்ல வழிகாட்டி ஒளியூட்டி, நிறைந்த நீண்டப் புகழ் மிகுந்த வாழ்க்கையை வழங்குகின்ற எண்ணிலா பண்புகளைக் கொண்ட மோன குருவின் ஞானத்தை ஏற்று, வணங்காத தலை என்ன பயத்தது?

கோளில் பொறி என்றதனால், வெளிப்புற சிறப்பு புலன்களையும், தலை என்றதனால், உட்புற அகத்து நிகழ்வுகளையும் குறித்துக் காட்டுகின்ற வியப்பு மிகு உட்பொருளை, இங்கே நாம் அறிந்து இன்புறுகின்றோம்.

***பொறிகள் குருவின் ஞானத்தை ஏற்று மகிழும் போது, தலையானது,தாழ்ந்து வணங்கி, தேகத்தின் பாங்கினை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.***

இப்போது நாம் இந்தக் குறளுக்குரிய கருத்துரையைக் காண்போம்.

வலிமையில்லாத ஐம்பொறிகள், அவற்றிற்கான இயல்பான தன்மைகளை இழந்து போகின்றன. இருந்தும் இல்லாத நிலையை அடைகின்றன. அதுபோலவே, ஐம்பொறிகளை ஆட்டிப் படைக்கின்ற தலையும் உள்ளது. மிகச் சிறப்புமிக்க ஞானமும் அரிய செயல்களாற்றும் ஆற்றலைக் கொண்ட குருவானவர் மேற்கொள்கின்ற முயற்சிகளை, மனமார ஏற்றுக் கொண்டு, அவரது ஞானத்தை தலைதாழ்த்தி வணங்க வேண்டும்.

அவ்வாறு வணங்காத தலையும், அதன் மதிப்பை,

சிறப்பை, தலைமைத் தன்மையை இழந்து போகின்றது. அகத்தாலும், குருவைப் போற்றி, ஏற்று, பணிந்து, பண்போடு அவரைப் பின்பற்ற வேண்டும் என்பதை, வலியுறுத்துவதுடன், மிகவும் அரியதான மெய்ஞானத்தையும் நினைவு படுத்துகிறார் வள்ளுவர்.

எட்டாவது குறளில், தெளிவான ஞானம் மட்டும் போதாது வாழ்க்கைக் கடலை நீந்த, வலிமையான உடலும் இருந்தால் தான், வெற்றிகரமாக கடக்க முடியும் என்ற மெய்ஞானத்தை வெளிப்படுத்திக் காட்டினார்.

ஒன்பதாவது குறளில், வலிமையான உடலில் தான், வலிமையும் நுண்மையும் திண்மையும் நிறைந்த ஐம்புலன்கள் வெற்றிகரமாகச் செயல்படும். அந்தச் செயல்பாடுகளுக்கு, தலையின் உள்ளே மூளைதான் ஏற்றமுறும் காரணமாக இருக்கிறது.

வலிமையான உடலில்தான் வலிமையான மூளை இருக்கும். வலிமையான மனமும் இருக்கும்.

வலிமையில்லாத ஐம்புலன்களால் வாழ்வு சுகப்படாது. வாழ்வளித்து வழிகாட்டும் குருவை வணங்காத தலையால், வாழ்வும் நெறிப்படாது,. நலம் பெறா்து. புகழ் பெறாது.

ஆகவே, புலன்களின் சக்திகளைப் பெருக்குவதுடன், அடக்கி வாழவும், அவற்றால் பெறுகின்ற பயன்களை, முழுதும் துய்க்கவும் ஞான குருவின் வழியாக ஊக்கம் பெறுங்கள் என்பதைக் குறிக்கவே, எண்குணத்தான் தாளை வணங்காத் தலையானது, வலிமை இல்லாத ஐம்பொறிகள், இனிய பயன்களைத் தராது என்று, மருள் மண்டிக் கிடக்கும் அறிவை, அதனின்றும் வெளிக் கொணர்ந்து, விழிப்புணர்வை ஊட்டுகின்றார் வள்ளுவர்.

# 13. ஆழியும் கடலும்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா தார் " (10)

இறைவன் அடி சேர்ந்தார், பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; சேராதார் நீந்தார் என்று பரிமேலழகர் குறளைப் பிரித்துப் பகுத்து பொருள் கூறுகின்றார்.

இறைவன் அடியென்னும் புணையைச் சேர்ந்தார், பிறவியாகிய பெருங்கடலை நீந்துவர். அதனைச் சேராதார், நீந்த மாட்டாராய், அதனுள் அழுந்துவர் என்று விளக்கம் தருகின்றார்.

இறைவன் அடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார். சேர்ந்தார் நீந்துவர் என்று பிரித்துக் கூறி, நாவலர் பொருள் தருகிறார் பின் வருமாறு.

அறிவாற்றலிற் சிறந்த சான்றோராகிய ஒரு பெருந்தலைவரைப் பின்பற்றி நடக்காதவர்கள், வாழ்க்கை எனும் பெருங்கடலைக் கடக்க

மாட்டாமல், இடையிலேயே அழிந்து போய் விடுவார்கள். ஆனால், பின்பற்றி நடப்பவர்கள், கடந்து கரையேறுவார்க்ள்.

மற்றும் பல உரையெழுத வந்த ஆசிரியர்கள், பரிமேலழகர் உரையைப் பின்பற்றி, அவர் கருத்தினை, எளிமையான சொற்கள் மூலமாக, சுருக்கிச் சொன்னார்கள். அதாவது.

கடவுளின் திருவடிகளை அடைந்தவர், பிறவியாகிய பெரிய கடலைக் கடப்பார். அடையாதவர், அதனைக் கடக்க மாட்டார்.

பிறவிப் பெருங்கடல் இறைவன் அடி சேராதார் நீந்தார். நீந்துவர் சேர்ந்தார் என்று எனது பகுப்பு முறை தொடர்கிறது.

பெருமைக்குரிய பத்தாவது பாடலாக இருக்கிற இந்தக் குறளின் ஆழமான கருத்துக்களை, ஒவ்வொரு சொல்லாகப் பதம் பிரித்து பொருள் காணுகிற போதுதான் புரிகிறது.

பெரு நாவலர், முதற்பாவலர், தெய்வப் புலவர் என்றெல்லாம் பலராலும் வாயாரப் போற்றப் படுகிறார் வள்ளுவர் என்றால், அவர் தந்த குறளில், பல் சுவைக் கருத்துக்கள் பண்பாடிக் கொண்டிருப்பதால்தான்.

எட்டாவது குறளிலும் பத்தாவது குறளிலும் இரண்டு சொற்கள் திரும்பத் திரும்ப வந்திருக்கின்றன.

³ F ÈF ùO ¼ « ôL é ***ஆழி, நீந்துதல்.***

10வது பாடலில் ***பெருங்கடல் - நீந்துதல்.***

மேலோட்டமாகப் பார்த்தால், இந்த நான்கு சொற்களும் ஒன்று போல் தான் தோன்றும். ஆழ்ந்து சிந்திக்கிற போதுதான், அதனுள் சூழ்ந்து கிடக்கின்ற சூத்திரங்களும் சூட்சமங்களும் புரியும்.

பிற ஆழி, அற ஆழி என்று பாடுகிறபோது, கடல் என்றுதான் பொருள் கொண்டிருக்கின்றனர்.

அற என்ற அறச் சொல்லுக்கு ஆழி என்று கூறினார். பிறவி என்ற பிறப்புக்கு பெருங்கடல் என்று கூறினார்.

***ஆழியை நீந்தல் அரிது என்று அங்கே பாடினார். பெருங்கடலை நீந்த முடியும்*** என்று இங்கே பாடுகிறார். ஏன் அப்படிச் சொன்னார்?

ஆழியை நீந்துதல் அரிது, என்பதற்குரிய சொல் விளக்கம் பாருங்கள்.

***ஆழ் + இ*** என்பது தான் ஆழியாகி வந்திருக்கிறது.

ஆழ் என்றால் ஆழமான; இ என்றால் ஆச்சரியமான என்பது பொருளாகும்.

அதிகமாக ஆழமானதாகவும், அதிசயம் மிக்க ஆச்சரியமானதாகவும், அச்சத்தை விளைவிக்கக் கூடியதுமான ஒரு நீர்ப்பரப்பைத்தான் ஆழி என்றார்.

ஆழியைத்தான் ஆழ் கடல் என்றனர்.

அதன் ஆழம் எவ்வளவுதான் என்று பார்த்தால், அந்த ஆழத்தின் ஆழத்தை அறியும்போதே, ஆச்சரியமாக மட்டுமல்ல, அச்சமாகவும் இருக்கிறது.

சாதாரணமாக, ஆழியின் ஆழம் 2 முதல் 3

மைல்கள் அளவு நீளம் இருக்கும். தென் அமெரிக்காவின் கீழ்க் கரையோரத்தில் உள்ள **ரயோடிலா பிளடா** முகத்துவார சமுத்திரத்தின் ஆழம் 8 மைல் என்பர்.

பிலிப்பைன் தீவுக்கு வடக்கில் உள்ள கடலின் ஆழம் 18 மைல் என்று கூறுவார்கள்.

இப்படி ஆழமுள்ள ஆழியில் நீந்துதல் அரிது என்று குறிப்பிட்டிருக்கின்றார் என்பதற்காக, பூமி இயல் தொடர்பான விளக்கத்தையும் பார்க்கும்போது, வள்ளுவரின் புவி இயல் ஞானம் நமக்குப் பளிச்செனத் தென்படுகிறது.

கடலில் சுமார் 1000 அடிகளுக்குக் கீழே இருளே சூழ்ந்திருக்கிறதாம். ஒளியென்பதே அங்கு இல்லை. பிறகு வேறென்ன அங்கு இடம் பெற்றிருக்கிறது?

ஆழ்கடலின் அடிப்பாகம் பூமியைப்போலவே, குன்றுகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள், எரிமலைகள், மரங்கள், செடிகள், பூண்டுகள் மற்றும் இரத்தின வகைகள், உலோக வகைகள் முதலியவற்றை வைத்துக் கொண்டிருக்கிறது.

சில கடல்களுக்குள்ளே ஆறுகளைப் போல, நீரோட்டம் ஓடிக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, ஆழிகளில் நீர்ச்சுழிகள் தோன்றுகின்றன.

அந்த ஆறு போன்ற நீரோட்டங்களும், நீர்ச் சுழிகளும் ஒன்று சேருகிறபோது, கப்பல்கள் போனாலும் கவிழ்ந்து போகின்றன, தாக்குண்டு நாசமடைகின்றன.

இப்படி கப்பலும் கலங்களும் ஆழியில் கடக்க முடியாமல் அழிகிற போது, மனிதன் நீந்துவது எம்மாத்திரம்?

வாழ்க்கையில் மனிதனுக்கு மூன்று வகையில் துன்பங்கள் நேரிடுகின்றன. ***1. இயற்கையினால் ஏற்படும் துன்பங்கள், அழிவுகள். 2. சுற்றப் புறத்தில் வாழும் கொடிய மிருகங்கள், விடத்தன்மையுள்ள உயிரினங்கள், மற்றும் நுண் கிருமிகளால் உண்டாகும் ஆபத்துக்கள், 3. தேகத்தில் உண்டாகும் கடுமையான நோய்கள், நலிவுகள்.***

ஒவ்வொன்றின் ஆற்றலும் அளக்க முடியாத ஆழம் கொண்டவை. ஆச்சரியத்தையும் அச்சத்தையும் உண்டு பண்ணி, பிரமிக்க வைத்து, பேரழிவைத்தரும் நச்சுத்தனங்கள் நிறைந்தவை.

இதனால்தான், பிற ஆழி என்று ஒரு சொல்லை இட்டார். இதை உலக இச்சைகளை அறவே அறுத்த அந்தணன்தான், நீந்துவதற்கேற்ற ஞானத்தையும், ஞானத்தின் வழியாக பெரும் வலிமையும் வல்லமையும் புகட்ட முடியும் என்றார்.

இந்தக் குறளில் வள்ளுவர், ஆழி என்று கூறாமல்,பெரும் கடல் என்று வேறொரு சொல்லைப் போட்டிருக்கிறார்.

அப்படியென்றால், ஆழிக்கும் கடலுக்கும் அடிப்படை வித்தியாசங்கள் இருக்க வேண்டுமென்று எண்ணுகிற நினைவை உண்டு பண்ணுகிறதல்லவா!

கடல் என்பது உலகைச் சூழ்ந்த நீர்ப்பரப்பு.

ஏறத்தாழ இந்த உலகத்தில், மூன்றில் இரண்டு பங்கு பகுதிகளை வளைத்துப் பிடித்து, பரந்து கிடக்கிறது.

ஆழி என்றது ஆழத்தைக் குறிக்க வந்தது. இங்கே கடல் அகலப்பரப்பைக் குறிப்பதற்காகக் கூறப்பட்டது.

மத்தியத் தரைக் கடலின் கீழ்க்கரையில் சாக்கடல் (Dead sea) என்பது ஒன்று உண்டு. அதன் அகலம் 9 மைல். நீளம் 47 மைல்.

ஒரு சிறிய கடலே இவ்வளவு மைல் நீளம் என்றால், வள்ளுவர் குறிக்கும் பெருங்கடல், நாம் கற்பனை செய்தாலும், முடியாத ஒன்றாகும்.

அதனால்தான் **கரைகாண முடியாத கடல்** என்று கூறுவர். இங்கே கரை என்றது ஒரு எல்லையைத்தான். ஒரு கரையிலிருந்து மற்றொரு கரையைக் காண இயலாத பெருநீர்ப்பரப்புத் தான் கடலாகும்.

பிறவி என்று கூறிவிட்டு, பெருங்கடலைக் கூறுகிறார். வாழ்க்கை என்பதை நாம் பெரிய கடலாகக் கூறுவோமானால், ஒரு கரை பிறவி என்பது, தெரியாத மறுகரை இறப்பு என்பது.

இந்தப் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைபட்டு வாழ்கிற நிகழ்ச்சிகளுக்குத்தான் வாழ்க்கை என்று பெயர்.

வாழ்க்கையைப் பற்றி பலர் பல விதமாகப் பேசுவார்கள். திக்குத் தெரியாத காடு என்பார்கள். எல்லை இல்லாத வானம் என்பார்கள். புரிந்து கொள்ள முடியாத புதிர் என்பார்கள். வருவது தெரியாத விபத்து என்பார்கள்.

ஆனால் வள்ளுவர் ஏன் வாழ்க்கையை கடல் என்றார்?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, நாகரிகம் அடைந்த மக்கள் வாழ்வை நடத்தத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இடம், ஆற்றங்கரைப் பகுதி, கடலோரப் பகுதி என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

ஒருவர் உயிர்வாழ இரண்டு திறன்கள் அவசியம்.

ஒன்று நிலத்தில் வருகின்ற ஆபத்துக்களைத் தடுத்துக் கொள்ள சிலம்பப் பயிற்சி.

நீரில் ஏற்படுகின்ற விபத்திலிருந்து காத்துக் கொள்ள நீச்சல் பயிற்சி.

இந்த இரண்டு பயிற்சிகளும், மனிதர்களுக்கு வலிமையான தேகத்தையும், வலிமையான மனதையும் வளர்த்து விடுவனவாகும் என்பார்கள்.

எட்டாவது குறளில், ஆழியை, அந்தணரின் ஞானமில்லாவிடில் நீந்த முடியாது என்றார். ஞானம் மட்டும் போதாது வலிமையும் வேண்டும் என்று குறித்தது போல, இந்தக் குறளிலும், பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்றார்.

நீந்த முடியும் நீந்திக் கரை சேரமுடியும் என்ற நம்பிக்கையை நீந்துவர் என்றே உறுதியாகக் கூறுகின்றார்.

நீந்தும் பயிற்சி என்றதும், நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய இன்னொரு கருத்தும் இங்கே வருகிறது.

தண்ணீர் என்றவுடனே, நீச்சல் தெரியாத வர்களுக்கு, தானாகவே பயம் வந்து விடும். அதைக் கண்டு அலறி ஓடுபவர்கள், அச்சப் பட்டுக் கொண்டு விலகிச் செல்பவர்கள் தாம் மனிதர்கள்.

தண்ணீரில் நீச்சல் கற்றுக் கொள்ள ஆசைப்படுபவர்கள், தன்னிச்சையாக, தண்ணீரில் தைரியமாக இறங்கி விடமுடியாது.

துணையாக, அந்தச் செயலை அருகிலிருந்து கற்றுத் தருபவராக ஒருவர் வேண்டும்.

அப்படித் துணையாக இருந்து பழக்கி விடுபவரை ***பழக்குநர்*** (Trainer) என்று கூறுவார்கள். இவர் ஆரம்ப நிலையில், இந்த நீச்சல் பழக்கத்தைக் கற்றுத் தருபவர்.

இன்னும் நுண்மையுடன், தேர்ச்சி பெற்ற நீச்சல் காரராக உருவாக்க உதவுபவரை, ***பயிற்றுநர்*** (Coach) என்பார்கள்.

இதற்கும் மேலே தன்னை தயார் செய்து கொள்கின்ற பக்குவம்பெற்று பயிற்சி செய்பவர்களே, வெற்றிகரமான நீச்சல்காரர்கள் என்று புகழப் படுவார்கள்.

பிறவிப் பெருங்கடல் என்றவுடன், முற்பிறப்பு, இப்பிறப்பு, வரப்போகிற ஏழு பிறப்பு என்றெல்லாம், கற்பனைகளை மதமாக்கி, இயல்பான நம்பிக்கை களையும் மூடி, முடமாக்கி விட்டவர்கள் அதிகம்.

இந்தப் பிறவியையே என்ன வென்று புரிந்து கொள்ளாத மக்கள் தான், நிறைய பேர்கள் இருக்கின்றார்கள்.

பிறந்துவிட்டதற்காக வாழ்கிறவர்களே அதிகம். அதிலும் வாழ்க்கையை ஓட்டுகிறவர்களே இன்னும் அதிகம்.

இந்த ஒரு பிறவிக்கு யாரும் உகந்தவர்களாக இருக்க மாட்டார்களா என்ற ஏக்கத்திலே எழுதப்பட்ட இலக்கியம் தான் திருக்குறள்.

பிறவிப் பெருங்கடலை எளிதாக, இனிதாக நீந்தக் கூடிய வல்லமை, இறைவன் அடி சேர்ந்தவர்க்கே உண்டு.

இறைவன் அடி சேர்ந்து விட்டார் என்றால், நம்மவர் மரபுப்படி, அவர் இறந்து விட்டார் என்பது தான் பொருள்.

இறந்து போனவர் எப்படி நீந்த முடியும் என்று கேட்டால், நாதடித்த நாத்திகர் கூட்டம் என்று, ஒரு பட்டம் கட்டி விடுவார்கள்.

இதற்காக, ஏன் வம்பு என்று பயந்து கொண்டே, பதுங்கி ஒதுங்கிப் போவாரும் உண்டு.

இங்கே நாம் வாதாடவோ, மற்றவர்கள் கூறியதை எதிராடவோ இங்கு வரவில்லை.

குறளின் சொல்லுக்குள்ளே, உள் மறையாக மறைந்து கொண்டிருக்கும் ஒரு சில உண்மைகளை, வெளிப்படுத்த முனைந்திருக்கிறோம். அவ்வளவு தான்.

இறைவன் என்றவுடன், பக்தி உள்ளவர்கள் கடவுள் என்று பொருள் கூறி விட்டார்கள்.

இறைவன் என்றதும், மக்களிடம் இறை

வசூலிக்கிற தலைவனே, இறைவன் ஆகி விட்டான். இந்த அரசனாகிய இறைவன் வாழுகிற இடமே கோயில் என்று இருந்தது.

கோ+இல், அரசன் வாழ்கிற இடமே கோயில். அதுவே பின்னாளில், ஆண்டவன் இருக்கும் இடமாகப் பெயர் பெற்றது என்றும் பொருள் கூறுகிறார்கள்.

நாம் இன்னும் கொஞ்சம் நுண்மையாக உள் புகுந்து பார்க்கலாமே என்று இங்கு முயற்சித்திருக்கிறோம்.

***இறு+ஐ+வன்*** என்று நாம் இந்த இறைவனை பிரித்துப் பார்க்கிறோம்.

***இறு*** என்பதற்கு, கெடு, அழி, வீழ்த்து, முடி, வினாவு, விடையளி என்று பல பொருள்கள் உண்டு.

***ஐ*** என்றால் அரசன், ஆசான், குரு, தலைவன், கடவுள் என்று பல பொருள்கள் உண்டு.

***வன்*** என்றால், கடுமை, வலிமை என்ற அர்த்தங்கள் உண்டு.

இப்பொழுது நாம், பொருள்களை திரட்டி சேர்த்துப் பார்ப்போம்.

1. ஐம்பொறிகளை அடக்காமல்,மனம் போல வாழ்கின்ற மக்களை ***ஐம்பொறி அடக்கான்*** என்று அந்நாளில்கூறினர்.

இதற்கு, இல்வாழ்வில் ஈடுபட்டிருப்பவன் என்று ஒரு அர்த்தம். இல்வாழ்வில் நல் வாழ்வு வாழ்பவரையே இல்லறத்தார் என்று போற்றினர்.

2. ஐம்பொறிகளை அடக்கி வாழ்கின்றவர்களை **ஐம்பொறி அடக்கி** என்றனர்.

அவர்களை இல்லறத்திலிருந்து துறந்து வந்தவர் என்றும், துறவி என்றும் பெருமைப்படப் பேசினர்.

துறவிகள் இல்லற சுகத்தை, உதவும் பொருள்களை, செல்வங்களை, மற்றும் உறவினர் களுடன் உலா வருவது போன்ற காரியங்களைத் துறந்து தான் வந்தார்களே தவிர, முற்றிலும் நினைவுகளிலிருந்து அகற்றிடாத வர்களாகவே இருந்தனர்.

அதை இல்லறம் தள்ளிய, துறவறம் என்றனர். அவர்களையே துறவோர் என்றனர்.

3. மூன்றாவது நிலை அறவறம். துறவறம் மேற்கொண்டு வந்தபிறகு, அகத்திலே ஒட்டிக் கொண்டிருக்கும் 'ஆசாபாசங்களை' அறுத்தெறிகிற ஆற்றல் கொண்டவர்களை, அறவே அழிக்கின்ற பற்றற்றவர்களாக ஆனவர்களை **அறவோர்** என்றனர்.

அறவோருக்கும் மேலாக இறுத்துப் போடுகின்ற இகலோக இச்சைகளையெல்லாம் இற்றுப் போகச் செய்கின்ற இறைவனாக, ஆசானாக, குருவாக, அரசனாக, தலைவனாக, ஆனவரை **இறவோர்** என்று நாம் அழைக்கலாமே.

இப்படிப்பட்ட ஆற்றல் பெற்ற இறைவனின் அடியாகிய ஞானத்தைப் பெறாதவர்கள், பெருங் கடலை நீந்த முடியாதே!

இங்கே சேராதார் என்ற ஒருசொல் வந்திருக்கிறது. சேர்தல், சேர்ந்தார் என்பதற்கு, இடைவிடாது

நினைத்தல், உருகுதல் என்ற பொருள் உண்டு.

இறைவனது ஞானத்தை, இடைவிடாது நினைத்து, அல்லும் பகலும் அந்த நினைவுகளிலே திளைத்து, உள்ளம் உருகி, உள்ளொளி பெருக்கி, அதன் வழி ஒழுகுவதையே சேர்தல் என்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஞானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறவரே, ஞானவழி செல்கின்றவரே, பிறவி என்கிற பெருங்கடலை, களைப்பில்லாமல், இளைப்பில்லாமல், கவர்ந்து கொல்கின்ற கவலைகள் இல்லாமல், நீந்திக் கரைசேர முடியும்.

நீந்திக் கரை சேரமுடியும் என்பது கடினம் என்பது எல்லோருக்கும் தெரியும். வள்ளுவருக்கும் தெரியும்.

நிலவுலகில் நீடு புகழ் பெற்று, நிலைத்து வாழ்வதே பிறவி எடுத்த பேறு என்பார்கள்.

எல்லா மக்களாலும் நீந்தவே முடியாது என்பதானது, எல்லா மக்களாலும் புகழும் பெருமையும் பெற்றிட முடியாது என்பதாகும்.

புகழும் பெருமையும் பெறுவதற்கு, வளமான உடல், வலிமையான மனம் வேண்டும் என்பார்கள்.

உடல் என்பதற்கு பொன், பொருள் என்று அர்த்தம் உண்டு. உடலுக்குப் பொன் என்று கூறியதன் உட்பெருளே வேறு. பொன்னானது தீயிலே பழுக்கப் பழுக்க, அது நகைகளாக பிறப்பெடுக்க முடிகிறது. பிறருக்கும் பயன்பட முடிகிறது.

அதுபோலவே, உடலானது கடமையைக் காக்க முயற்சிக்கும் கடுமையான உழைப்பிலே, உழைக்க

உழைக்க, பிறருக்கும் பயன்பட முடிகிறது. தன்னாலும் திறம்பட மேலோங்கி எழ முடிகிறது.

ஆக, வலிமையான உடலோடு, உறுதியான மனத்தோடு வாழ்பவர்களே, பெருங்கடலை, பெருந்துன்பமின்றி நீந்த முடியும்.

கடலிலே அலைகளுக்குக் குறைவே இல்லை. 'அலை ஓய்வதெப்போ தலை முழுகுவது எப்போ' எனும் பழமொழி, கடலில் குளிப்பதற்கான கடுமையான நிலையை விளக்கிக் காட்டுகிறது.

கடலின் கரையிலிருந்து குளிக்கலாம். கடலில் இறங்க முடியாது என்கிற நிலை இருக்கிற போது, கடலுக்குள் இறங்கி, மிதந்து, நீந்தி, எதிர்த்து வரும் அலைகளில் ஏறி, முன்னேறிச் செல்ல, தைரியம் மட்டும் போதாது. தாங்குகிற தேக சக்தியும் தேவைப்படுகிறதே!

தண்ணீரில் நீந்துவதற்கு முன்னதாக, தண்ணீரில் மிதக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது விதி. அதுபோலவே, வாழ்க்கையைத் தந்துள்ள இந்தப் பிறவியில், வருகின்ற பிரச்சினைகளும்,குழப்பங்களும் கொஞ்சமாகவா இருக்கின்றன? அவற்றில் மிதக்க முதலில் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு வேறொன்றாகும்.

எதை நாம் நினைக்காமல் இருக்கிறோமோ, அதுதான் முன்னே வந்து நிற்கும். எதிர்பார்த்தது கிடைக்காத ஏமாற்றத்தை விட, வேண்டாம் என்று வெறுப்பதே முன் வந்து பல்லைக் காட்டிக் கொண்டு

நிற்கும் போது, மனம் எரிச்சலின் எல்லையில் அல்லவா போய் நிற்கும்!

இப்படிப்பட்ட எதிர் பார்ப்புகளும், ஏமாற்றங்களும், புதிர்களும், புற்றீசல் போல் வருகின்ற பிரச்சினைகளும் தான் ஒருவரை கவலையெனும் கடலுக்குள்ளே மூழ்கடித்து விடுகின்றன.

கவலைகளுக்குள்ளே கூடு கட்டிக் கொண்டு, பாடு பட்டுக்கொண்டு பரிதவிக்கிற, பாழ்பட்டுப் போகிற மக்கள் கூட்டம் தான் உலகிலே அதிகம்.

கவலைகள், பிரச்சினைகள் என்கிற கடுமையான சிங்கத்தின் வாயைக் கிழித்து, அதன் மேல்அமர்ந்து கொள்கிற ஆற்றல் கொண்டிருப்பவர்கள், வெகு சிலர் தான்.

அத்தகைய ஞானத்தை, ஞானமெனும் ஆயுதத்தை, வழங்கி ஆட்படுத்துகிறவர் தான், இறைவனாகிய குருதேவர் ஆவார்.

குருதேவரின் ஞானம், பிரச்சினைகளின் மேலே பாய் விரித்து அமர்ந்து கொண்டு, ஆளுகின்ற ஆண்மையை அளிக்கிறது. இது, தண்ணீரில் மிதக்கக் கற்றுத் தரும் நீச்சல் ஞானத்தைப் போல.

இந்த ஞானம் கிடைக்காதவர்கள், முதலில் தண்ணீரிடம் நெருங்கவே பயப்படுவார்கள். பிறகு, தண்ணீரில் இறங்கப் பயப்படுவார்கள். பிறகு, தண்ணீரில் இறங்கினாலும், அதில் மிதக்கத் தெரியாமல், மூழ்கிப் போய் விடுவார்கள். ஆமாம், அமிழ்ந்து போய் மிதந்து விடுவார்கள்.

இறைவனடி சேராதார் நீந்தார் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார் வள்ளுவ நாயனார்.

பிறவி என்கிற பெருங்கடல். அதில் நீந்துகிற பக்குவமும் பயிற்சியும், குருதேவராகிய (இறைவனின்) ஞானத்தைப் பெறுகிற போது, மிகுதியாகக் கிடைக்கிறது. அதுவே புகழ்பெற்று வாழ்கிற தகுதியைத் தந்து விடுகிறது. இறைவனின் ஞானம் பெறாதவர்கள், நீந்த முடியாமல், அமிழ்ந்து போகின்றனர்.

ஆகவே, குருதேவரின் ஞானமே, குல விளக்காகும். நல விளக்காகும். நல்வாழ்வுக்குரிய நந்தா விளக்காகும். அந்த ஞான ஒளியைப் பெறுவதும், வாழ்வாங்கு வாழ்வதும் மனிதப் பிறவி எடுத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இலக்காகும்.

# 14. தெய்வத்தைத் தேடிய திருவள்ளுவர்

தெய்வத்தைத் தேடினார் திருவள்ளுவர் என்பது திருக்குறள் முழுவதும் தெள்ளத் தெளிவாய் தெரிகிறது!

முதலில் தெய்வத்தை தேடினார். தெய்வத்தை யாருக்காக அவர் தேடினார்? தனக்காகவா இல்லையே!

அவரே, ஒரு தெய்வப்புலவர் இல்லையா! பின் எதற்குத் தேடவேண்டும்? இந்தக் கேள்விக்கு விடைதான் அவர் அருளிய குறட்பாக்களாகும்.

எத்தனையோ ஆயிரக்கணக்கான தமிழ்ப் புலவர்கள், சான்றோர்கள், வள்ளுவருக்கு முன்னும் பின்னும், சமகாலத்திலும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

அவர்களுக்கெல்லாம் தரப்படாத அடைமொழி, புகழ்மொழி திருவள்ளுவருக்கு மட்டும் எப்படி கிடைத்தது!

***தெய்வப்புலவர் திருவள்ளுவர்*** என்று, எல்லா தமிழ்ப்பெரியவர்களும், மனமார ஏற்றிப் போற்றி புகழ்ந்திருக்கின்றார்களே!

மருந்துக்குக் கூட, மறுத்து யாரும் பேசவில்லை. வெறுத்துப் பாடவில்லை. விதண்டா வாதமாக எழுதவில்லை.

மதித்துப் பாடி யிருக்கின்றார்கள். மனம் உருகித் துதித்துப் பாடி யிருக்கின்றார்கள். காரணம், அப்படிப் பட்ட அருமையான வாழ்க்கையை வள்ளுவர் வாழ்ந்து காட்டி யிருக்கிறார் என்பதால்தான்.

அன்பால், பண்பால், அறத்தால், திறத்தால், தரத்தால், தகைமை சான்ற, தமிழ் வாழ்வு ஒன்றை வாழ்ந்து வழிகாட்டியதை, நேரில் பார்த்தும்; பார்த்தவர்கள் வாயிலாகப், பாடியவர்கள் மூலமாகக் கேட்டுத் தெரிந்தும் கொண்ட, எல்லோருமே வள்ளுவரை தெய்வப் புலவர் என்றே வாயார வாழ்த்தி இருக்கின்றார்கள். இன்றும் வாழ்த்துகின்றார்கள். நாளையும் வாழ்த்துவார்கள்.

அத்தகைய ஆன்ற தமிழ் மக்கள் குல திலகமான வள்ளுவர் அவர்கள், தெய்வத்தை, தனக்காகத் தேடவில்லை. தேடவேயில்லை. தன்னைப் போல, இன்னொரு தெய்வப்புலவர், தெய்வமனிதர்கள் கிடைப்பார்களா என்றுதான் தேடினார்.

***தன்னைப் போல் பிறரை நேசி*** என்பார்கள்.

தனது தெய்வத்தன்மை போலவே, எல்லோருக்கும் இருக்கும் என்று நினைத்தார். அப்படித்தான் இருக்க வேண்டும் என்று பிறரையும் நினைத்தார். அப்படியே நம்பினார்.

நம்பியதன் விளைவு, தேடினார், தேடினார். தேடித் திரிந்ததுதான் பலன். தேடியவர்களை, மனிதர்களில் தெய்வத்தை, அவரால் தெரிந்தெடுக்க முடியவில்லை. தெரிந்து கொள்வும் இயலவில்லை.

பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றும் தமிழ்ப்பண்பாட்டிற்கு இணங்க, தான் பெற்ற அந்தத் தெய்வ நிலையை, தமிழ் கூறும் நல்லுலக மக்களுக்கு மட்டுமன்றி, தரணி வாழ் மக்கள் அனைவருக்கும், சுவையோடு தந்துவிட்டார்.

எப்படி வாழ்ந்தால், மக்கள் எல்லோரும் சக்தி மிகுந்த தெய்வநிலையை எய்திட முடியும் என்று எண்ணித் தெளிந்து, இனிமை நிறைந்த ஒரு இலக்கியமாக அமைத்தார்.

சற்று ஆழ்ந்து கற்றுத் தெரியட்டுமே என்று, மறையாக கருத்துக்களை நிறைத்து வைத்தார்.

நாதமாக, நலம் பயக்கும் கீதமாக அமையட்டுமே என்று வேதமாகவும் ஓதி வைத்தார்.

அதற்குப் பெயர் தான் திருக்குறள் என்று ஆனது.

இந்த அரிய பெரிய சீரிய முயற்சிகளுக்காகத்தான், வள்ளுவர் தனது 133 அதிகாரங்களில், முதல் அதிகாரமாக **கடவுள் வாழ்த்து** என்ற அதிகாரத்தைத் தந்தார்.

கடவுள் வாழ்த்து என்றதும், **கடவுளை வாழ்த்தித் தான் பாடினார்** என்று எல்லோருமே, விளக்கம் தந்து விட்டார்கள்.

***பன்னு தமிழ்த்தேர் பரிமேலழகன்*** எனும், மன்னும் உயர் நாமன் வந்து, திருக்குறளுக்கு உரையாக விரித்துரைத்தான் என்று ஏத்திப் புகழப்படுகிற பரிமேலழகரின் வழி தொடர்ந்து, ஏறத்தாழ எல்லோருமே, கடவுள் வாழ்த்து என்றே வழி மொழிந்து விட்டார்கள்.

கடவுள் வாழ்த்தை சிலர் ***முதல்வன் வாழ்த்து*** என்றனர். வேறுசிலர் ***அறிவன் சிறப்பு*** என்றனர். பெரியார் அவர்கள் ***பண்புச் சிறப்பு*** என்று தலைப்பு தந்தார்.

''கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தை, திருவள்ளுவர் தரவே இல்லை. அவரே அதிகார முறை வைப்புக்களை அமைத்தார் என்று கொள்ளுவ தற்கில்லை. வள்ளுவர் நூலை, பிற்காலத்தில் எடுத்து எழுதிய புலவர் பெருமக்கள், அதிகார முறை வைப்போடு விளங்கினால்தான் சிறக்குமெனக் கருதி, இதனை செய்திருக்க வேண்டும் என்று பல ஆய்வர்கள், தங்கள் கருத்தினை தெளிவு படுத்தி இருக்கின்றனர்.

இங்கே, நான் கடவுள் வாழ்த்து என்பதற்கு, ***சூரியன் வணக்கம்*** என்று பொருள் கொண்டிருக்கிறேன்.

வள்ளுவர் வாழ்ந்த காலத்தை, இன்றைக்கு 2000 ஆண்டுகட்கு முன்பு என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

***1921ம்*** ஆண்டு, சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில், தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி, பல நாட்கள் ஆய்வரங்கம் நடத்தி, இறுதியாக

ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது, கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர், 31 ஆண்டுகளுக்கு முன்பாக, வள்ளுவர் தோன்றினார் என்பதே அந்த ஆய்வு முடிவாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னதாக வாழ்ந்த மக்கள், உலகெங்கிலும் வாழ்ந்த மக்கள், சூரியனையே கடவுளாக, தெய்வமாக வணங்கி வந்தார்கள் என்று வரலாறு கூறுகிறது.

சூரியமதம் தான் எங்கும் நிலவி இருந்தது என்பதாக, வரலாற்றறிஞர்கள் விரித்துரைக்கின்றனர்.

சூரியனை பகவானாக, கடவுளாகத் துதித்து வழிபட்டார்கள் என்பதால், இதற்கும் மேலே பல பிரச்சினைகள், அதாவது பல வாக்கு வாதங்கள் ஏற்பட ஏதுவாகி இருக்கின்றன.

சூரிய வணக்கம் என்று நான் சொன்னவுடனே, என்னை நாத்திகன் என்றும், ஆத்திகர்கள் மனம் புண்படச் செய்வதற்கு நான் முயற்சிக்கிறேன் என்றும், பலர் நினைக்கலாம்.

நான் இங்கே நல்ல ஆத்திகனா? நாத்தழும்பேற வாதிக்கும் நாத்திகனா என்ற விவாதத்திற்குள் நுழைய விரும்பவில்லை.

எது நாடு, எவர் மக்கள், எது வீரம், எது கொடை, எது செல்வம், எது காதல், எது கற்பு, எது இழிவு, எது உயர்வு, எது அறம், எது திறம் என்று தெளிவாக மக்களுக்குச் சொல்ல வந்ததுதான் திருக்குறள் என்பதில், எந்த உரையாசியர்களுக்கிடையேயும் எண்ண பேதமில்லை.

எப்படி எழுதினார் என்பதிலும் கருத்து வேற்றுமை இல்லை.

உரையெழுதியவர்கள் எல்லோரும் ஒருகாலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். இருபது நூற்றாண்டுகளுக்கு, முன் தோன்றிய குறளுக்கு, 12 ம் நூற்றாண்டில் வாழ்ந்த பரிமேலழகர் உரை எழுதினார் என்பார்கள். கி. பி. 13ம்நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கூறுவர்.

இன்றைய இருபதாம் நூற்றாண்டிலும், நூற்றுக் கணக்கான தமிழ் அறிஞர்கள், திருக்குறள் தெளிவுரை, புதுவுரை, பதவுரை, பொழிவுரை என்று உரையெழுதினார்கள். எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏறத்தாழ எல்லா ஆசிரியர்களும், பரிமேலழகரைப் பின்பற்றியே எழுதிச் சென்றிருக் கின்றனர் என்பதையே நம்மால் உணர முடிகிறது.

இத்தகைய ஆய்வுகளுக்குள் நுழைந்து, எந்த உரை சிறந்தது? எந்த உரை எதிர்ப்புக்குரியது? மறுப்புக்குரியது என்பன போன்ற முயற்சிகளிலும், நான் முனைப்புக் காட்ட வில்லை.

பின் எப்படி நீங்கள், சூரிய வணக்கம் என்று சொல்கின்றீர்கள் என்று உங்களிடம் எழுகிற வினாவுக்கு, ஐயத்திற்கு விடையளிக்க வேண்டுவது எனது தலையாய கடமையாகும்.

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். இதைத்தான் தெய்வப் புலவர் தெளிவாகக் கூறி, வலிவாக வற்புறுத்தினார்.

மனிதத் தன்மையினை உணருகின்ற ஆற்றலே, ஒரு மனிதனுக்குத் தேவை என்பதை, துல்லியமாக

உணர்ந்த வள்ளுவர், மனிதத் தன்மையை புனிதத் தன்மையாக்கும் கொள்கை வேகத்துடன் பாடினர்.

சமுதாய மாற்றத்திற்கும் ஏற்றத்திற்கும் வழிவகை செய்து, வெற்றிகரமாக நடத்திச் செல்லக் கூடிய அறிவு, குறளுக்குள் இருக்கிறது.

***மனிதர்களில் மிகக் கீழோராக வாழ்பவருக்கும் உயர்வு உண்டு. நடுத்தர வாழ்க்கை வாழ்பவருக்கு, மேலும் மேலும் உயர்வு உண்டு. அதிலிருந்து வாழ்வில் உயர்ந்து கொள்பவருக்கும் மேன்மேலும் உயர்வு உண்டு.*** என்பதில் வள்ளுவர் தான் நம்பிக்கை கொண்டிருந்ததுடன், கற்கின்ற எல்லோருக்கும் அந்த எழுச்சி மிக்க நம்பிக்கை வளர வேண்டும், மலர வேண்டும் என்றே பாடினார்.

***தாழ்ந்தவர்களை சோர்ந்து போகாதீர்கள்*** என்று தன்னம்பிக்கை ஊட்டுகிற அதே நேரத்தில், உயர்ந்தோர்களாக இருப்பவர்களை, போதும் என்று நிறுத்தி விடாதீர்கள். ***மனித சக்திக்கு எல்லையே இல்லை*** என்ற கொள்கை முழக்கமே குறள் முழுவதும் கொட்டிக் கிடப்பதை, எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இந்த அடிப்படைக் கருத்துக்களை வைத்துக் கொண்டு, இந்த உலகத்தில் உலா வருகின்ற சக்திகளையெல்லாம் நான் நான்கு பிரிவுகளாகப் பிரித்துப் பார்த்தேன். தொகுத்துப் பார்த்தேன்.

அந்த நால்வகைச் சக்திகளை சற்று விரிவாகக் காண்போம்.

1. மனித சக்தி

2. அநித சக்தி

3. புனித சக்தி

4. பரம சக்தி

### 1. மனித சக்தி:

மனிதனாக மன்பதையில் தோன்றிய ஒவ்வொருவருக்கும், அடிப்படையாக ஒரு சக்தி இருக்கிறது.

அந்த சக்தியை அறிவு என்றும், திறமை என்றும் கூறலாம். அறிவை, படிப்பறிவு என்பர். பட்டறிவு என்பர். அதையே உண்மை அறிவு என்றும் உபாய அறிவு என்றும் நயம்படக் கூறுவர்.

மனிதன் என்ற சொல்லின் விளக்கமே நமக்கு வியப்பூட்டுகிறது. **மன்** என்ற சொல் சிந்திப்பவன் என்றும், நிலைத்திருப்பவன் என்றும் **மதன்** என்ற சொல், அழகுடையவன், வலிமையுடையவன், வளமை உடையவன் என்றும், அவ்வாறே **நிதமும்** வாழ்பவன் என்றபொருளில் மனித சக்தி விளங்குகிறது. இத்தகைய மனித சக்தி கொண்ட மானிடர்களைப் பார்த்துத் தான், மேன்மையாக்கும் வழிமுறைகளை வகுத்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

### 2. அநித சக்தி:

அநித சக்திக்கு அளவில்லாத சக்தி என்பது பொருள். மனித சக்தியை முறைப்படி, நெறிப்படி, முனைப்போடு தொடர்கின்ற உழைப்போடு பயில்கிற போது, அது அளவில்லாத சக்தியாகி பெருகி விடுகிறது.

அந்த ஆற்றல்மிகு அளவில்லாத சக்தியை வளர்த்துக் கொண்ட வல்லவர்களைத்தான், நாம் குரு என்கிறோம். ஞான குரு என்கிறோம். மோன குரு என்கிறோம். கடவுள் என்கிறோம்.

அநித சக்தியை வளர்த்துக்கொண்ட, தங்களுக் குள்ளே விளைத்துக் கொண்ட அளவில்லாத மனித சக்தியாளர்கள் தாம், இன்றைக்கு நமக்குத் தெய்வங்களாக, வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது பிறப்பு பற்றி, ஆயிரமாயிரம் கதைகளைக் கூறினாலும், அவர்கள் எல்லோருமே, ஒரு தாய்க்கு மகனாகப் பிறந்து, மக்களோடு மக்களாக வாழ்ந்து, மனிதர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டி, அக எழுச்சியை ஏற்றி, மேலோங்கிட வைத்த வித்தகர்களாவே வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

அவர்களில் சில தெய்வங்களின் பெயர்களைக் கூறுகிறபோது கோபப்படாமல், நிதர்சனமான உண்மையை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிய கண்டத்தில் வாழ்கிற மக்களுக்குத்தான் இறையுணர்வு அதிகம். மத உணர்வு அதிகம். ஆன்மீக உணர்வு அதிகம். எதையும் ஏற்றுக்கொண்டு, நம்பிக்கையில் நனைந்து, தம்மையே இழந்து ஒன்றிப் போவதும், ஒடுங்கிப் போவதும் அவர்கள் தாம்.

அதிகமான மதங்கள் ஆசியக் கண்டத்திலேதான் தோன்றி இருக்கிறது என்கிற உண்மை, நம்மை வியப்பில் ஆழ்த்தாது. அந்த மத நம்பிக்கை தான், நமக்கு வாழ்வாகிப் போய் விட்டதே!

இந்து மதம், சைவமதம், வைணவமதம், சன்மார்க்க மதம், புத்தமதம், சமண மதம், பார்சி மதம், இஸ்லாமிய மதம் கிறித்துவமதம் போன்ற பலமதங்கள், ஆசியக் கண்டத்தில்தான் அவதாரம் எடுத்திருக்கின்றன.

மதங்களைத் தோற்றுவித்த மகான்கள் எல்லாம், மனிதப் பிறவி கொண்டு, மக்களோடு மக்களாக வாழ்ந்து, மனிதர்களை வழி நடத்தி, மரணமடைந்து விட்டவர்கள் என்பதை மட்டுமே இங்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மதங்களைப் பிறப்பித்த மகான்கள் எல்லோரும், மனித சக்தியை புனித சக்தியாக மதித்து, துதித்து, தங்களுக்குள்ளே அநித சக்தியை வளர்த்துக் கொண்டவர்கள் தாம்.

### 3. புனித சக்தி:

புனித சக்திக்கு, இயற்கையின் ஐம்பூதங்கள் தாம் சான்றாகத் திகழ்கின்றன. சூரியன், காற்று, தண்ணீர், நெருப்பு போன்ற சக்திகள் எல்லாம், எல்லா மனிதர்களுக்கும் பொதுவாக இருந்து, தேவைகளுக்கு உதவும் சேவைகளை செய்து வருவதால், அவற்றை புனித சக்தி என்கிறோம்.

இத்தகைய சக்திதான், மக்களிடம் இருக்கின்ற மனித சக்தியை வளர்க்கவும், அதனுள்ளே அநித சக்தியை அதிகப்படுத்தவும், அணுவாக இருந்தும், அகலாது திரிந்தும், உடன் வந்து மறைந்தும், நிறைந்தும் உதவிக் கொண்டு வருகின்றன.

இப்படிப்பட்ட புனித சக்திகளுக்குள்ளே பெரும் சக்தியாகவும், அரும் சக்தியாகவும் விளங்குவது

பகவன் என்கிற சூரியன் தான்.

பகவன் என்ற பதத்திற்கு குரு என்றும், சூரியன் என்றும், கடவுள் என்றும் பொருள் உண்டு.

கடவுள் என்றாலும் பகவன், குரு, தெய்வம் என்றும் அர்த்தங்கள் உண்டு.

ஆகவே, கடவுள் வாழ்த்து என்றாலும், குருவணக்கம் என்றாலும், தெய்வத் துதி என்றாலும், அவையெல்லாம்சூரிய வணக்கம் என்பதைத் தான், இங்கே சுட்டிக் காட்டுகின்றன.

சூரிய வணக்கம் என்று இங்கே நாம் சுற்றிக் சுற்றிச் சொல்வதற்கும், சுட்டிச் சுட்டி எழுதுவதற்கும், அடிப்படைக் காரணம், சூரியனின் சுடர் மிகு ஆற்றல்களால்தான்.

பகவன் என்பதை பகவு+அன் என்று பிரிப்பார்கள். பகவு என்பதற்கு பிரிவு என்று பொருள் கூறுவார்கள். பகவனான சூரியனை பிரிப்பவன் என்றால், அது பிழையல்ல. பொருத்தமே.

பகவனான சூரியன் வந்த பிறகு தான், உலகத்தில் பகல் என்றும் இரவு என்றும் இரண்டு நிலை வந்தது.

சூரியன் தோன்றிய பிறகுதான், வெப்பம் என்றும் குளிர் என்றும், இரண்டு நிலை உருவானது.

சூரியன் தோன்றிய பிறகு, மனித உயிர்களுக்கும், தாவர இனங்களுக்கும் எழுச்சி தோன்றியது. தாவரங்கள் வளர, அவை 'ஸ்டார்ச்சு' என்ற சத்துநிலையைத் தயாரித்துக் கொண்டுதான் தழைத் தோங்கின.

சூரிய ஒளி மூலம் தண்ணீரையும் கரியமில வாயுவையும் சேர்த்துக் கொண்டு, பச்சை இலை தழைகள், மாவுச்சத்தை (Starch) ஒளிச்சேர்க்கை மூலம் (Photo Synthesis) செய்கின்றன.

அதன் காரணமாக, தாவரங்கள் கரியமில வாயுவை உள்ளிழுத்துக் கொண்டு, பிராணவாயுவை வெளியே விடுகின்றன.

அந்தப் பிராணவாயுவைத்தான், மக்கள் சுவாசித்துக் கொண்டு உயிர் வாழ்கின்றனர். நமக்கு உயிர் பிச்சையை, தாவரங்கள் மூலமாக, சூரியன் வழங்கி விடுகின்றது.

தாவரங்களையும் வளர்த்து, மனிதர்களையும் உயிர்வாழச்செய்கின்ற சேவைதான், இன்றும் மேன்மை மிக்கதாக விளங்குகிறது.

மனிதர்களது தோல்புறத்தில் சூரிய ஒளி விழுகிற போது, அந்த சூரிய ஒளியும் தோல் பகுதியும் சேர்ந்து கொண்டு, வைட்டமின் D எனும் உயிர்ச் சத்தை உண்டாக்கி விடுகின்றன.

வைட்டமின் D யானது, கால்சியத் சத்தாகும். கால்சியச் சத்தானது, உடலில் உள்ள எலும்புகளுக்கு வலிமையாக்குகின்ற வரப்பிரசாதத்தை வழங்கி விடுகிறது.

எலும்புகள் வலிமை பெறுவதால், தேகம் நிமிர்ந்து நிற்பது மட்டுமல்ல. எலும்பு மூட்டுக்களில் உள்ள **எலும்பு மஜ்ஜை** என்கிற எலும்புச் சோற்றில் பிறக்கும் சிவப்பு இரத்த அணுக்களும், வெள்ளை ரெத்த அணுக்களும், வளமானதாகத் தோன்றுகின்றன.

இதனால் இரத்தம் செழுமையடைகிறது. செழுமையான இரத்தம் உயிர்க்காற்றின் வேகத்தால், உடல் முழுதும் உள்ள அனைத்து செல்களுக்கும் போய்ச் சேர்வதால், உடல் நலமாக வாழ்கிறது. வலிமையுடன் செயல்படுகிறது. திறமாக நடைபோடுகிறது.

இவ்வாறு, சூரியன் வந்த பிறகுதான், பூமியில் தாவர இனம் செழித்தது போல, மானிட இனமும் மலர்ச்சியும் எழுச்சியும் பெற்றது.

இப்படியெல்லாம் மனித குலத்திற்கு உதவியதால்தான், உலக மக்கள் எல்லாம் சூரிய வணக்கம் செய்தனர். சூரிய மதத்தை உண்டாக்கினர். சூரிய வழிபாடே எங்கும் நிறைந்திருந்தது.

இப்போது நாம், ஒரு தெளிவான முடிவுக்கு வருவோம்.

1. கண்ணுக்குத்தெரியாத சக்தி ஒன்று இருந்து கொண்டு, உலகை இயக்கி வருகிறது. கண்ணுக்குத் தெரியாத சக்தி என்று நம்புவதை ஆத்திகம் என்கின்றனர். மறுப்பதை நாத்திகம் என்கின்றனர். நம்புவதும் மறப்பதும் அவரவர் உரிமையாகும்.

ஆனால், பஞ்ச பூதங்களை நாம் ஆராய்ந்து பார்க்கிறபோது, ஏதோ ஒரு பெரிய சக்தி இருக்கிறது என்று நாம் தேர்ந்து ஒரு முடிவுக்கு வந்து, தெளிவு கொள்கிறோம். அந்த சக்தியைத் தான் எல்லா மதங்களும் பரம் என்று பேசுகின்றன. பிரமம் என்று புகழ்கின்றன. பரமபிதா என்ற போற்றுகின்றன. எல்லா மதத்தினரும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

2. கண்ணுக்குத் தெரிகின்ற சக்தியுடன், கலந்து போகமுடியாதது மனித சக்தி என்று நாம் கொள்கிற போது, கண்ணுக்குத் தெரியும் அந்த புனித சக்திகளால், பெருமளவு பயனடைவதைத்தான், அங்கே நாம் உணர முடிகிறது.

கண்ணுக்குத் தெரிந்தாலும், அவை மண்ணுக்கு வந்தாலும், அந்த புனித சக்தியினைப் போற்றிப் பயன் பெற முடிகிறதே தவிர, ஏற்று இணைந்து, தொடர்ந்து உறவாடி வாழ முடிவதில்லையே!

ஆகவே, புனித சக்தியாக விளங்கும் சூரியனைப் போற்றுகிறோம். அந்த தெய்வ சக்தியை, அதன் தொடர்பான காற்று, கனல், புனல் இவற்றையும் போற்றி ஏற்றுக் கொள்கிறோம்.

இப்படிப்பட்ட புனித சக்திகள் தாம், மனித சக்தியை, மிகுதிப் படுத்தி வாழ உதவுகின்றன.

4. *பரமசக்தி:* மிக மேன்மையான சக்தி இது என்றே கூறலாம். ஆத்மா என்றும் கூறலாம். நமக்கு ஆத்மா என்பது உயிர்க்காற்று. பிராண வாயு. உடல், மனம், ஆத்மா என்று நம் உடல் பிரிந்துள்ளது.

உலக வாழ்க்கைக்கு எது உதவுகிறதோ, உழைக்கிறதோ அதற்குப்பெயர் உடல்.

உடலின் உழைப்புக்கு, இயக்கத்திற்கு, செயலூக்கத்திற்கு எது ஆணையிடுகிறதோ, ஆறுதல் ஆனந்தம் போன்ற அனைத்தையும் தருகிறதோ, அதற்கு மனம் அல்லது உள்ளம், அல்லது மூளை என்று பெயர்.

உற்சாகமாக உடல் உழைக்கவும், உத்வேகத்துடன்

கட்டளை இடவும் கூடிய மூளைக்கும், எந்த சக்தியானது ஆற்றுப் படுத்துகிறதோ, அதுதான் ***ஆற்றுமா*** ஆகிறது. அதுதான் ஆத்மாவாகி விட்டது.

இந்த ஆத்ம சக்திதான் பரம சக்தியாக விளங்குகிறது. ஆத்மாவைப் பற்றிய ஆயிரம் விளக்கங்கள், கதைகள், கற்பனைகள் போன்றவை களை இங்கே நாம் எண்ணவே வேண்டாம்.

உயிர்க்காற்றானது உடலுள் பரவிக் கிடக்கிறபோது அது ஆத்மா. ஆத்மா உடல் முழுதும் குறைவற நிறைந்து கிடக்கும் போது பெறுகிற நிறைந்த சக்திதான பரம சக்தி.

பரமசக்தி தான் சும்மா கிடக்கும் மனித சக்தியைத் தெளிவாக்கி, அநித சக்தியாக வளர்த்து, புனித சக்தியாக உயர்த்தி, உலகில் மேம்பட வைக்கிறது.

பரம சக்தியை அடைபவரைத்தான் பரம்பொருள் என்ற அளவில், மக்கள் பாராட்டுகிறார்கள். போற்றிப் புகழ்கின்றார்கள். ஏற்றுத் தொழுகின்றார்கள்.

அநித சக்தி யானது, பரமசக்தி போல் உடலுக்குள் மறைந்து கிடக்காமல், புனித சக்தி போல், கரம் பற்ற இயலாதவாறு, கலந்து கிடக்காமல், விழிகளுக்கு முன்பு விருந்தாக, மொழிகளுக்கு முன்பு மருந்தாக, வாழ்க்கைக்கு முன்பு ஒளியாக வழி நடத்தும் வழியாக உடனிருந்து உலாவி, உரையாடி, ஒன்றாகி வாழ்கின்ற சக்தியைத்தான் காண்கிறோம்.

அருகில் இருந்து அளவளாவி ஆன்ற ஞானத்தைப் போதித்து; தங்களைப் போல, வாழும் மனிதர்கள் யாவரும், வளத்தோடு வாழ வேண்டும் என்று வாழ்விக்கிற மோன குருக்களைத் தான் அநித

சக்தியளார்கள் என்றும், பரம சக்தியாளர்கள் என்றும் இங்கே நாம் குறித்திருக்கிறோம்.

மனிதர்கள் எல்லோரும் மாபெரும் சக்தியாளர்களாகத் திகழ வேண்டும், மகிழ வேண்டும் என்ற இலட்சியத்தில்தான், தனது முதல் குறளையே, சூரியனின் பெருமை பற்றி, பாடி, தன் வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார் வள்ளுவர்.

மனித குலத்தை வாழ்விக்கின்ற வகையில், வலிமையை, வழங்கி, உயிர்காக்கும் செயலில் சிறப்பாகப் பணியாற்றும் சூரியனைப் புகழ்ந்து பாடி; எங்கள் மனித குலத்திற்கு தொலை தூர குருவாக விளங்குவது போல, கூட இருந்து உயிர் வாழ்ந்து காக்கின்ற குருமார்களையும் தொடர்ந்து வருகிற ஒன்பது குறள்களிலும் பாடி, தான் கூறப்போகும் ஒழுக்கப் பண்புகளை யெல்லாம் மலர்ச்சி பெறுகின்ற மனித இனமாக மக்கள் மாற வேண்டும் என்பதால்தான், முன் கூட்டியே, நல்ல ஒரு நல்வழியைக் காட்டி விடுகிறார்.

அநித சக்தி நிறைந்த மோன குருதான், வாழ்வுக்கு ஒளியும், வழியும் காட்டி வாழ்விக்க முடியும் என்பதற்காகவே, சூரியனை வாழ்த்திப் பாடியதற்குப் பிறகு, மற்ற ஒன்பது குறள்களையும் பாடி இருக்கிறார்.

மனிதனுக்கு கல்வி கற்பது என்பது தலையாய கடமை. அவ்வாறு கற்றுத் தெளிகிற கல்வி அறிவின் மூலம், தனக்கு சிறந்த வழியைக் காட்டுகின்ற ஒரு சிரிய குருவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாக, முதலில் வழியைக் காட்டுகின்றார்.

நல்ல குருவைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து தான், ஒருவனது வாழ்வு உயர்வு பெற முடியும். தவறாக ஒரு குருவைத் தேர்ந்தெடுத்து விடக் கூடாது என்பதால் தான், கற்றதனால் ஆய பயன், ஒரு சிறந்த ஞான குருவைத் தேடிக் கண்டுபிடித்து, தேர்ச்சி பெற வேண்டும் என்று முதலில் குறிக்கின்றார்.

நல்ல குருவைத் தேர்ந்தெடுத்த பிறகு, அவரது மாணடியான மாண்பு மிகு ஞானத்தினை, உள்ளத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்கிறார்.

ஞானம் பெறுகிற போது, துன்பம் வராது. இருவினையும் சேராது. நிலமிசை நீடுவாழ முடியும் என்பதனை, உறுதியாக உறுதியாக்கிக் கூறுகின்றார்.

குருவின் ஞான வழிதான் மனக்கவலைகளை மாற்றும், பொறிவாயில் ஐந்தினையும் அடக்கியுள்ள குருபோல் வாழ்வில் நிலை பெறுகிற போதுதான் மனக் கவலையை மாற்ற முடியும் என்று மன வலிமையை வளர்த்துக் கொள்ளச் சொல்கிறார்.

பிறகு, வருகிற மூன்று குறள்களிலும், பிறவாழியை நீந்துகின்ற ஆற்றல்களுக்கு, பொறிகளின் தன்மையை வென்று, அதன் மூலம் பெறும் பேறுகளுக்கு, பிறவியில் தோன்றுகின்ற வாழ்க்கைக் கடலை எளிதாக நீந்திக் கரை சேர்வதற்கு, குருவின் திருஞானம் கைகாட்டிக் கூறுவது - மனவலிமைக்கு உதவுகின்ற உடல் வலிமையையும் வளர்த்துக் கொள் என்பதுதான்.

மனிதர்களின் கடமை, நல்ல குருவைத் தேர்ந்தெடுப்பது, அவர் ஞானத்தைத் தொழுது ஏற்றுக் கொள்வது; போற்றி அந்த ஞான வழியில் நடப்பது;

குருவிடம் உள்ள அரும் பண்புகளை அடியொற்றி வாழ்ந்து கற்றுத் தெளிவது; அவரைப் போலவே ஐம்பொறிகளையும் அடக்குகின்ற ஆற்றலைப் பெறுவது. அகத்துக் குள்ளே அலை பாய்ந்து கிடக்கும் கவலைகளை மாற்றிவிடுவது, அவரோடு கூடவே மற்ற மனிதர்கள் போல அமிழ்ந்து போகாமல், நீண்ட வாழ்க்கைக் கடல் நீச்சலையும் தளராமல் செய்து, வெற்றி பெறுவது என்பதையெல்லாம் சொல்லுவது - மனித சக்தியை அநித சக்தியாக மாற்றிட கூறும், மணியான மார்க்கம் என்பதால்தான், முதலில் மனித குலத்திற்கு வழி காட்ட வேண்டும் என்று, மோன குருதேவர்களைப் புகழ்வதன் மூலம், புற இருளை நீக்குகின்ற சூரியன் போல, அக இருளை நீக்குகின்ற வாலறிவன்களிடம் மனிதர்களை ஆற்றுப் படுத்துகின்றார்.

துணையில்லாத பயணம் துன்பம் தரும். வழிதெரியாத முயற்சி தோல்வி பெறும். ஞானமில்லாத வாழ்வு வீணாய் விடும்.

அதற்காகவே, புற இருளைப் போக்கும் சூரியனைப் போல, அக இருளைப் போக்கும் சூரியனாக, குருவைக் காட்டுகின்றார். அதன் தெளிவுதான், சூரிய வணக்கம் என்று வாழ்த்துப் பாடியதாகும்.

இறுதியாக ஒன்று.

அகர முதல எழுத்தெல்லாம் என்ற வரியில், அளிக்கப்பட்ட கருத்து. அகரமானது, எல்லா மொழிகளிலும் உள்ள முதல் எழுத்து. அடிப்படை எழுத்து. அந்த அகரமானது, எழுத்தாகி, ஒலியாகி வருகிறபோது, ஏற்படுகிற எல்லா எழுத்துக்களிலும்

தெரிந்தும், மறைந்தும் வருகிறது.

எழுதப்படுவதால் எழுத்து என்றனர்.

எழுத்துக்கள் பல இணைந்து சொல்லாகின்றன.

சொற்கள் எல்லாம் பலவிதமான பொருளைத் தெரிவிக்கின்றன.

இப்படி எழுந்த எழுத்தும், சொல்லும், பொருளும் சேர்ந்து ***இலக்கியமாகின்றன. இலக்கணமாகின்றன.***

மக்களின் வாழ்க்கையை மகிமைப்படுத்தும் முகத்தான் பிறந்த இலக்கணமும் இலக்கியமும், மேலும் மலர்ந்து வளர்ந்து, மக்களை இன்பப்படுத்துவது மட்டும் போதாது என்று, நல்ல ஒழுக்கமான வாழ்க்கையைக் கற்றுத்தெளிவாக்குகின்ற ***மறையாக*** மாறியது. ***வேதமாக*** விளைந்தது. ***சுருதியாக*** ஒலித்தது.

எழுத்துக்கள் எல்லாம் இப்படி மனித குலத்தின் மதிப்பு மிக்க வாழ்க்கையை, சிறப்பு மிக்க வாழ்க்கையாக மாற்றி அமைத்திட முனைந்தன.

எழுத்துக்கள் என்றதும், நமக்கு நினைவுக்கு வருவன உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து ஆகும்.

இந்த மூன்று வகையெழுத்தையும், பிங்கல நிகண்டு எழுதிய பிங்கல முனிவர் எப்படி எடுத்துரைக்கிறார் பாருங்கள்.

*1. எழுத்தெனப் படுபவை ஆண் பெண் அலியே (பிங்கலம் 1357)*

*அதற்குரிய விளக்கம்:* எழுத்தென்று சொல்லப்படுவன ஆண், பெண், அலி என மூன்று வகைப்படும்.

அவற்றுள் **ஆண்பால் எழுத்து:** அகர முதல் ஔகாரம் இறுதியாகிய உயிரெழுத்துக்கள் பனிரெண்டும் ஆண்பால் எழுத்துக்களாம்.

***உயிர் பன்னிரண்டும் ஆணெனப்படுமே*** *(பிங்கலம் 1358)* என்கிறார் பிங்கலர்.

***பெண்பால் எழுத்து:*** உயிர் மெய் எழுத்துக்கள் இரு நூற்றுப் பதினாறும் பெண் எழுததுக்கள் என்பதை பாடுகிறார்.

***உயிர்மெய் எல்லாம் பெண்ணெழுத் தென்ப*** *(பிங்கலம் 1359)*

***அலி எழுத்து:*** மெய்யெழுத்துப் பதினெட்டும் அலி எழுத்தாகும்.

***ஒற்றெழுத்தெல்லாம் அலி எனப்படுமே*** *(பிங்கலம் 1360)*

எழுத்துக்கள் எல்லாம் ஆண், பெண், அலி இனம் என்று குறிக்கப்படுவது போலவே; உலகு என்ற சொல்லானது மக்களைக் குறிப்பதால், மக்களிலும் ஆண், பெண், அலி என்று மூன்று வகை மக்களைக் காட்ட வருகிறது.

எழுத்தும் மூன்று வகை. மக்களும் மூன்று வகை.

அகரத்தால் மூன்று வகை எழுத்துக்களும் சிறப்பு பெறுகின்றன.

வாயைத் திறந்தவுடன் அகரம் காற்றான **அருவமாக** வெளிவருகிறது. அதற்கு ஓசை சேர்ந்தவுடன், ஒலியான **உருவமாகி** விடுகிறது.

ஆதவனால், மூன்று வகை மக்களும் சிறப்பும் செழுமையும் பெறுகின்றனர். ஒளியால் புற இருள் போகிறது. அதன் அருளால் மனித உடல் மாட்சி பெறுகிறது.

இப்படி அகரமும் ஆதவனும், மக்களின் உடலை மேம்படுத்தவும், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் உதவுகின்றன என்பதால் தான், சூரிய வணக்கம் என்று போற்றிப் பரவிபாடியிருக்கிறார்.

இன்றும் சூரிய நமஸ்காரம் என்ற யோகப்பயிற்சி தொடர்கிறது. அது, சூரியனை வணங்க வணங்க, உடல் வலிமையையும் நுண்மை சக்திகளையும் நிறைய தருகின்றது என்பது அனுபவ வாயிலாக அறிந்த பேருண்மையாகும்.

இவ்வாறு மனிதர்களை, அளவில்லாத சக்தியாளர்களாக்கி, ஆன்ற ஞானம் பெற்றுத் திகழ்கிற தெய்வ மக்களாக விளங்க வேண்டும் என்ற பாசத்துடன் பாடிய குறள்களே, திருக்குறள்கள் ஆயின.

மனிதர்களில் யாராவது சிலர் தெய்வ மக்களாக வருவார்கள் என்று தேடிய, திருமுயற்சிதான், தெய்வத் திருக்குறளாக மலர்ந்தது. அவர் தேடிய முயற்சிகளுக்கு, பயன் கிடைத்ததா?

அவரது தீர்க்கதரிசனம் மக்களுக்கு தூய சக்தியைத் தந்ததா? யாராவது சிலர், தெய்வ நிலைக்குத் தேறினார்களா? குறட்பாக்களின் கூர்மையான ஞானம், நேர்மையான சமுதாயத்தை

அமைத்ததா? வள்ளுவர் காட்டிய உள்ளம் கவர் வழியில், கற்ற எல்லோரும் நடந்தார்களா? தொடர்ந்தார்களா? சிறந்தார்களா? இல்லை கற்றபின் மறந்தார்களா என்பன போன்ற கேள்விகளுக்கு காலம் தான் பதில் கூற வேண்டும்.

***வள்ளுவர் நல்ல மனிதர்களைத் தேடினார். தெய்வ மனிதர்களைத் தேடினார்.***

அவர்களே அவர் வணங்கும் கடவுளாயினர்.

தெய்வப்புலவர் தன்னைப் போல எல்லோரும் வரவேண்டும், வாழ வேண்டும் என்று பாடினார்.

தமிழ்ச் சமுதாயம், தன்னிகரில்லா இந்தத் தமிழ் மறையை தெளிவுறக் கற்று, தெய்வநிலை அடைய வேண்டும் என்று எதிர்பார்ப்போடு பாடினார்.

இந்த எண்ண எழுச்சியின், இனிய நோக்கத்தில் தான், என் ஆய்வு முயற்சியைத் தொடர்ந்தேன்.

எனது எழுத்துக்கள் உங்களுக்கு உற்சாகம் ஊட்டியது, உயர்வு பெற வேண்டும் என்ற உந்துதலை ஊட்டியது, அதற்கான ஆக்கப்பணிகளிலே உழைக்கத் தூண்டியது என்றால், நான் மிகவும் மகிழ்ச்சி யடைவேன்.

வள்ளுவர் வணங்கிய கடவுளாக, உயிர் வாழ்ந்த மனிதர்களில் உன்னதமானவர்களே விளங்கினார்கள் என்று அறிகிறபோது, மனிதன் புனிதனாக முடியும், பூவுலகும் வணங்குகிற இனிதனாகவும் முடியும் என்ற நம்பிக்கை நமது இதயவானிலே உதயமாகி ஒளிர்கின்றது.

மனிதர்களில் தெய்வத்தைத் தேடிய திருவள்ளுவர் முயற்சி போலவே, வாசகர்களின் மனதிலே மகிழ்ச்சியைத் தேடுகிற முயற்சியாக இந்நூலை உங்கள் கரங்களில் படைக்கிறேன்.

***பயன் பெறுக, புகழ் பெருக, பாரில் நீடு வாழ்க*** என்று வாழ்த்துகிறேன். வாழ்த்துவதில் மகிழ்கிறேன். வழிகாட்டுவதற்கு வாய்ப்பு கொடுத்த வள்ளுவரின் மாணடிகளைப் பணிந்து, வான்புகழ் வள்ளுவரின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் நல்லுலக மக்களாக நீங்கள் திகழ வேண்டும் என்று கேட்டுக் கொள்வதில் பெருமையடைகிறேன். பேரின்பம் பெறுகிறேன்.

அன்புடன்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

# வள்ளுவர் வணங்கிய கடவுள்



பல்கலைப் பேரறிஞர்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI